Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37
கதிர் : 58

ஞாயிற்றுக்கிழமை
23 ஜனவரி 2022

தை 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 32+I,II

செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

விலை: 40/=



முச்சந்தி முரளி

"அப்ப தமிழருக்கு அரசியல் தீர்வு அத்தியாவசியம் இல்லை எண்டு உவையள் நினைக்கினம் போல"

# அரசியல் தீர்வை விட அத்தியாவசிய தேவைகள் குறித்தே முதலில் பேச்சு

## கூட்டமைப்புடனான சந்திப்புத் தொடர்பில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச விளக்கம்



யாழ்ப்பாணம், ஜனவரி 23

அரசியல் தீர்வு மாத்திரம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் அல்ல. அதைவிட அவர்களின் அத்தியாவசிய தேவைகளைத் தீர்ப்பதே முக்கியம். அவற்றைத் தீர்த்து வைப்பது தொடர்பிலேயே முதலில் நாம் கவனம் செலுத்துகின்றோம். இவ்வாறு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

31 ➤

ஜனாதிபதியுடன் பேச்சு

## குழப்ப விரும்பவில்லை ஏமாறவும் தயாரில்லை!

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 23

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடனான பேச்சை நாம் குழப்பவும் விரும்பவில்லை. அதேவேளை ஏமாறவும் தயாரில்லை. சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேச்சில் பங்கேற்பதா என்பதை நாம் பரிசீலித்து

31 ➤

## இலங்கையிலுள்ள தமிழக படகுகளுக்கு இழப்பீடு

சென்னை, ஜன. 23

இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்ட விசைப் படகுகளின் உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். தமிழக அரசு நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில், இலங்கை அரசால்

31 ➤

## 13 ஆம் திருத்தத்துக்கு எதிரான பரப்புரைப்போர்

### யாழ்ப்பாணத்தில் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஜன. 23

13ஆம் திருத்தத்துக்குள் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை - அரசியலை- முடக்கும் சதி முயற்சியை முறியடிக்க அணிதி

31 ➤



## செவ்வாய் வரை மின்வெட்டு இல்லை

கொழும்பு, ஜன. 23

நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமைவரை மின்வெட்டை நடைமுறைப்படுத்துவதற்கான

31 ➤

## தொடரும் காஸ் அடுப்பு வெடிப்பு

வவுனியா, ஜன. 23

வவுனியா உக்கிளாங்குளம் திருவள்ளுவர் வீதியில் அமைந்

31 ➤

## மேலும் 75 பேருக்கு ஒமிக்ரோன் தொற்று

கொழும்பு, ஜன. 23

இலங்கையில் 75 புதிய ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்

31 ➤

## வடக்கு, கிழக்கில் விகாரைகளை பாதுகாத்த கோத்தாவுக்கு பாராட்டு

கொழும்பு, ஜன. 23

வடக்கு, கிழக்கில் உள்ள விகாரைகளைப் பாதுகாத்து, நாட்டுக்கு உரிமையாக்குவதற்கு கடந்த இரண்டுவருடங்களில் ஜனாதிபதி மேற்கொண்ட நடவடிக்கைகளை பாராட்டுவதுடன் அது குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும் என்று மஹா சங்கத்தினர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்

31 ➤

TRIPLE BLASTER
இப்போது புதுப்பொழிவுடன்!
Dialog முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு
எந்தவொரு வலையமைப்பிற்கும்* 1,000 நிமிடங்கள் 1,000 SMS
Anytime Data 1.5GB
மாதத்திற்கு ரூ.498/-
(மேலதிக வரிகள் இல்லை)
செயற்படுத்தல் ரூ. 498/- இனை ரீலோட் செய்வதன் மூலம் அல்லது MyDialog App மூலம்
Dialog
எதிர்காலம் இன்றே.
TRC/D/PRO/21/09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எரிபொருள்களை விரயமாக்காதீர்கள்

## உதய கம்மன்பில கோரிக்கை



**கொழும்பு, ஜன. 23**

**எரிபொருள்களின் விலைகள் தற்போது உயர்த்தப்படாது என்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

சீதாவாக்க பிரதேசத்தில் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது உலக சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலை 89 டொலராகக் காணப்படுகின்றது. ஏழு ஆண்டுகளின் இவ்வாறு விலை உயர்வு பதிவாகியுள்ளது. இலங்கையில் மாதமொன்றுக்கு எரிபொருள் கொள்வனவு செய்ய 500 மில்லியன் டொலர் தேவைப்படும். அதேவேளை, ஏற்றுமதி வருமானம் 750 டொலராகக் காணப்படுகின்றது. நாட்டு மக்கள் இந்த நிலைமைகளை புரிந்துகொள்ளவேண்டும். மக்கள் எரிபொருள்களை சிக்கனமாக பயன்படுத்தவேண்டும். ஒரு லீற்றர் டீசலில் அரசாங்கத்துக்கு 30 ரூபா நட்டம் ஏற்படுகின்றது.

நன்றாகச் சாப்பிட்டு, குடித்துவிட்டு உணவை விரயமாக்கி அவற்றை குப்பைக் கூடையில் வீசிக் கொண்டே மக்களிடம் சிக்கனமாக இருக்க வேண்டும் என்று கோரினால் அதனால் மக்களுக்குக் கோபம்வரும். அதனால் சிக்கனம் என்பது அரசியல்வாதிகளிடமிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் - என்றார். (எ-இ)

## சந்திரசேகரப் பிள்ளையார்ஆலய கும்பாபிஷேகம்!



நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.32 முதல் 11.22 மணிவரை இடம்பெறவுள்ளது. மகா கும்பாபிஷேக கர்மாரம்பம் கடந்த புதன்கிழமை காலை 5.30 மணிக்கு ஆரம்பமானது. காலை 6.45 மணிக்கு ஆலயத்தின் மேற்குப்புற வாசல் அலங்கார வளைவு திறப்பு விழாவும், கலாசார மண்டப புகுவிழாவும் நடைபெற்றன. (எ-இ)

# மரண அறிவித்தல்

பிறப்பு 26 . 06 . 1937



இறப்பு 20 . 01 . 2022

## தம்பையா பொன்னம்பலம் பொன்னர்

**(நில அளவையாளர்)**

காரைநகர் கொல்லடப்பை பிறப்பிடமாகவும் (கப்பம்புலம்) யாழ்ப்பாணம் மானி வீதி, நாலுகால்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா பொன்னம்பலம் (நில அளவையாளர்) அவர்கள் கடந்த (20.01.2022) அன்று சிவபாதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா முதலியம் அவர்களின் அன்பு மகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சின்னப்பிள்ளையின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நமசிவாயம் - பராசத்தி, காலஞ்சென்ற தில்லையம்பலம் - சரஸ்வதி, பரமநாதன் - சியாமளா ஆகியோரின் மைத்துனரும், வசந்தகுமார் (டென்மார்க்), கணேசகுமாரி (கொழும்பு), கிருஷ்ணகுமாரி (கனடா), கிருஷ்ணவேணி (லண்டன்), யோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமாரன் (டென்மார்க்), சிவபாதம் (கொழும்பு), சிறிகந்தராஜா (கனடா), மகேந்திரம் (லண்டன்) நந்தகுமாரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், டெபோரா, ரோய் (டென்மார்க்), கௌரிசங்கர், சிவசங்கர், காயத்திரி (கொழும்பு), நிலேஸ், கிருஷா, நிலக்ஸன் (லண்டன்), அர்ஜீன், அபிராமி (கனடா) ஆகியோரின் அன்பு அம்மப்பாவும், காலஞ்சென்றவர்களான நடராசா, பழனிஆண்டி (நில அளவையாளர்), தர்மலிங்கம் (ரீ மேக்கர்), நாகம்மா, யோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை அவரின் இல்லத்தில் நாளை (24.01.2022) காலை எட்டு மணிக்கு நடைபெற்று முற்பகல் 10.00 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நாலுகால் மடம்,
ஆனைக்கோட்டை,
மானிப்பாய்.

தகவல் : மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
கிங் மோட்டார்ஸ்

(CS 42389) (3/6)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் தியாகராஜா

**(ஓய்வுபெற்ற அலுவலக உதவியாளர் - கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)**



பிறப்பு 17.07.1933

இறப்பு 22.01.2022

நல்லூரைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம் பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் தற்போது திருநெல்வேலியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தியாகராஜா நேற்று (22.01.2022) சனிக்கிழமை காலமனார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் செல்லம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற கந்தையா - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், ஜெயலக்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தியாகலிங்கம், பரமநாதன் மற்றும் ஏகாம்பரம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தவமணிதேவி, கமலாம்பிகை சோதிமணி, காலஞ்சென்ற இந்திராணி ஆகியோரின் அன்புக்குரிய மைத்துனரும், சறோஜாதேவி (டென்மார்க்), தட்சணாதேவி, சுலக்சினிதேவி, இராஜவரோதயம், சயந்தினிதேவி (பிரான்ஸ்), இந்துவதனி, பாலகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதனராஜா (டென்மார்க்) சிவமூர்த்தி, மோகனதாஸ் (பிரான்ஸ்), சூரியன், டிலீசியா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தரணிகா-செங்கோடன், காயத்ரி, கம்ஷாயினி (பிரான்ஸ்), பவீந்திரன் - துஷ்யா, சாயிசங்கர், கௌரிசங்கர், உமாசங்கர், கஜலக்ஷி, நிலக்ஷி (லண்டன்), டிலுக்சி (லண்டன்), வரோஷன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும், ருத்ராக்ஷன், ஆருத்ஷன், கஜனிகா ஆகியோரின் பேரன்புக்குரிய பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருநெல்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகள்: 074 174 4152
076 988 1217

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தேசிய இனப்பிரச்சினைக்கு வாக்கெடுப்புத்தான் தேவை!

## சிவாஜிலிங்கம் கோரிக்கை



**யாழ்ப்பாணம், ஜன. 23**

**இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பொதுஜன வாக்கெடுப்பை நடத்தவேண்டும். அதைச் செய்யாமல் கொள்கை விளக்கஉரை தொடர்பில் கதைத்துக்கொண்டிருப்பதால் பயனில்லை என்று தெரிவித்தார் தமிழ் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரான எம்.கே.சிவாஜிலிங்கம்.**

யாழ். ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையை இன்னும் எத்தனை நாள்களுக்குத்தான் கூறிக்கொண்டு இருக்கப் போகின்றோம். எல்லாவற்றுக்கும் ஒரு முடிவு எடுக்க வேண்டும். 2025ஆம் ஆண்டிலும் கொள்கை விளக்க உரையைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தால் எங்களை விட முட்டாள்கள் எவரும் இல்லை.

காணாமற்போனோர் விவகாரம் எல்லோருக்கும் பொதுவானது என்று ஜனாதிபதி கூற முற்படுகின்றார். ஆனால், படையினரிடம் சரணடைந்து காணாமற் போனவர்கள் தொடர்பில் நீதி கிடைக்க வேண்டும். ஆனால் அவற்றுக்கான நீதியை இலங்கை அரசாங்கத்தால் வழங்கமுடியாது. ஆகவே இந்த விடயத்தில் சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும்.

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி மூச்சுவிடவில்லை. அவ்வாறு மூச்சு விட்டிருந்தால்தான் நாம் ஆச்சரியப்பட வேண்டும்.

புதிய அரசமைப்பைக் கொண்டுவருவார்கள் என்ற நம்பிக்கை அறவே இல்லை. இந்தச் சூழ்நிலையில் இனப்படுகொலை உட்பட போர்க் குற்றங்களுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஊடாக தீர்வு காணப்பட வேண்டும். இதற்கு மூலவேரான தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக பல நாடுகளில் நடைபெற்றது போல பொதுஜன வாக்கெடுப்பு நடத்தவேண்டியது கட்டாயம் - என்றார்.

(ம-20)

# வவுனியாவில் விபத்து பெண்ணுக்கு படுகாயம்

வவுனியா, ஜன. 23



வவுனியா, குருமண்காடுப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை ஓட்டோவும் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள் ளாகின. இதில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா, குருமண்காடுப் பகுதியில் இருந்து சைக்கிளில் வந்த பெண் காளிகோவிலடி வீதிக்கு திரும்பியபோது, மன்னார் வீதி வழியாக வந்த ஓட்டோ குறித்த சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது. குறித்த பெண் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(ம-18)

# மோட்டார் சைக்கிள் மோதி இரு அலுவலர்கள் காயம்

சாவகச்சேரி, ஜன. 23

சாவகச்சேரியில் நேற்று முன்தினம் இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இருவர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோதி, வீழ்ந்த மோட்டார் சைக்கிளுடன் பின்தொடர்ந்து வந்த மோட்டார் சைக்கிளும் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது. விபத்தில், தென்மராட்சிப் பிரதேச செயலக இரு பெண் அலுவலர்களே காயமடைந்தனர். காயமடைந்த இரு அலுவலர்களும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

(ம-ரி1-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவள சிகிச்சை நிலையம் திறப்பு





மன்னார், ஜன.23
மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் புலம் பெயர் தமிழர் கூட்டமைப்பின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட கருவள சிகிச்சை நிலையம் கடந்த செவ்வாய்க் கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.
மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன், மன்னார் மாவட்ட பொது மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர் க.செந்தூர்பதிராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிகிச்சை நிலையத்தை திறந்து வைத்தனர். (ச-56)



# கௌரவிப்பு

சாவகச்சேரி, ஜன.23
இலங்கை வங்கி கொடிகாமம் கிளையின் ஏற்பாட்டில், 2020 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, கடந்த வியாழக்கிழமை பி.ப.4மணிக்கு கொடிகாமம் ஏ9 வீதியிலுள்ள நட்சத்திரமஹால் மண்டபத்தில் நடைபெற்றது.
நிகழ்வில், வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்ற 47 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன்,185க்கு மேல் புள்ளிகள் பெற்ற 6 மாணவர்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபா, இலங்கை வங்கியால் வைப்புச் செய்யப்பட்டது. வங்கி முகாமையாளர் த.கபிலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், சிறப்பு அதிதிகளாக வடமாகாண இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளர் சுஜாதா நேதானந்தன், சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ரி1-159)



மிருசுவில், விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய தைப்பொங்கல் விழாவும் ஐந்தாம் தரப்பில் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (ய-9)



# நினைவுகூரல் பெயர்ப்பலகை

யாழ்ப்பாணம், ஜன.23
காங்கேசன்துறை, தையிட்டி கணேசா வித்தியாலயத்தில் கல்விகற்று பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்களை நினைவுகூரும் முகமாக பழைய மாணவர் ஒருவரால் அதிபர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகை ஒன்று தயாரித்து வழங்கப்பட்டுள்ளது.
இருபாலை கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகத் தலைவரும் பழைய மாணவருமான லயன் இரா.ஜெயக்குமார் என்பவராலேயே குறித்த பெயர்ப்பலகை கடந்த புதன் கிழமை வித்தியாலய அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ச-9)



நாவற்குழி சித்திர வேலாயுதர் ஆலயத்தில் தைப்பூசத் திருவிழாவும் புதிர் எடுத்தல் நிகழ்வும் கடந்த புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெற்றன. (ச-159)



யாழ். மகளிர் முன்னணியின் அங்கத்துவர்களின் பிள்ளைகளுக்கு, காலணிக்கான உதவித்தொகை மற்றும் புத்தகப்பை உட்பட உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஒ,4,27)





முல்லைத்தீவு மல்லாவியில் 80 மாணவர்களுக்கு, லயன் ந.விஜயகுமாரால் கற்றல் உபகரணங்கள் வழங்கப் பட்டன. (ரி1,19)

# தளபாடங்கள் கையளிப்பு

சாவகச்சேரி, ஜன. 23
நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனின் நிதி ஒதுக்கீட்டில், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலைக்கு ஒரு தொகுதி தளபாடங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.
அதிபர் பொ.நடேசலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் பா.கஜதீபன், சாவகச்சேரி பிரதேச சபை உப தவிசாளர் செ.மயூரன், சாவகச்சேரி நகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர் ஆகியோர் கலந்து கொண்டு தளபாடங்களைக் கையளித்தனர். (ஒ-ரி1,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வவுனியாவில் தற்போதுவரை 20 டெங்குத் தொற்றாளர்கள்!



வவுனியா, ஜன. 23

வவுனியா மாவட்டத்தில் தற்போதுவரை 20பேர் டெங்குத் தொற்றுக்கு ஆட்பட்டுள்ளனர் என்று பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் மகேந்திரன் தெரிவித்தார்.

வவுனியா பெரியார்குளத்தில் நகரசபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

பொதுவாகவே டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையை சுகாதாரத் திணைக்களத்தினாலேயே செய்ய வேண்டும் என்று எல்லோரும் எண்ணுகின்ற நிலையில், தற்போது நகரசபை இவ்வாறான நிகழ்வுகளை முன்னின்று செய்வது வரவேற்கத்தக்க விடயம். டெங்கு என்பது சுகாதாரப் பிரச்சினை மட்டுமல்ல இது வொரு சமூகப் பிரச்சினையாகும். ஏனென்றால் நாங்கள் எங்களுடைய திண்மக் கழிவுகளை அகற்றுவது தொடர்பான சரியான முகாமைத்துவம் இல்லாமை காரணமாக டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் பெருகுகின்றன.

வவுனியா மாவட்டத்தை பொறுத்தவரை டெங்கானது கட்டுப்பாட்டில் உள்ளது. ஆனால் எமக்கு அண்மையிலுள்ள யாழ். மாவட்டம் மற்றும் மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோய்த்தாக்கத்தின் வீரியம் அதிகமாகக் காணப்படுகின்றது. இந்த இரு மாவட்டங்களிலும் கடந்த வருட ஆரம்பத்தில் டெங்கு நோயாளர்களின் பெருக்கத்தைவிட இந்த ஆண்டு ஆரம்பத்தில் நோயாளர் எண்ணிக்கை மிக அதிகமாக காணப்படுகின்றது.

எனினும் வெளி மாவட்டங்களில் இருந்து வருபவர்களால் டெங்குத் தொற்றின் தாக்கம் வவுனியாவிலும் உணரப்படுகின்றது. கடந்த மாதத்தைப் பொறுத்த வரை வவுனியா மாவட்டத்தில் 9 பேரே டெங்குத் தொற்றாளர்களாக அடையாளங் காணப்பட்டனர். ஜனவரி மாதத்தில் இதுவரை 11 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-110)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 23

பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் 200ஆவது ஆண்டு நிறைவு தின நிகழ்வுகள், விழாக்குழுவைத் தெரிவு செய்தல் தொடர்பான கலந்துரையாடல், எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (ம-ரி1)






# மலையக மக்கள் தொடர்பாக தனியாகக் கூறவேண்டியதில்லை

## ஜனாதிபதியின் உரைக்கு ஜீவன் தொண்டமான் ஆதரவு

கொழும்பு, ஜன. 23

ஜனாதிபதி தமது கொள்கை விளக்கவுரையில் மலையக மக்கள் தொடர்பாக எதனையும் கூறவில்லையென பல்வேறு தரப்பிலிருந்தும் விமர்சிக்கப்படுகின்றது. ஜனாதிபதி அவ்வாறு தனியாக எதையும் கூறவேண்டிய அவசியம் இல்லை. மலையக மக்களும் இந்த நாட்டு பிரஜைகளே. எம்மை எவரும் பிரித்துப்பார்க்க வேண்டிய அவசியம் இல்லை என இ.தொ.கா. பொதுச் செயலரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஜனாதிபதி தொடர்பில் விமர்சனங்களை முன்வைப்பவர்கள் இவ்வளவு இக்கட்டான காலகட்டத்தில் நாட்டில் என்னென்ன நடந்திருக்கிறது என்பதை ஒரு முறை சிந்தித்துப் பார்க்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக மலையகம் உட்பட நாட்டில் 85 வீதமான மக்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. நாட்டில் இன்று இயல்பு நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

கொடிய கொரோனாத் தொற்றிலிருந்து மக்களை மீட்பதற்காக தடுப்பூசி செயற்பாடுகளை ஜனாதிபதி வெற்றிகரமாக முன்னெடுத்தமையே நாட்டின் இந்த இயல்பு நிலைக்கு வழிகோலியுள்ளது என்பதை எவரும் மறந்து விடக்கூடாது. ஜனாதிபதி தமது கொள்கை விளக்கவுரையில் மலையக மக்கள் தொடர்பாக எதனையும் கூறவில்லையென பல்வேறு தரப்பிலிருந்தும் விமர்சிக்கப்படுகின்றது. ஜனாதிபதி அவ்வாறு தனியாக எதையும் கூறவேண்டிய அவசியம் இல்லை. மலையக மக்களும் இந்த நாட்டு பிரஜைகளே. எம்மை எவரும் பிரித்துப்பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.



சிலர் அவ்வாறான பாகுபாடுகளை மேற்கொள்வதால்தான் சில உரிமைகளை பெற்றுக் கொள்ள முடியாமலுள்ளது - என்றார். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## போர்க்குற்றங்களின் இன்னொரு சாட்சி

இலங்கையில் நடந்த இறுதிப் போர் உலக வரலாற்று ஏடுகளில் ஒரு கறை படிந்த பக்கம் என்பதை மறுக்கமுடியாது. ஒரு குறுகிய நிலப் பகுதிக்குள் ஆயிரக்கணக்கான மக்கள் அடைக்கப்பட்டு, இலங்கை இராணுவத்தின் கனரக( தடை செய்யப்பட்ட) ஆயுதங்களால் கொடூரமாகக்கொல்லப்பட்டதை உலகமே வேடிக்கை பார்த்தது.

இறுதிப் போரில் இலங்கை இராணுவத்தினரால் அரங்கேற்றப்பட்ட கொடூரங்களை மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை பறைசாற்றும் ஆவணங்கள் வெளியாகியிருந்தபோதும், இலங்கைஅரசு இப்போதும் அவற்றைமறுத்து வருகின்றது. அவற்றுக்கான பொறுப்புக்கூறலில் இருந்தும், குற்றவாளிகளைத் தண்டிப்பதில் இருந்தும் விலகியே நடக்கின்றது.

சில தினங்களுக்கு முன்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இறுதிப் போர் தொடர்பாக ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்." இறுதிப் போர் இடம்பெற்ற காலப்பகுதியில் சிலதினங்கள் ஆயுதங்கள் இல்லாத நிலைமை இருந்தது. அவற்றை ஊடகங்களுக்கு அன்று சொல்லியிருந்தால், புலிகள் அன்றே எம்மைத் தாக்கி அழித்திருப்பார்கள்" என்று பெருமை பீற்றியிருக்கிறார்.

இலங்கைஅரசு, இறுதிப் போரில் ஆதிக்கம் செலுத்துவதற்கு சர்வதேச நாடுகளின் தங்குதடையற்ற ஆயுத வழங்கலே காரணம் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். சர்வதேச ஊடகங்களின் தகவல்படி, போர் இடம்பெற்ற காலத்தில் 7 பில்லியன் டொலர் நிதி உதவியை இலங்கை இராணுவத்துக்கு சீனா வழங்கியது. 200 மில்லியன் டொலருக்கும் அதிகமான இராணுவ உதவிகளை பாகிஸ்தான் வழங்கியிருந்தது. 2007 கால கட்டத்தில் பாகிஸ்தானிடம் இருந்து பெறப்பட்ட இராணுவ உதவிகளின் பெறுமதி 50 பில்லியன் டொலராக இருந்தபோதும், அது 2009ஆம் ஆண்டு 150 மில்லியன் டொலராக உயர்ந்தது. 500 மில்லியன் டொலர் பெறுமதியான இராணுவ உதவிகளை அளித்தது அமெரிக்கா. ஈரானுக்கும்- இலங்கைக்கும் இடையே 2007ஆம் ஆண்டு மட்டும், 140.9 மில்லியன் டொலர் மதிப்பிலான இராணுவ ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. 2008ஆம் ஆண்டு மட்டும், இலங்கைக்கு 4 மில்லியன் யூரோ பெறுமதியுடைய இராணுவத் தளவாடங்களையும் 3 மில்லியன் யூரோ அளவிலான ஆயுதங்களையும் பிரிட்டன் விற்றது. இலங்கைக்கு இராணுவ உதவிகள் வழங்கிய நாடுகளின் பட்டியல் இந்தியா, இஸ்ரேல், ரஷ்யா, லிபியா, செக் குடியரசு, உக்ரைன், பிரான்ஸ், ஸ்லோவாக்கியா, அவுஸ்திரேலியா, இந்தோனேஷியா என நீண்டு செல்கின்றது.


இத்தனை ஆயுத வழங்கல்கள் இருந்தபோதும், உள்நாட்டுப் போரை நடத்திய இலங்கை இராணுவத்துக்கு ஆயுதப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கின்றது என்பது ஒரு சாதாரண விடயம் அல்ல. ஒரு குறுகிய பிரதேசத்தில் நடந்த போரில் இலங்கை இராணுவம் ஆயுதப் பற்றாக்குறை ஏற்படும் அளவுக்கு கண்மூடித்தனமாக, தன் சூட்டு வலுவை ஆயுதப்பலத்தை பிரயோகித்திருக்கின்றது. இறுதிப்போரில் இலங்கை இராணுவம் மிலேச்சத்தனமான கனகரக ஆயுதப் பாவனையை மேற்கொண்டது என்ற குற்றச்சாட்டுக்கும், 'இலட்சத்துக்கும் அதிகமான தமிழ்மக்கள் கொல்லப்பட்டனர் என்ற குற்றச்சாட்டுக்கும் வலுச் சேர்த்திருக்கின்றது மத்திய வங்கி ஆளுநரின் கூற்று.போர்க்குற்றங்களின் ஒரு சாட்சியமாகக்கூட அவரது ஒப்புதல் வாக்குமூலத்தைக் கொள்ளமுடியும்.

மிகக் கொடூரமானமுறையில் போரை முடிவுக்குக் கொண்டு வந்த இலங்கை அரசு, இப்போதும் தமிழ் மக்களின் கோரிக்கைகளில் உள்ள நியாயத்தைப் புரிந்துகொள்வதாக இல்லை. இறுதிப் போரில் நடந்த மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாகவோ, போர்க்குற்றங்கள் தொடர்பாகவோ பொறுப்புக் கூறவும், விசாரணை மேற்கொள்ளவும் தயாராக இல்லை. சர்வதேச நாடுகள் இலங்கை அரசைத் தங்கள் பக்கம் வளைப்பதற்கு, தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்திக் கொள்கின்றனவே தவிர, பாதிக்கப்பட்ட ஓர் இன மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற உளப்பூர்வமாக செயற்படுவதாக இல்லை. ஆயினும் உண்மைகள் எப்போதும் அமிழ்ந்திருக்கப் போவதில்லை. ஏதோ ஒரு விதத்தில் வெளிக்கிளம்பியே தீரும். அப்போது அப்பாவி மக்களின் கண்ணீருக்கு பதில் சொல்ல வேண்டிய நிலைமை ஆட்சியாளர்களுக்கு ஏற்படும் என்பது திண்ணம்...!

### நாளொரு நல்வார்த்தை

"ஒரு நல்ல புத்தகம் நூறு நல்ல நண்பர்களுக்கு சமம். ஆனால் ஒரு நல்ல நண்பன் ஒரு நூலகத்துக்கே சமம்"

- அப்துல் கலாம்




# மக்களின் முன்பாக நின்று உரையாற்றுவாரா கோத்தா?

சார்ள்ஸ் எம்.பி. சவால்



**வவுனியா, ஜன. 23**

**ஜனாதிபதியின் இவ்வாறான கொள்கை விளக்க உரைகளை ஜனாதிபதி செயலகத்தில் அல்லது நாடாளுமன்றத்தில்தான் நிகழ்த்த முடியும். மக்களின் முன்பாக நின்று இந்த உரையை அவரால் நிகழ்த்த முடியுமா? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரான சார்ள்ஸ் நிர்மலநாதன்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டபோது மக்கள் மிகவும் எதிர்பார்ப்புடன் இருந்தார்கள். ஆனால் அவரின் இரு வருட ஆட்சியில் மக்களின் எதிர்பார்ப்பு முற்றிலும் சிதைந்து போயுள்ளது. 2019 ஆம் ஆண்டு மக்கள் உயிர் அச்சத்தில் இருந்த நிலையில் தன்னை ஜனதிபதியாகத் தெரிவு செய்ததாகவும், தான் அந்த மக்களின் அச்சத்தைப் போக்கியதாகவும் கூறியுள்ளார். ஆனால் அந்த உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னணி இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

தனது இரண்டு வருட ஆட்சி முடிவில் ஜனாதிபதி தனது கொள்கை விளக்க உரையை நாடாளுமன்றத்தில் நிகழ்த்தியுள்ளார். அவரால் இவ்வாறான உரையை நாடாளுமன்றத்தில்தான் நிகழ்த்த முடியும். முடிந்தால் மக்களின் முன்பாகச் சென்று இந்த உரையை அவரால் நிகழ்த்தமுடியுமா? நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள், நெருக்கடிகளுக்கு ஜனாதிபதியின் உரை எந்தத் தீர்வையும் - பதிலையும் வழங்கவில்லை.

குறிப்பாக விவசாயிகளின் பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் இதில் இல்லை. மக்கள் எதிர்நோக்கியுள்ள அரிசி, பால்மா, எரிவாயு தட்டுப்பாடுகள் எரிபொருள், மரக்கறி, சிமெந்து, கட்டடப் பொருள்களின் விலையேற்றங்கள் நாட்டு மக்களுக்கு பெரும் சுமையாகவுள்ளன. இவை தொடர்பில் ஜனாதிபதியின் உரையில் எந்தவொரு வார்த்தையும் கிடையாது. ஜனாதிபதியின் கொள்கைஎன்பது மக்களை அதலபாதாளத்தில் தள்ளுவதாகவே உள்ளது - என்றார். (ம)

*கச்சாய்ப் பகுதியில்*

# கடலாமையுடன் கைதானவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்

கொடிகாமம் ஜன 22

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், கடந்த வெள்ளிக்கிழமை கடலாமையுடன் கைதுசெய்யப்பட்ட நபர் நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டார்.

கொடிகாமம் சிறப்பு பொலிஸ் பிரிவினரும் இராணுவமும் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் மேற்படி நபர் கைது செய்யப்பட்டார். அவர் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவரை ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

(ம-159)

நாளை 24.01.2022 திங்கட்கிழமை தை 11

சுபநேரம் : 12.36 - 02.06
ராகுகாலம் : 08.06 - 09.36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சிப்பகுதியில் எகிறுகிறது டெங்கு இந்தமாதம் மட்டும் 19 பேருக்குத் தொற்று!



சாவகச்சேரி ஜன.23

தென்மராட்சி பிரதேசத்தில் ஜனவரி மாதத்தில் மட்டும் டெங்குவால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 19ஆக அதிகரித்துள்ளது.

கடந்தவாரம் கைதடி, சாவகச்சேரி நகரம், மட்டுவில், நாவற்குழி ஆகிய பிரிவுகளைச்சேர்ந்த ஐவர் டெங்குவால் பீடிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பிரதேசத்தில் மழை வெள்ளம் பல இடங்களில் வற்றாத நிலையில் காணப்படுவதால் டெங்குவால் பீடிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகின்றது. எனவே பொதுமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டுமென்று சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

இதேவேளை பிரதேச செயலகமும் சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரும் இணைந்து டெங்கு தொடர்பான விழிப்புணர்வு வீதி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# தொழில்முனைவோருக்கு முதலீட்டுக் கொடுப்பனவு



கிளிநொச்சி. ஜன.23

பூநகரி, கௌதாரி முனைப் பகுதியில் கடலட்டைப் பண்ணை அமைக்கவுள்ள சுமார் 52 தொழில்முனைவோருக்கு ஆரம்ப முதலீட்டுக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதற்கென தனியார் முதலீட்டாளர்களுடனான ஒப்பந்தங்கள் நேற்று முன்தினம் 21ஆம் திகதி பூநகரி - நாச்சிக்குடாவில் கைச்சாத்திடப்பட்டன. (ச- 27)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்கிரமான பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை

## முன்னாள் பிரதி ஆளுநர் எச்சரிக்கை

**கொழும்பு,ஜன.23**

**நாடு மிகவும் உக்கிரமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. எதிர்காலத்தில் இலங்கை லெபனான், துருக்கி போன்ற நாடுகளின் நிலைமைக்குச் செல்லும் என்று மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் டப்ளியூ.ஏ. விஜேவர்தன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை மத்திய வங்கி போன்ற நிறுவனங்கள் அழகான வார்த்தைகளால், நிலைமையைக் கட்டியெழுப்பும் விடயங்களைக் கூறாது, நாட்டின் உண்மையான நிலைமையை மக்களுக்குக் கூற வேண்டும்.

இலங்கை தற்போது பிச்சைக்காரனின் நிலைமைக்குச் சென்றுள்ளது. இந்த நிலைமையை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும். அடுத்த 12 மாதங்களுக்கு ஜனாதிபதி உட்பட கீழ் மட்டத்தில் இருக்கும் அனைவரும் சிரமமான அர்ப்பணிப்புகளைச் செய்யத் தயாராக இருக்கவேண்டும். அப்படிச் செய்யவில்லை என்றால், உக்கிரமான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்க நேரிடும்.

உண்மையில் எதிர்காலத்தில் நாம் பிச்சைக்காரனின் நிலைமைக்குச் செல்வோம். பிச்சைக்காரனுக்கு சூடான சோற்றைப் பெறமுடியாது. இந்த விடயத்தை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

உண்மையில் நாடு உக்கிரமான பொருளாதார நெருக்கடிக்குள் இருக்கின்றது. ஆகவே மக்களின் உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். 1971 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் இப்படியான நிலைமை காணப்பட்டது.

அப்போது நாட்டின் பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்க தேசிய வானொலியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். நாம் எரிமலைக்கு மேல் இருக்கின்றோம். அது எந்த நேரத்திலும் வெடித்துச் சிதறலாம். இதனால், அனைவரும் ஒன்றிணைந்து, எரிமலை வெடிப்பதைத் தடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இதனால், தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையை அரசியல் அதிகாரத்தில் இருப்பவர்கள் மிகத் தெளிவாக நாட்டு மக்களுக்குக் கூற வேண்டும் - என்றார். (ஒ-4இ)



# கலைஞர்களுக்கான தரவுத்தளம் வெளியீடு

கொழும்பு.ஜன.23

கலைஞர்களுக்கான காப்புறுதிப் பத்திரம் வழங்கல், தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் www.heritage.gov.lk என்ற உத்தியோகப்பூர்வ இணையத்தளம் மற்றும் கலைஞர்களுக்கான தரவுத்தளம் கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்டன.

நிகழ்வில் சொஃப்ட்லொஜிக் காப்புறுதி நிறுவனத்தால் வழங்கப்படும் 50 காப்புறுதிப்பத்திரங்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவால், கலைஞர்களுக்கு குறியீட்டு ரீதியாக வழங்கப்பட்டன.

தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் www.heritage.gov.lk உத்தியோகப்பூர்வ இணையத்தளம் பிரதமரால் வெளியிடப்பட்டது.

அத்துடன் கலைஞர்களுக்கான தரவுத்தளம் வெளியிடப்பட்டு, நடிகர் ரவீந்திர ரன்தெனிய மற்றும் நடனக் கலைஞர் கொடஹேவகே, இராஜாங்க அமைச்சர் கொடஹேவகே கிரென்டின் சில்வா ஆகியோரின் தரவுகள், தரவுத்தளத்தில் உள்ளடக்கப்பட்டன. (ஒ-4இ)

# வாழ்வகத்தில் இணைய விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்.ஜன.23

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வக நிறுவனத்தில் பார்வையற்ற அல்லது குறைந்த பார்வையுடைய பிள்ளைகளை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பிள்ளைகளுக்கான உணவு, உடை, தங்குமிடம் மற்றும் கல்விக்கான அனைத்து வசதிகளும், மேலதிக வகுப்புக்கள், கணினிக் கற்கைகள், கவின் கலை வகுப்புக்கள், ஆளுமை விருத்திக்கான செயற்பாடுகள், சுகாதார, மருத்துவ வசதிகள், விளையாட்டு வசதிகளும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.

தகமையுடைய பிள்ளைகளின் பெற்றோர்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி,சுன்னாகம் என்ற முகவரியுடனோ, 021 224 0146, 076 828 6331 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடனோ தொடர்பு கொள்ளமுடியும் என்று வாழ்வகத்தின் தலைவர் அறிவித்துள்ளார். (ஒ-4இ)

# ஜனாதிபதியின் உரையானது யானை விழுங்கிய விளாம்பழம்

## இம்ரான் எம்.பி. கிண்டல்

கொழும்பு, ஜன. 23

ஜனாதிபதியின் உரை யானை விழுங்கிய விளாம்பழம் போன்றது என திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:



நாட்டின் இக்கட்டான சூழ்நிலையில் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்து நாடாளுமன்ற நடவடிக்கைகளை நிறுத்தி வைத்த ஜனாதிபதி தனது கொள்கை அறிக்கையில் ஏன் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தார் என்பதை தெளிவுபடுத்துவார் என எதிர்பார்த்தால் அவர் தனது பழைய கதைகளையே மீண்டும் கூறியுள்ளார்.

எரிவாயு வரிசை நீண்டு கொண்டே போகிறது, பால்மா வரிசை நகராமல் நிற்கிறது, சிமெந்தின் விலை ஆகாயத்தைத் தொடுகிறது, அரிசி இப்போது இருநூறு ரூபா இன்னும் சில மாதங்களில் 500 ரூபாவைத் தாண்டும் என கணிக்கப்படுகிறது. மரக்கறிகள் மருந்துப்பொருள்கள் என அனைத்துக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஏன் பலாக்காய்க்குக் கூட சிறந்த விலையை இந்த அரசாங்கமே பெற்றுக்கொடுத்துள்ளது. இப்படி நாடே அதால பாதாளத்தில் தத்தளித்துக்கொண்டிருக்கும்போது ஜனாதிபதி சுபீட்சத்தைப் பற்றிப் பேசிக் கொண் டிருக்கிறார் - என்றார். (ம)



# புதிர் அறுவடை விழா

சாவகச்சேரி, ஜன. 23

விடத்தற்பளை சம்பாவெளி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் புதிர் அறுவடை விழா, கடந்த 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது, வயலில் அறுவடை செய்த நெல்லில் இருந்து அமுது தயாரித்து விநாயகருக்குப் படையல் வைத்து பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

விழாவில், ஆலய பரிபாலன சபையினர், ஆலய பிரதம குரு, ஆலயத் தொண்டர்கள், அடியார்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ரி1-159)

# இசை ஆராதனை விழா!



யாழ்ப்பாணம், ஜன. 23

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடாத்தும் சற்குரு ஸ்ரீதியாகராஜ சுவாமிகளின் 175ஆவது இசை ஆராதனை விழா கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

ஈழத்து பிரபல நாதஸ்வர, தவில் கலைஞர்களால் மங்கள இசை வாசிக்கப்பட்டது. பின்னர் ஈழத்து பிரபல கர்நாடக இசைக்கலைஞர்கள் வாத்திய கலைஞர்கள் வழங்கும் இஸ்சை ஆராதனை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து சிறுவர்கள் [illegible] கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம-27)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 23

இணுவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சர்வதேச வர்த்தக கண்காட்சி - 2022



























Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





ஓம் விராட் விஸ்வப் பிர



## இலங்கை – யாழ்ப்பாணம் – கோவையம்பதி

# திருவருள்மிகு காளி அம்பாள் தேவ

## நூதனதிரிதள இராஜகோபுர ஸஹித புனராவர்த்தன அஷ்ட

# மஹா கும்பாபிஷேக சிறப்பிதழ்

**(23.01.2022 ஞாயிற்றுக்கிழமை பகல் 10.00 மணி முதல் 11.00 மணி வரையுள்ள மீனல**

**மெய் அன்பர்களே!**

ஈழவளநாட்டின் வடபால் யாழ்ப்பாண மாநகரில் சைவமும் தமிழும் தழைத்தோங்குகின்ற கோவையம்பதியிலே கோயில் கொண்டு எழுந்தரு
விஸ்வ பிரம்ம குலநாயகியான காளி அம்பாளுக்கும் விநாயகர் முதலான பரிவார மூர்த்திகளுக்கும் அதிசுந்தரதிரிதள ராஜ கோபுரவிமான து
ஷஷ்டிதிதியும் அமிர்தயோகமும் கூடிய பகல் 10 மணிமுதல் 11 மணிவரையுள்ள மீனலக்ன சுப முகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் நடை
ஆசாரசீலராக கலந்துகொண்டு காணுதற்கரிய கும்பாபிஷேக காட்சிகளைக் கண்டு தரிசித்து காளியம்பாளின் திருவருளைப் பெற்று மண்ணில் ந

### ஆசியுரை

கோடான கோடி கற்பங்கள் அடங்கப்பெற்ற காலத்தையே அவள் எடுத்து விழுங்கி தன்னகத்தில் அடக்குகின்றமையால் வடமொழியில் "காலி" என்றும் போற்றப்படுகிறாள். இத்தனை சிறப்புபெற்ற அன்னை கோவைப்பதியில் காளியம்பாள் எனும் பெயரில் கோயில் கொண்டு தன்பெயராற்றலால் அடியவர்களுக்கு அருளாட்சி புரிந்து வருகிறாள். இவ்வாலயம் ஆண்டு தாயின் அடியவர்களால் நிர்மானம் செய்யப்பட்டு இன்றுவரையில் சிறப்புற நித்திய. நைமித்திய கிரியைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் வகையில் 2017 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு. இன்று (23.01.2022) ஆகிய நன்நாளில் ஊர் கூடி கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ்த்தப்படுவதை எண்ணி அகம்பூரிக்கும் அதே சமயத்தில் காளியின் பெருங்கருணையால் ஆலய பிரதம குருவும். நிர்வாக சபையினரும் அடியவர்களும் ஊராரும் என்றும் குறைவிலா வாழ்வினை பெற்று மகிழ்வர் என்று மகா காளியின் தாழ்பணிந்து அவள் அருளினால் ஆசிகூருகிறேன்.

**கிரியாபூஷணம் சிவஸ்ரீ ச.சண்முகராஜேஸ்வரக்குருக்கள்**
**யாழ்ப்பாணம்- கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோவில் ஆதீன கர்த்தா மற்றும் காளிகோவில் தேவஸ்தானகுரு**



### ஆசிச் செய்தி

"அம்பிகையை சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்". கோப்பாய் மத்தி காளி கோவில் புனருத்தாரன பணிகள் நிறைவு பெற்று கும்பாபிக்ஷேகம் நடைபெறவுள்ளமையை அறிந்து மிகுந்த ஆனந்தம் அடைகிறேன். கோவில்கள் நிறைந்த கோப்பாயில் காளி கோவில் தனித்துவமானது. பொங்கல். படையல். வேள்வி. அன்னதானம் என அடியவர்கள் தம் வாழ்வில் காவல் தெய்வமாக காளிகாம்பாளை வணங்கி வழிபாடு செய்வார்கள். சிறிய கோவிலாக இருந்த காளி கோவில் தற்போது பெரும் கோவிலாக வளர்ச்சி பெற்று வருகிறது. அம்பாளின் திருவருளை யாரறிவார். சுவாமி இராமகிருக்ஷ்னர் மகா காளியம்பாளின் உபாசகர். அவர் மகா காளி தரிசனம் பெற்று உயர் ஞானத்தை பெற்றார். காளிதேவியை உருகி வழிபடுபவர்கள் எல்லா சித்திகளையும் பெறுவார். நாம் வேண்டிய வரத்தை பெறுவதற்கு தாயாக நின்று அருள் செய்கின்ற அம்பாளின் அடியவர்களின் அன்புக் காணிக்கையும். அறங்காவலர் கள் கடின முயற்சியாலும் திருக் கோவில் திருப்பணிகள் யாவும் சிறப்பாக பூர்த்தியாகியுள்ளது. அம்பாளின் மகா கும்பாபிக்ஷேகம் நல்ல வண்ணம் நடைபெறவும். அடியவர்கள் சீரோடும் சிறப்போடும் வாழவும் சிறியேனும் பிராத்தனை செய்து எனது இதய பூர்வமான நல்லாசிகளையும். வாழ்த்துகளையும் தெரிவித்து அமைகிறேன்.

நன்றி

**கலாநிதி ஆறு திருமுருகன்**
**தலைவர், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்.**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை.**



### பிரதிஷ்டா பிரதமகுருமுதல்வரின் ஆசியுரை

இலங்கை திருநாட்டில் வடபால் யாழ்ப்பாண மாநகரில் கோவையம்பதி எனும் கிராமத்தில் கோயில் கொண்டு
ஜீவராசிகளுக்கும் தாயாக விளங்குகின்ற விஸ்வ பிரம்ம குலநாயகியான காளி அம்பாளுக்கும் ஏனைய பரிவா
பரிபலன சபையினர். தொண்டர்கள் கிராம அடியவர்கள் வெளிநாட்டில் உள்ள அடியவர்களின் பெரும் முயற்சி
ஆலயம் இன்று இந்திரலோகம் போல பொலிவு பெற்று மஹா கும்பாபிஷேகம் கான இருப்பதை இட்டு அகமகி
அம்பிகையின் அளவற்ற திருவருளும் விஸ்வபிரம்ம குல மக்களின் அதீத பக்தியுமே இவ் ஆலயத்தின் வளர்ச
மிகையாகாது. அம்பிகையின் கும்பாபிஷேகத்தினுடைய பலனாக ஆலய பரிபாலன சபையின் அடியவர்கள் விஸ்வ பிரம்மகுல
அனைத்து ஜீவராசிகளும் சகல சௌபாக்கியங்களையும் பெற்று நிறைவான மகிழ்வான ஆரோக்கியமான வாழ்வை பெற்
அம்பாளினதும் காளிகம்பாளினதும் திருவடிகளை பணிந்து மனம் நிறைந்து அன்பையும் வாழ்த்துக்களையும்
ஆசீர்வதிக்கின்றேன்.

**வேத சிவாகம வித்தியா பூஷணம், சிவஸ்ரீ வை.மு.பரம ச**
**பலானை கண்ணகை அம்மன் தேவஸ்தானம் ஸ்தானிக குருமுதல்வர், ஸ்ரீ காளி அம்ம**

### வாழ்த்துச் செய்தி

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

யாழ் கோவையம்பதி காளியம்பாள் தேவஸ்தான மகா கும்பாபிசேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமையடைகின்றேன். பல நூற்றாண்டு காலமாக சைவத்திற்கும் தமிழிற்கும் பெரும் சேவையாற்றிவரும் கோப்பாய் மக்களின் மனவெழுச்சியென்பது எல்லோராலும் பாராட்டப் பட வேண்டியதே. இலங்கைத் தமிழரின் வாழ்வியலை நெறிப்படுத்தும் முதன்மைக் காரணியாக சமயமும் அது சார்ந்த வாழ்வியல் ஒழுகலாறும் அமைகின்றது. "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பது ஆன்றோர் வாக்கு. கோபுரம் என்பது இறைவனின் இருப்பிடம் என அர்த்தம் கொள்ளப்படுகின்றது. இதனால்த்தான் எங்கிருந்து பார்த்தாலும் தெரியும் அளவிற்கு கோபுரத்தை உயரமாகக் கட்டுகின்றார்கள். ஓர் கோவிலின் ஆகமம்சார் அம்சமாக மிளிரும் கோபுரம். கோவிலிற்கு அழகியல் ரீதியாக ராஜகளை ஒன்றினை வழங்கும் அதேநேரம் கோவிலின் முன்நிற்கும் பக்தனிற்கு இறைவனின் பிரமாண்ட தன்மையின் முன் பக்தனின் சிறுமை நிலையை உணர்த்தி ஆணவத்தை அடக்கி ஆன்மீக ஒடுக்கத்திற்கு வழிநடத்துகின்றது.

கோபுரங்கள் ஊரைப் பாதுகாப்பனவாகவும் ஊர்மக்களின் நன்மைக்காகவும் அமைக்கப்படுகின்றன. விஞ்ஞான ரீதியாக இயற்கைச் சீற்றங்களான இடி.மின்னல் என்பவற்றில் இருந்து ஊரைப் பாதுகாப்பதற்கு இக்கோபுரங்கள் உயரமாக அமைக்கப்படுகின்றன. எவ்வளவோ உயரமான கட்டிடங்களை நாம் பார்த்திருக்கின்றோம் ஆனால் ஆலய கோபுரங்களைப் பார்க்கும் போது எமது இரு கரங்களும் தானாகவே அதனை வணங்க முன்வருகின்றன. தூரத்தில் வரும் பக்தர்களை வசீகரிக்கும் தன்மை இக்கோபுரத்திற்கு உள்ளது. ஓர் திருத்தலத்தின் மகத்துவம் அதன் கோபுரத்திலும் தங்கி உள்ளது. கோவையம்பதி திருவருள்மிகு காளி அம்பாள் தேவஸ்தானத்தின் அதிசுந்தர மூன்று தள இராஜகோபுர திருப்பணி முற்றுப் பெற்றமை தெய்வ சித்தத்துடன் கூடிய மனித முயற்சியாகும்.இவ் ஒப்பிலாப்பணி ஈடேறியமையை இட்டு யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் பீடாதிபதியாகிய நான் மகிழ்வடைகின்றேன். இத்தெய்வத் திருப்பணி முற்றுப்பெற உழைத்த ஆலய குருக்கள்மார்கள். ஆலயபரிபாலனசபையினருக்கும். பங்களிப்புச் செய்த ஊர்மக்கள் உள்ளிட்ட பொது மக்களுக்கும் கோயில் வேலைசெய்த சிற்பாச்சாரியர்களுக்கும். ஏனைய பணியாளர்களுக்கும் எனதும். யாழ்ப்பாணம் மேசிய கல்வியியற் கல்லூரிச் சமூத்தினரின் சார்பிலும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அம்பாளின் கோபுர கும்பாபிக்ஷேகம் மற்றும் மஹா கும்பாபிக்ஷேக பெருஞ்சாந்திவிழா சிறப்புற அமைய எனது வாழ்த்துக்களை பக்தியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். அம்பாளின் அருளாசிகள் அனைவருக்கும் கிடைக்கட்டும். சைவமும் தமிழும் தழைத்தோங்கட்டும்.

நன்றி

**சுப்பிரமணியம் பரமானந்தம் - பீடாதிபதி,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி, கோப்பாய்.**

### பிரதேச
### வாழ்

"ஆலயம் தானும்
தற்கிணங்க ஆல
அதனால்தான்
"திருக்கோவில் இல்
என்று அப்பர் சுவாமி
யில் சிவபூமி என தி
ஈழமணித்திருநாட்டி
யாழ்ப்பாணத்தில்
கிராமத்தில் இற்றை
மேற்பட்ட வரலாற்று
அருள் பாலிக்கும்
ஆலயம் திகழ்கிறது
தற்போது கோவை
ஆலயமானது புன
பெற்று புதுமெருகூ
வேளையில் சிவாக
ஷேகம் நிகழ்வதை
றேன்.
"நம்பினார் கெடுவதி
"அம்பிகையை
பெறலாம்" என்ற பா
அம்பிகையின் தெய
இணைத்துக்கொண
நற்பேறுகளையும்
ணில் நல்லவண்ண
காளியம்பாளினை

தி

பிரதேச செ

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்

A.R.P.Hard Ware
கோப்பாய் பிரதேச செயலகம் முன்பாக
கோப்பாய்

K.P.R. Builders
காளி கோவிலடி, கோப்பாய் மத்தி,
கோப்பாய்.


ரத்தின
காளி கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
பதி துணை

# த ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் கோயில்

# றப்பு மலர் - 23.01.2022



## அறங்காவல் குழுத் தலைவரின் ஆசிச்செய்தி



சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலான வரலாற்றைக் கொண்ட யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோவில் பொலிவுடன் இன்று இன்னுமொரு மகாகும்பாபிஷேகத்தை காண்பது மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் உரியதாகும். இந்த ஆலயத்தை நிர்வகித்தவர்கள் இந்த ஊரில் வாழாத காரணத்தாலே 1983 ஆம் ஆண்டுக்கு முன்பதான காலம் முரண்பாடுகள் நிறைந்ததாகவே இருந்தது கவலைக்குறியதாகும். ஆலயத்துக்கு உரித்தான காணிகளோ நிலையான எதுவிதவருமானமோ சொத்துக்களோ இல்லாத நிலையிலும் மேலும் தம்மால் இந்த ஆலயத்தை தொடர்ந்து நிர்வகிக்க முடியாது என்பதால். அப்போது அதான் நிர்வாகியாக இருந்த ஜெயராணி பத்மநாதன் ஊர் மக்களை அழைத்து ஆலயத்தை இனிமேல் எங்களை பொறுபேற்று நடத்துமாறு கூறி ஊர் மக்களிடம் 06.03.1983 ஆம் திகதி கையளித்தார். இதனைத்தொடர்ந்து ஊர் மக்களால் பதினொரு பேர் கொண்ட அரங்காவல் குழு உருவாக்கப்பட்டடு இந்து சமய விவகாரத்திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டது. திணைக்கள மறு சீரமைக்கும் பொழுது அதனை பதிவு இலக்கம் HA/JA/5/237 என 06.12.1988 மீள இலக்கிமிடப்பட்டது. 1983 இல் இருந்து இவ்வாவலய நித்திய பூசைகள். திருவிழாக்கள் என்பன மிகவும் நேர்த்தியாக நடைபெற்று வருகின்றன. இக்காலத்தில் 1989 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் பல புரனமைப்புகளுடன் மகா கும்பாபிஷேகங்கள் இடம்பெற்றன. இக்காலத்தில் மகாலஷ்மி. சந்தான கோபாலர் மற்றும் கந்தப் பெருமானின் விக்கிரங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. இன்று நடைபெறும் மகா கும்பாபிஷேகம் ஆலய ஆரங்காவல் குழு மேற்கொள்ளும் மூன்றாவது மகா கும்பாபிஷேகம் ஆகும். ஆலயம் முழுமையாக புனர் நிர்மாணம் செய்யப்பட்டு. இராச கோபுரம். மணிக்கூட்டு கோபுரங்கள். வாகன சாலை எனப் பல கட்டுமானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஏற்கனவே அன்பளித்த காணியிலே தேர் தரிப்பிடம் அமைக்கப்பட்டது. இம்முறை சில விநாயக அடியார்கள். ஆலய அறங்காவல் குழுவுக்காக அன்பளிப்பு செய்த காணியில் ஒரு கலாசார மண்டபம் அமைக்கப்பட்டு இன்று அதுவும் திறந்து வைக்கப்படுகின்றது. மேலும் ஆடியபாதம் வீதியிலிருந்து ஆலயத்துக்கு வரும் வீதி முகப்பில் ஓர் அலங்கார வளைவும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அமரர் சிவஸ்ரீ புவனக் குருக்களின் மூன்றாவது பரம்பரையின் மூத்தவரான சிவஸ்ரீ சதா. யோகீஸ்வரக்குருக்களின் ஆசியுடனும். வழிகாட்டலுடனும் நான்காவது பரம்பரையைச்சேர்ந்த சிவஸ்ரீ முத்து ஸ்ரீவாசக்குருக்கள் ஆலயத்தின் பிரதம குருக்களாகவிருந்து சகல பூசைகளையும் திரு விழாக்களையும் திரம்பட நடத்தி வருகின்றார். இவர்களுக்கு உதவியாக இக்குடும்பம் சார்ந்த குருக்கள்மாரும் அவ்வப்போது உதவி வருகின்றனர். அவர்கள் எல்லோருக்கும் எமது நன்றிகள்.

எமது சிற்றூரிலியே ஒரு சிறிய ஆலயமாகவிருந்த இந்த ஆலயத்தை மிகவும் சிறப்பான ஆலயமாக உயர்வடைவதற்காக அரப்பணிப்போடு அழைத்த அரங்காவல் குழு உருப்பினர்கள். இளைய சந்ததியினருக்கும். அயலவர்களுக்கும் எமது பணிவான பாராட்டுக்களும் நன்றிகளும். அதே நேரம் இம்முறை சுமார் ஆறு கோடி ரூபா நிதிப்பங்களிப்பினை செய்து ஆலய மேம்பாட்டுக்கு உதவிய புலம்பெயர் உறவுகள் உள்ளிட்ட அணைத்து விநாயக அடியார்களுக்கும் அறங்காவல் குழு சார்பில் எமது பணிவான நன்றிகள். எமது புலம் பெயர் உறவிணர்களுக்கும் ஊர் மக்களுக்கும் சொந்தமான இப்பொதுக்கோவில் தொடர்ந்து மேம்படைய எல்லோருடைய ஒத்துழைப்பும் தொடர்ந்து வேண்டப்படுகின்றன. விநாயக அடியார்கள் அனைவருக்கும் ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையாரின் அருள் கடாட்சம் கிட்ட வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

**சீ.வீ.கே. சிவஞானம்**
தலைவர் ஆலய அறங்காவல் குழு.

## ஆசியுரை



கும்பாபிஷேகம் என்பது குறிப்பிட்ட இடத்தில் அமைக்கப்பட்ட கோவில்களில் சம்பந்தப்பட்ட தெய்வத்திருமேணிகளின் மீது தெய்வ சக்திகளை எழுந்தருழும் படி செய்வதென்பதாகும். அதனை நான்கு வகைகளாக பிரிக்கலாம். அவையாவன, ஆவர்த்தம், அனாவர்த்தம், புனராவர்த்தம், அந்தரீதம் என்பனவையாகும். ஆவார்த்தம் : ஓர் இடத்தில் புதிதாக ஆலயத் அமைத்து மூர்த்திகளிற்கு பிரதிஷ்டை செய்யப்படும் கும்பாபிஷேகம் ஆனாவர்த்தம் : பூஜை இல்லாமல் பர பராமரிப்பின்று சிததலமடைந்திருக்கும் கோயில்களை புதிதாக நிர்மாணம் செய்யும் கும்பாபிஷேகம். அந்தரிதம் : கோயில் உள்ளே ஏதேனுமாகாதவை நேர்ந்துவிடின் அதன் பொருட்டு செய்யப்படும் பரிகார பூஜை புனராவர்த்தம் : கருவறை பிரகாரம் கோபுரம் முதலியன பழுதுபடிந்தாள் பாலாலயம் செய்து அதனை புதுப்பித்து அஷ்ட பந்தனம் சார்த்தி பிரதிஷ்டை செய்யும் கும்பாபிஷேகம்.

இவ்வகையில் புலம் பெயர் நாட்டில் வாழ்ந்தாலும் நான் பிறந்து வாழ்ந்த புண்ணிய பூமியாகிய நல்லூர் வடக்கு கல்வியன்காட்டில் அமைந்திருக்கும் எனது குல தெய்வமாகிய சந்திரசேகர பிள்ளையாருக்த பஞ்சதள இராஜ கோபுரம் நூதன மணிக்கோபுரங்கள் அமைப்பெற்று நடைபெறும் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் சிறப்பு மல்க நேரடியாக கலந்து கொண்டு இவ் ஆசியினை வழுங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். எமது ஆலயம் 150 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண அரசை ஆண்ட சங்கிலியன் மன்னன் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட எட்டு விநாயகர் ஆலயங்களினுள் முதலாவது ஆலயமாக சிறப்புற்றுவிளங்குவது எமது கிராமத்தின் ஓர் வஷேட அம்சமாகும். இவ்வாறு சரித்திர வரலாறு பெற்று எமது ஆலயத்தினை உள்நாடு உட்பட புலம் பெயர்ந்து வாழும் எமது கிராம மக்களின் அன்பு உள்ளங்களிலிருந்து வாரி வழங்கிய நன்கொடை நிதி உதவியினாலும் பல விவேகமும் ஆர்வமும் படைத்த இளம் சமுதாயத்தினரையும் பழைய ஆலய பரிபாலன சபையிலுள்ள மூதாதையினரையும் அடங்கிய தற்போதுள்ள அறங்காவல் சபையினர் அயராத உழைப்பினாலும். சிற்பிகளின் கைவண்ணத்தினாலும். அமைந்திருக்கும் இரஜகோபுரம் எமது ஊரின் சிறப்பு வாய்நத சிவசின்னமாக அமைந்துள்ளது பராட்டத்தக்கது. பழமை வாய்ந்த எமது இவ்வாலயம் புத்தம் புதிய அமைப்பில் இந்திய சிற்பிகளின் கைவண்ணத்தினால் கலை நுணுக்கம் மலிந்த சிற்ப வேலைப்பாடுகளும் வண்ண வண்ண சித்திரங்களும் நான்குபுறமும் காட்சிதர பஞ்சதள இராஜகோபுரமும் வினாயகர் முதலான ஒவ்வொரு மூர்த்திகளுக்கும் விமான ஸ்தூபிகளும் அமைக்கப்பட்டு கண்ணைக்கவரும் தோற்றப்பொழிவுடன் விளங்கும் இவ்வேலையில். இச்சிறப்பு வாய்ந்த எமது சந்திரசேகர பிள்ளையாரின் அறங்காவல் சபையினர். புலம் பெயர்ந்து வாழும் எமது கிராம மக்கள் ஆலய சிவ சாரியார் மகா கும்பாபிஷேகத்தினை சிறப்பாக நடத்திவைக்கும் ராஜகுடும்பத்தினர் உட்பட பல சிவாச்சாரியர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்து இவ் ஆசி உரையை நிறைவு செய்து கொள்கிறேன்.

கலாநிதி
**அப்பையா தேவசகாயம்**
இளைப்பாரிய வருமானவரி சுங்கவரி. இலாகா லண்டன். இணைஸ்தாபகர்
ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்

## யாழ் மத்தியகல்லூரி உப அதிபரின் வாழ்த்துரை



சந்திரசேகரப் பிள்ளையாரின் மகா கும்பாபிஷேகம் திருக்கோயில் வாயில் அலங்கார வளைவு புதிய கலாசார மண்டபம் என்பன எமது மக்கள் மத்தியில் மகிழ்வை ஏற்படுத்தியுள்ளது. இறைவன் மக்கள் உள்ளத்தில் நல்ல எண்ண அதிர்வுகளை உருவாக்கி நற்காரியங்களை நடத்திவருகின்றான் என்பது கண்கூடு சைவசமயம் என்பை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது அந்தவகையில் அறப்பணியும் ஆன்மீகப்பணியும் இணைந்து எமது கோயிலில் நடைபெற்றுவருகின்றது. சின்னஞ்சிறார்களின் மனதில் சிறிய வயதிலேயே ஆன்மீகச் சிந்தனைகள் உருவாவதற்கு திருவெம்பாவை வீதி பஜனை பெரிதும் துணைநிற்கம் எமது கோயிலில் கிட்டத்தட்ட 100 பிள்ளைகள் வருட வருடம் வீதி பஜனையில் பங்கு கொள்வார்கள். இவர்கள் அனைவருக்கும் திருவாசக முற்றோதல் நகழ்வில் பெறுமதியான கற்றல் உப கரணங்கள் பாதணின் என்பன வழங்கப்படும் இவை தவிர இடர் உதவிகள். வாழ்வாதார மேம்பாடுகள் என்பன வசதிகுன்றாத குடும்பங்களுக்கு வழங்கப்படுகினறன. ஆலய அயலிலுள்ள இளைஞர்கள் மலர் மாலை தொகுத்தல் முதல் ஆலய வேலைகள் யாவற்ஐறயும் திட்டமிட்டு ஒற்றுமையாக மேற்கொண்டு வருகின்றார்கள். அலுயப் புனரமைப்பு பணிகளில் இவர்களது செயற்பாடு மெச்சத்தக்கது. எமுது சந்திரசேகரப் பிள்ளையாரின் திருக்குட முழுக்கு விழாவானது எம்மக்கள் மத்தியில் நேர்ப்பாங்களை எண்ண அதிர்வுகளை ஏற்படுத்தி உடல் உள சமூக ஆன்மீக ஆரோக்கியத்தை உருவாக்கும் வேழமுகத்தவனை வணங்கி நல் வாழ்வு பெறுவோமாக.

**நா.விமலநாதன்**
**உப அதிபர், யாழ் மத்திய கல்லூரி.**



யாழ்ப்பாணம் நலலூர் வடக்கு திருவருள் மிகு ஸ்ரீ சந்திர சேகரப்பிள்ளையார் கோயில் மஹா கும்பாபிஷேகம். பாலகனாய் எனக்கறிவு வந்த நாள் முதல் - என் வாழ்வெல்லாம் கணபதியே துணையாகிக் கைதொழுது. பணிந்தேத்தி. நெஞ்சார மனதிருத்தி உன் கழல் சேர்ந்தனரே கோபுரம் கொண்ட நெருங்கோயிலாகி எம் ஊரில் நீடித்து அருள் புரிய வேண்டும். என்ற என் பெருங்கனவு நனவாகி மகிழ்கின்றேன். இன்று - நின் பெரும் அருளாலே மத்தள வயிறனே உத்தமி புதல்வனே - அனைவருக்கும் அருள் புரிய உன் பாதம் தொழுகின்றேன். கோபுரம் கொண்ட சந்திர சேகரப்பிள்ளையாரே கனவை நனவாக்கிய கணபதியே - என் உயிர் குளிரப்பனிகின்றேன். அருள்வாய் அப்பனே

**சோமசுந்தரம் சந்திரகுமார்**
உப தலைவர் திருப்பணிசபை. சிரேஷ்ட நிர்வாக சபை உறுப்பினர். ஆலய அறங்காவற் குழு



இளம் இந்து சிறார்களின் இதயங்களில் உள்ள தெய்வீகத் தாமரையை மலரச்செய்து அவர்களது ஆளுமையையும் திறமைகளும் மலர்ந்து விரிவடைய வைக்குங் கல்வியை வழுங்குவோம். நல்லூர் வடக்கு திருவருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர பிள்ளையார் கோயில் நூதன மணிக்கோபுரங்கள் சகித ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன நவகுண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகம் ( திருக்குட முழுக்கு) விநாயகப்பெருமான் அருளாலே சிறப்புற இடம்பெறுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றோம்.

எமது ஆலயத்தின் அறப்பணிகளில் ஒன்றாக ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் அற நெறிப் பாடசாலையின் பணிகளும் குறிப்பிடதக்க ஒன்றாக அமைகின்றது. எமது பாடசாலை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கலத்தினால் 2017.07.26 அன்று பதிவு செய்யப்பட்டு சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பாலத்தில் 30 மாணவர்கள் வரையில் இங்கு கல்வி கற்றனர். மேல் பிரிவிற்கு பொருப்பாசியரும் கீழ் பிரிவிற்கு செல்வி மகுலதாசன நீதுஜா அவர்களும் கல்வி கற்பித்தனர். தற்பொழுது 40 மாணவர்கள் வரையில் அறநெறிக்கல்வி பயின்று வருகின்றனர். தற்பொழுது ஆரம்பபிரிவிற்கு திருமதி யசோதினி ஸ்ரீகுகதாசன் கல்வி கற்பித்து வருகிறார். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் இடம் பெறுகின்ற அறநெறிப்பாடசாலை மாணவர்களின் ஆக்கத்திறன்களை வெளிக்கொணரும் வகையில் இடம்பெறுகின்ற போட்டிகளில் எமது மாணவர்கள் சிறப்புற கலந்து பயனடைந் துள்ளனர். அந்த வகையில் 2019ல் இடம் பெற்ற தேசிய மட்ட (மேற்பிரிவு) கதாப்பிரசங்கப்போட்டியில் எமது மாணவி செல்வி விமலநாதன் சதுர்த்திகா முதலாமிடத்தை பெற்று எல்லாருக்கும் பெருமையினை தேடித் தந்துள்ளார்.

பொறுப்பாசிரியர்
**திரு. குஞ்சிதபாதம் சுரேஸ்குமார்.** B.A, Dip in EDU சைவப்புலவர்.
சைவ சித்தாந்த பண்டிதர். இந்து சமயப்பயிற்சி. ஆசிரியர் நாவாந்துறை றோ. க. வித்தியாலயம்.
யாழ்ப்பாணம்.



அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் மஹா கும்பாபிஷேகம் நிகழ்வது மனதிற்குப் பெரும் மகிழ்வைத் தருகின்றது. பிள்ளையாரின் குடமுழுக்கு விழாவானது எமது நாட்டு மக்கள் வாழ்வில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் என்பது எமது நம்பிக்கை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள விநாயகப் பெருமானின் அனியார்கள் மனமுவந்து நிறைவான நிதிப் பங்களிப்பை வழங்கி உள்ளார்கள் திருக்கோயில் புதுப்பொலிவுடன் பிரமிக்கத்தக்க வகையில் அழுகுக் கோலம் பூண்டுள்ளது. இராஜகோபுரம் கம்பீரமாக உயர்ந்து நிமிர்ந்து அற்புதமான தோற்றத்துடன் மிளிர்கின்றது. விநாயகர் தனது 52 உருவத்திரு மேனிகளுடன் உட்பிராகாரம் அலங்காரத்தூண்களில் அருளாட்சி புரிகின்றார். கும்பாபிஷேகக் கிரியைகளை சிவகாம முறைப்படி நிகழ்த்தும் அர்த்தன சிவாச்சாசியார்கள் ஆலயக்கட்டுமானங்கள் இராஜகோபுர வேலை வர்ணப்பூச்சுக்கள் என்பனவற்றை சிறப்பாக இயற்றிய சிற்பிகள் மேலாளர்கள் பளியாளர்கள் அனைவரையும் போற்றி வணங்கி நன்றிபாராட்டுகின்றேன் திருப்பணிச்சபைலுள்ளவர்களின் ஒத்துழைப்பும் எம்பெருமானின் திருபணிக்கு வழுச்சேர்த்திருக்கின்றது. இவர்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல சந்திரசேகரப் பிள்ளையாரின் பூரண கிருபாகடாட்சம் கிடைக்கப்பிராரத்திக்கின்றேன். பெருமானின் கும்பாபிஷேகம் என்பவற்றில் அனைத்து அடியார்களும் கலந்து ஆனந்த அனுபவம் பெறுவீர்களாக.

**லயன். குமாரசாமி ஜெயந்தன்**
தலைவர். ஆலய திருப்பணிச்சபை



வேழமுகத்து விநாயகனை தொழ வாழ்வு மிகுத்துவரும்
நல்லூர்வடக்கில் காளிங்கராஜன் குளத்தருகே பொரசு மரங்களால் சூழப்பெற்ற புனித பூமியில் கோயில் கொண்டு எழுந்தருளி இஷ்டசித்திகள் அனைத்தையும் அருளிவரும் எம்குலதெய்வம் ஸ்ரீமஹா சந்திரசேகரப்பிள்ளையாருக்கு ம்.புதிதாக அமைக்கப்பட்ட பஞ்சதள இராஜகோபுரத்திற்கான மஹாகும்பாபிஷேகம் இன்றைய நன்நாளில் நடைபெறுவதையிட்டு அடியவர்கள் அனைவரும் ஆனந்தமடைகின்றனர். உள்நாட்டிலும். வெளிநாட்டிலும் வாழும் விநாயகர் அடியவர்களின் பூரண நிதிப்பங்களிப்புடன் அமையப்பெற்ற இவ்ஆலயத்தினை அறங்காவற்குழுவினர் செவ்வனே பரிபாலனம் செய்துவருவதுடன் குறித்த நேரங்களில் பூசைகள் திருவிழாக்களினை ஆலயகுருக்கள் சிவஸ்ரீ. முத்து ஸ்ரீநீவாசக குருக்கள் பக்திசிரத்தையோடு மேற்கொண்டுவருகின்றார். 52 கணபதிகள் உள்வீதிகளில் எழுந்தருளி அருட்காட்சியளிப்பதோடு ஜலகண்டேஸ்வரர் கணபதியும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. ஆடியபாதம் வீதியில் ஆலய அலங்கார தோரணநுழைவாயில் அமைக்கப்பட்டமை ஆலயத்தின்மிகப்பெரும் அடையாளமாகும். அனைவரும் ஒன்றிணைந்து ஒற்றுமையோடுசெயற்படும் இவ்ஆலயம் மேலும் வளர்ச்சியடையும் என்பதுடன் இப்பெரும் சாந்திவிழாவில் அனைவரும் பங்குபற்றி விநாயகப்பெருமான் இஷ்டசித்திகளை பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

**நடேசபிள்ளை கஜேந்திரகுமார்**
செயலாளர். ஆலய அறங்காவற்குழு



மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
யாழ்ப்பாணம். நல்லூர் வடக்கில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ சந்திரசேகரப் பெருமான். முந்நூறு வருடங்கள் பழமை வாய்ந்த நல்லூரிலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஐந்து பிள்ளை யார் ஆலயங்களில் ஒன்றாகத் திகழும் எம் பிள்ளையார் 2022 ஆம ஆண்டு இந்திய சிற்பக் கலைஞர்களின் கைவண்ணத்தில் புதிதாக நிர்மாணம் செயயப்பட்ட பஞ்சதள் இராஜ போபுரமும. விசேடமாக 52 கணபதியும். பித்தியா கணபதியம் உரிய அமைப்பிலான யாக சாலைகளுடன் இணைந்த ஆலயக் கலாசர மண்டபமும் உள்ளூர் மற்றும் உலகெங்கம் பரந்து வாழும் ஸ்ரீசந்திரசேகரப் பெருமானின் மெய்யடியார்களின் சுமார் 6 கோடி ரூபாவிற்கு மேலான நிதிப் பங்களிப்புடனும் புதுப் பொலிவுடன் இன்று மகா கும்பாபிஷேக் குடமுழுக்கு பெருஞ்சாந்திப் பெருவிழா காண்பதையிட்டு அறங்காவல் சபையினர். இளைஞர்கள் மற்றும் விநாயக அடியவர்களின் ஆனந்தக் கனவினை செயல் வடிவமாக்கி தன் தேவைகளை அவ்வபேறு முன்னின்று வழிநடாத்தும் எம் சந்திரசேகரப் பெருமான். எம் மக்கள் எல்லோரின் இன்னல்களைக் களைந்து நாட்டில் அமைதியம் சமாதானமும் உருவாக இந்நன்நாளில் அருள் புரிவாய் எம் சந்திரசேகரனே.

"எம் கடன் இறைபணி செய்து கிடப்பதே"

**முத்துலிங்கம் தவசீலன்**
பொருளாளர் ஆலய அறங்காவல் குழ.

**வர்ணப் பூச்சு : மகாலிங்கம் சபேசன் கல்வியங்காடு**

உலகத் தரம் வாய்ந்த முதல்தர வர்ணப்பூச்சு
DP Devika Paints தேவிகா பெயின்ஸ்
No.43, Point Pedro Road, Kopay Junction T.P : 021 223 2389, 077 381 5146

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வ







## இலங்கை – யாழ்ப்பாண

# திருவருள்மிகு காளி அ

# நூதனதிரிதள இராஜகோபுர ஸஹித புனரா

# மஹா கும்பாபி

**(23.01.2022 ஞாயிற்றுக்கிழமை பகல் 10.00 மணி முதல் 11**

**மெய் அன்பர்களே!**

ஈழவளநாட்டின் வடபால் யாழ்ப்பாண மாநகரில் சைவமும் தமிழும் தழைத்தோங்குகின்ற கோவையம் பதியிலே கோயில் கொண்டு விளங்குகின்ற விஸ்வ பிரம்ம குலநாயகியான காளி அம்பாளுக்கும் விநாயகர் முதலான பரிவார மூர்த்திகளுக்கும் அதிசுந்தர ஞாயிற்றுக்கிழமை அத்த நட்சத்திரமும் ஷஷ்டிதிதியும் அமிர்தயோகமும் கூடிய பகல் 10 மணிமுதல் 11 மணிவரையுள்ள மீனலக்ன சுப ஆலயத்தில் நடைபெறுகின்ற கும்பாபிஷேக கிரியைகளில் ஆசாரசீலராக கலந்துகொண்டு காணுதற்கரிய கும்பாபிஷேக காட்சிகளைக்

## பிரதிஷ்டா பிரதம குரு

வேத சிவாகம வித்யா பூஷணம் சக்தி உபாசகர்

**சிவஸ்ரீ. வை.மு.பரம சண்முகராஜ சிவாச்சாரியார்**

**கோவையம்பதி பலானை கண்ணகை அம்மன் வேதஸ்தானம்**

**ஸ்தானிகக்குரு – கோவையாதீனம்**

**மஹா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்**

**விளம்பர அ**

உலகத் தரம் வாய்ந்த முதல்தர வர்ணப்பூச்சு

NIPPON PAINT

**NIPPON PAINT LANKA (PVT) LTD.**

**No. 69A, Buthgamuwa Road, Rajagiriya**




Tel : + 94 11 - 4600400
Fax : + 94 11 - 4600409
Mobile : + 94 77 3140409
Email : gomasr@inpponpaint.comlk

A MEMBER OF THE NIPSEA GROUP www.nipponpaint.com.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
Registered as a Newspaper

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் -வேண்டா
நமக்கும் அதுவழியே நாம்போம் அளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும்
- ஔவையார்

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2053 | தை 10 | ஞாயிற்றுக்கிழமை (23.01.2022) | சிகரம் : 83

○ பா.குமுதன்



○ களவுபோன வீதிகள்

○ புதர்படர்ந்த வீடுகள்

● சிதைவடைந்த மனிதரின் இருப்பு

ஒரு நேரடி ரிப்போர்ட்



# களவு போகும் எல்லைக்கிராமங்கள்

இவையே வன்னியின் எல்லைக் கிராமங்களின் இன்றையநிலை. வடக்கு, கிழக்கு தமிழர்பகுதிகளின் இனவிகிதாசாரத்தை மாற்றிய மைக்கும் கைங்கரியத்தை பௌத்தபேரினவாத அரசுகள் தொடர்ச்சியாக செவ்வனே செய்துவருகின்றன. போர் மையம் கொண்டிருந்த காலப்பகுதியில் இந்தச் செயற்பாட்டில் ஒரு தளர்வுநிலை ஏற்பட்டிருந்தது. ஆயினும் அதன்பின்னரான காலப்பகுதியில் தமிழர் பகுதிகளை விழுங்குதலென்பது முழுவேகம் எடுத்துள்ளதை அவதானிக்கமுடியும். பேரினவாதிகள் தங்களுக்குள் பல்வேறு வேற்றுமைகளை கொண்டிருந்தாலும், தமிழர்விரோதப்போக்கு என்ற புள்ளியில் ஒன்றித்தே செயற்பட்டு வருகின்றனர். தமிழர் தரப்பின் அரசியல் பலவீனம் பேரினவாதிகளின் எண்ணத்தை நடைமுறைப் படுத்த துணைநிற்கின்றது. இந்த நிலை நீடிக்கும் பட்சத்தில் மிகக்குறுகிய காலத்தில் தமிழர் தாயகப் பகுதிகளின் இனவிகிதாசாரம் குலைக்கப்படுவதை எவராலும் தடுக்க இயலாது போய்விடும். இது தொடர்பான யதார்த்த விடயங்களைத் தேடி வன்னியின் எல்லைக் கிராமங்களை நோக்கி பயணித்தது எமது குழு.

“இது! எங்கட சாபக்கேடு கண்டியளோ! கொஞ்சக்காலமா இந்த ஊர் இப்பிடித் தான் கிடக்கு. ஆரும் திரும்பிப் பாத்த தில்லை. எங்களுக்கும் பழகிப்போச்சு” என்கிறார் மருதோடையைச் சேர்ந்த ஒரு முதி யவர். 80 வயதிருக்கும். சுருங்கிய தசைகளும் களைத்துப்போன முகமும் , உழைத்து ஓடாகிப்போன அவரது வாழ்வைப் புடம்போட்டுக்காட்டின.

“நான் இங்கதான் பிறந்தது. ஆண்டவன் புண்ணியத்தில வாழ்க்கை நல்லாத்தான் போச்சுது. இந்தச்சண்டை வந்து எல்லாத்தையும் நாசம்கட்டிப் போச்சு சண்டைதொடங்கின உடன எங்கட காணிகளையும் வீட்டையும் விட்டிட்டு, அகதிகளா ஓடிப்போனம். எங்கட சனங்கள் ஒவ்வொண்டும் திக்குத்திக்கா போய்ச் சேர்ந்திட்டுதுகள். சிலதுகள் இந்தியாவுக்கும் போச்சுதுகள். அங்கையும் அகதிமுகாமில தான் எங்கட பிள்ளைகள் வாழுதுகள். சண்டை எல்லாம் முடிஞ்சு எங்கட நிலத்தில நிம்மதியா வாழலாம் எண்ட ஆசையோடதான் ஊர்திரும்பினம். ஆனா அதிலயும் மண்ணை அள்ளிப்போட்டிட்டாங்கள். காணியை வெட்டினா பொலிஸைக் கொண்டுவாறாங்கள். இது எங்கட காணியில்லையாம். உவங்களுக்கு என்ன தெரியும்? எங்கட பாட்டன், பூட்டனை எல்லாம் இந்தமண்ணுக்க தான் புதைச்சது. நேற்று வந்தவங்கள் இப்பிடிச்சொல்லுறாங்கள். இருக்கிறவன் இருந்திருந்தால் இந்த நிலைமை வந்திருக்காது. அதான் எல்லாருக்கும் குளிர்விட்டுப் போச்சு.” என்று அவரது சோகம் குரல் வழியே வெளிப்பட்டது.



போர் முடிவுற்று 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மீளக்குடியேறிய தமிழ்மக்கள், தமது நிலங்கள் பறிபோனதை அன்றுதான் உணர்ந்திருந்தனர்.

இந்தப் பகுதிகளில் பொதுமக்கள் வெளியேறிய பின்னர் இருப்பிடங்கள் சிதைவடைந்து, அவர்களது காணிகளில் காடு வளர்ந்து, புதர் மண்டிவிட்டது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய ஆட்சியாளர்கள் , வனவளத் திணைக்களத்தினூடாக மக்களின் காணிகளை 'கூகுள்' வரைபடத்தின் உதவியுடன் அரசகாடுகளாகப் பிரகடனம் செய்தது. இதனால் அந்த மண்ணின் மக்கள் தமது காணிகளை துப்புரவாக்கி விவசாய செயற்பாடுகளைச் முன்னெடுப்பதில் அசௌகரியங்களைச் சந்தித்து நிற்கின்றனர்.

குறிப்பாக முல்லைத்தீவு மாட்டத்தின் எல்லைக் கிராமங்களான மணகிண்டிமலை, ஆமையன்குளம், முந்திரிகைக்குளம், வவுனியா வடக்கின், மயில்குளம், கொக்கச்சான்குளம், வெடிவைத்தகல் போன்ற தமிழரின் பூர்வீகக் கிராமங்கள் பல ஏற்கனவே சிங்களக்குடியேற்றம் செய்யப்பட்டு, சிங்களப் பெயர்கள் வைக்கப்பட்டு இன மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

நாயாறு, கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் போன்ற பூர்வீகத் தமிழ்க் கிராமங்கள் மற்றும் வவுனியா வடக்கின் எல்லைப்பகுதிகள் என்பவற்றில் இருந்த தமிழ்மக்கள், 1984 ஆம் ஆண்டு அரசபடையினரால் வெளியேற்றப்பட்டனர்.

"மணலாற்றில புலி பதுங்கியிருக்குது. ராணுவத்தை இறக்கி அடிக்கப் போறம். எல்லாரும் நடையைக் கட்டுங்கோ"எண்டு அண்டைக்கு ஆமி அறிவிச்சுது.

நாங்களும் அதை உண்மை எண்டு நம்பி கையில கிடைச்ச சமானுகளைத் தூக்கிக்கொண்டு எங்கட உறவுகளோட மண்ணை விட்டுப்போனம். பழகிப்போன பயணம்தான். ஆனாலும் உடம்பு மட்டும் தான் போச்சுது. உசிர் அங்கயே போயிட்டுது.


நானும் என்ர குடும்பத்தைக் கூட்டிக்கொண்டு இந்தியாவுக்கு பிழைக்கப் போட்டன். சொந்தநிலத்தை இழந்துபோட்டு அகதிமுகாமில காலத்தைக் கழிச்சம். அகதிவாழ்க்கைய அனுபவிச்சவனுக்கு மட்டும்தான் அதின்ர கஷ்டம் தெரியும். 25 வருசத்துக்குப் பிறகு ஊரில சண்டை எல்லாம் முடிஞ்சுது. அகதியாப் போனவங்கள் எல்லாம் திரும்ப வாங்கோ எண்டு அறிவிச்சதை நம்பி, 2011 ஆம் ஆண்டில ஊருக்கு வந்தம். அப்பதான் எங்கட நிலமும் பறிபோய், நாங்கள் நாதியற்றுப்போனதை அறிஞ்சம்” என்கிறார் கருநாட்டுக் கேணியைச் சேர்ந்த முத்துத் தம்பி..

1984 ஆம் ஆண்டு மணலாற்றுப்பகுதியில் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் கொக்கிளாய் கிழக்கு, மேற்கு, கருநாட்டுக் கேணி, கொக்குத்தொடுவாய் போன்ற கிராமங்களின் மக்களை 24 மணித்தியாலத்தில் வெளியேறுமாறு இலங்கை அரசபடை அறிவித்திருந்தது. அதனை நம்பிய தமிழ்மக்கள் தமது பூர்வீக நிலங்களில் இருந்து வெளியேறினர். எனினும் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறாத நிலையில் சிங்களக்குடியேற்றங்கள் தோற்றம் பெற்றன. பின்னர் போர் முடிவுற்று 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மீளக்குடி யேறிய தமிழ் மக்கள், தமது நிலங்கள் பறிபோனதை அன்றுதான் உணர்ந்திருந்தனர்.

19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி 67



அனுப்புபவர் பெயர்:..........................................

முழுமையான தபால் விலாசம்: ..................................

..............................................................

கையொப்பம்:.................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. கட்டுரை 4. சோம்பலில் வருவது 7. ஒன்றின் பிழிவு 8. மகாபாரதத்தில் ஒரு பாத்திரம். திருதராட்டினனின் மனைவி. 9. கணவன்- மனைவி 11. கிணற்றில் நீர் அள்ளும் கயிறு. 12. வரவேண்டிய நிலுவை 14. இதைத் தேடித்தான் அலைச்சல் 16. அரிசியின் வெளிக்கோது 17. தோல் வாத்தியம் 19. கமிஷன் 21. விரிவான 22. சிக்கல்/தடை/ நெருக்கடி

### மேலிருந்து கீழ்

1. நோன்பு 2. இரப்பு 3. நிகழும் விடயம் 4. ஒரு பாட்டின் முடிவை அடுத்த பாட்டின் ஆரம்பமாகக் கொள்ளும் திரட்டு 5. ஓர் உலகத் தலைவர் 6. இது இந்தியாவில் உள்ளது 10. திருமணமான பெண் 13. சந்திரன் 14. நேராகுதல் 15. வேறுபாடு நிலை 16. ஒத்தாசை 17. வதனம் 18. மயானம் 20. இன 21. உள்

**சொற்சிலம்பம் போட்டி 66 க்கான விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. அறிமுகம் 4. சுப 6. கரு 7. அதிக 8. சமத்துவம் 11. கடிது 12. சமிபாடு 14. வாசம் 16. புரளி 17. தம்பி 19. சாயம் 20. நட 21. வில் 22. குடும்பம்

**மேலிருந்து கீழ்**

1. அச்சகம் 2. முகத்துவாரம் 3. கருது 4. துதி 5. பகட்டு 7. அம்மி 9. மடி 10. வசம் 13. பாதம் 15. சளி 16. புயல் 17. தடம் 19. சாவி 20. நடு

**சொற்சிலம்பம் போட்டி இல.67**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

உதயன் சஞ்சீவி

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**28.01.2022 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக**

தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 66 இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
**ஸ்ரீ.லக்சன்,**
ஆண்டு -13
யாழ்.மத்திய கல்லூரி

**2 ஆம் பரிசு**
**ர.சுருதிகா,**
தரம் 9
யாழ்.வேம்படி மகளிர்

**3 ஆம் பரிசு**
**சு.தரண்யா,**
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு

**4 ஆம் பரிசு**
**ஸ்ரீ.துஷாரா**
மாணவி, 1 ஆம் வருடம்
மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்

**5 ஆம் பரிசு**
**க.தில்லை**
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி

# யாழ்ப்பாண வரலாறு

## 1505-1948 வரை

ந.பரமேஸ்வரன்

### பிரித்தானியர் காலம்

(1795- 1948)

அமெரிக்க சுதந்திரப்போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் நாடு பிடிப்பது தொடர்பாக, ஒல்லாந்துக்கும் பிரிட்டனுக்குமிடையே தகராறு எழுந்தது. மக்காட்னி (Lord Maccatny) பிரபு இலங்கையையும் பிரிட்டனின் குடியேற்ற நாடுகளின் பட்டியலில் சேர்த்துக்கொள்ளத் தீர்மானித்தார்.

**1. ஓகஸ்ட் - 1795**

கப்டன் ஸ்டியுவர்ட் (Captain Stewart) (சில நூல்களில் கேர்ணல் எனவும் உள்ளது) தலைமையில் 71.72.73 வது படையணிகள் திருகோணமலையில் தரையிறங்கின. ஓகஸ்ட் 31 ஆம் திகதி திருகோணமலை பிரிட்டிஷ் படைகளின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. செப்ரெம்பர் மாதம் கப்டன் ஸ்டியுவர்ட் தலைமையிலான படைகள் பருத்தித்துறையில் தரையிறங்கின. செப்ரெம்பர் 28 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்த ஒல்லாந்தர், பிரிட்டிஷாரிடம் சரணடைந்தனர். யாழ்ப்பாணம் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. பிரித்தானியர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போது போர்த்துக்கீசருக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே நடைபெற்றது போன்று போர் நடைபெறவில்லை. ஒல்லாந்தர், பிரிட்டனுடன் போர் புரியவில்லை. ஐரோப்பாவில் இடம்பெற்ற சில மாற்றங்கள் காரணமாக ஒல்லாந்து , பிரிட்டனுடன் நட்புறவை பேண விரும்பியமையே ஒல்லாந்தர் சரணடைந்தமைக்கான காரணம் என ஆங்கில வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். பிரித்தானியர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய நேரத்தில் யாழ்ப்பாணத்தில் கடும் புயல் வீசியது.

**3.12.1796**

ஜோன் ஜார்விஸ் ( John Jarvis)யாழ்ப்பாண கலெக்டராக (அரசாங்க அதிபர் பதவிக்குச்சமனான பதவி) நியமிக்கப்பட்டார்.

**16.2.1796**

கொழும்பு பிரிட்டிஷாரிடம் சரணடைந்தது. இலங்கையை நிர்வகிக்கும் பொறுப்பு சென்னையிலிருந்த ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டது.

**26.2.1796**

பிரிட்டிஷ் நிர்வாகத்தின் கீழ், முதல் தடவையாக முத்துக்குளிப்பு மேற்கொள்ளப்பட்டது. பிரிட்டிஷ் அரசுக்கு 60,000 பவுண்ஸ் (Sterling Pounds) வருமானம் கிடைத்தது.

இதே ஆண்டு வன்னி தனி அலகாக பிரிக்கப்பட்டது. யாழ்ப்பாணமும் வன்னியும் இரு இராணுவத் தளபதிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. மன்னாரை நிர்வகிக்கும் பொறுப்பு ஒரு அரசாங்க உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்பட்டது.

**1797**

பேர்ட்டன்க்கேஜ்பேர்ட்(Bertengajebert) (யாழ்ப்பாண கலெக்டராக நியமிக்கப்பட்டார். முத்துக்குளிப்பு மூலம் 1,10,000 பவுண்ஸ் வருமானம் கிடைத்தது.

**1798 ஒக்ரோபர் 12**

இலங்கை பிரிட்டனின் குடியேற்ற நாடாக பிரகடனம் செய்யப்பட்டது. பிரெட்ரிக் நோர்த் (Fedrig North) முதலாவது ஆளுநராக நியமிக்கப்பட்டார். திருகோணமலை கோட்டை இவரது பெயராலேயே பிரெட்ரிக் கோட்டை என அழைக்கப்படுகிறது.

இதே ஆண்டு டொன் நிக்லஸ் திசைவீரசிங்க முதலியார் யாழ்ப்பாண கச்சேரியில் தோம்புப் பராமரிப்பாளராக நியமிக்கப்பட்டார். இவர் ஒல்லாந்தரால் தோம்புப் பராமரிப்பாளராக நியமிக்கப்பட்டவர். தொடர்ந்து பிரித்தானியரின் கீழும் தோம்பு பராமரிப்பாளராக கடமையாற்றினார். ( டொன் என்பது பிரித்தானியரால் வழங்கப்பட்ட சேர் பட்டம் போன்று போர்த்துக்கீசர்,ஒல்லாந்தர் காலத்தில் வழங்கப்பட்ட ஒரு கௌரவ பட்டம், இவர்களின் பரம்பரையில் வந்த சிலர் தமது பெயருக்கு முன்னால் டொன் பட்டத்தை பாவித்து வருவதை இன்றும் காணக்கூடியதாக உள்ளது.)

**1799**

இலங்கையில் அடிமை இறக்குமதி தடை செய்யப்பட்டது.

**1799 செப்டம்பர் 23**

இலங்கையில் மதவழிபாட்டுச்சுதந்திரம் பிரகடனம் செய்யப்பட்டது; இலங்கையின் எந்தப்பாகத்திலும் யாரும் தாம் விரும்பிய மதத்தைப் பின்பற்றலாம் என பிரிட்டிஷ் அரசு அறிவித்தது. அத்துடன் கடுமையான (காட்டுமிராண்டித்தனமான)சித்திரவதைகள் இலங்கையில் தடை செய்யப்பட்டன.

**1800 ஜுன்**

வடமாகாணத்தில் கால்நடைகளிடையே தொற்றுநோய் பரவியதால் ஐந்தில் நான்கு பங்கு கால்நடைகள் இறந்தன. இதே ஆண்டு ஆளுநர் நோர்த் நகைவரியை அறிமுகம் செய்தார். மன்னாரில் வாழ்ந்தவர்கள் இந்த வரிக்கெதிராக கலகம் செய்தனர். மாதோட்டத்தில் வாழ்ந்த குமாரசிங்க முதலியாரே கலகத்தை தூண்டி விட்டார் எனக் கருதிய பிரிட்டிஷார் குமாரசிங்க முதலியாருக்கு கசையடித் தண்டனை வழங்கினர். மன்னாரில் பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக கலகத்தில் ஈடுபட்ட இருவரை தளபதி நோர்த் சுட்டுக்கொன்றதாக சில குறிப்புகளில் காணப்படுகிறது. அது இந்த கலகமாகத்தான் இருக்க வேண்டும்.

**1802 மார்ச் 15**

இலங்கை அரசாங்க வர்த்தமானி (Ceylon Government Gazette) மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டது. உலகில் முதல் முதலில் வெளிவந்த பருவ இதழ் என்ற பெருமையை இலங்கை அரசாங்க வர்த்தமானி பெறுகிறது.

**1802 மார்ச் 27**

ஒல்லாந்தர் இலங்கையை பிரித்தானியரிடம் கையளிக்கும் ஒப்பந்தம் பிரிட்டனில் கைச்சாத்திடப்பட்டது. இதே தினத்தில் டி ரினிடாட்டும் கையளிக்கப்பட்டது.

**1803 ஒகஸ்ட் 25**


பண்டாரவன்னியன் விடத்தல் தீவின் மீது தாக்குதல் நடத்தினான். மன்னரிலிருந்த மேஜர் வின்சென்ற் பண்டாரவன்னியனின் தாக்குதலை முறியடித்தான்.

(வரலாறு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மொழி

## 67



பசுமை கொழிக்கும்
இயற்கை வளங்களை
சிதைத்து அழித்து
இன்முகத்துடன்
சித்திரப்படம்
போடும் மனிதா – உன்
செயற்கை வனப்பும்
போலி முகமும்
பொய் முகத்தின்
வெளிப்பாடே.

**க.நாகேஸ்வரா**
**சண்டிலிப்பாய்**

இயற்கை அன்னை வரமாய்த் தந்த
மரங்களை வெட்டி அழித்து
செயற்கை அழகுதனில் நின்று
புகைப்படம் எடுக்க போஸ் கொடுப்போனே
இயற்கை சமநிலை நிலை தடுமாற
தன்வினை தன்னைச்சுடும் என்பதாய்
நாளை உன்னை சுட்டிடும் என்பதறிந்து
பேணிடு இயற்கைதனை

**ந.தனுபதன்**
பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்.

**பரிசு பெறும் கவிதை**

உண்ண உணவும் உன்னாலே
உறையும் இடமும் உன்னாலே
உணர்வுக்கு விருந்தும் உன்னாலே
உடலுக்கு மருந்தும் உன்னாலே
உன்னை அழித்து ஏது பயன்
உலகம் உன்னால் வேண்டும் கடன்
உன்னை நாட்டி தான் மரமே
உயிரைப் பெறுவோம் நாம் தினமே

**றெ. மலரிசை**
நமணங்குளம், மல்லாவி

மனிதர்களை வெட்டியும்
மனிதர்களை ஏமாற்றியும்
குப்பைகளைக் கொட்டியும்
கட்டடங்களைக் கட்டியும்
நாட்டை நாசமாக்கியது
மட்டுமன்றி வெளியே
நடிக்கும் அரசு

**சி.அக்ஷன்யா**
நல்லூர், யாழ்ப்பாணம்

பெரிய மரங்களை
வெட்டி பெரிய செலவை
செய்து படம் எடுத்து
பக்காவாக நடிக்கிறது
போலி அரசாங்காம்

**சி.ஹரினி**
நல்லூர், யாழ்ப்பாணம்

இன்றைய இளைய தலைமுறையே
முன்னோர் நாட்டிய மரங்களின் பலனை
இன்று நீங்கள் அனுபவிக்கிறீர்கள்
எனவே ஆளுக்கொரு மரம் நடுங்கள்
தவறின் அடுத்துவரும் தலைமுறை
மரவளத்தை புகைப்படத்தில் தான்
காணமுடியம்

**அ.தர்சினி**, வரணி வடக்கு

நிஜங்களை அழித்து விட்டு
நிழல்களின் முன்படப்பிடிப்பு
நீ வாழ வளி தந்தேன்
நான் வாழ வழி இல்லை
வினையாகினும் விதையாகினும்
விதைத்தவனே அறுப்பானாம்
காத்திருக்கிறேன்
உணர்வற்ற மனிதம் முன்
உயிரற்ற மரமாகிய நான்

**ர.சாங்கவி**
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்

என் குரல்வளை கடித்து
வெண்மேகத்தில் கரி பூசியவன்
காலநிலை மாறியதென
மாநாடு நடத்தி ஒப்பாரி வைக்கிறான்
என் நிழலை வரைந்து
நிழற்படம் எடுத்து
நிரபராதியென நிரூபிக்க நினைக்கிறான்
நன்றி கெட்ட மனிதன்

**ற.றஜீவன்**
அச்சுவேலி

இறைவன் கொடுத்த வரம்
இயற்கைக் காடுகளை
இரவிரவாக அழித்தீர் இன்று
செயற்கைக்காடு பண்ணி
செம்முகம் தனைக் காட்டி
செகத்தினை ஏமாற்றி
பசுமையின் பின்னணியில்
பல் தேசியத்திடம்
பல கோடி பெறும் திட்டமா?

**சி.சிவரம்யா**
வைமன் வீதி, நல்லூர்
யாழ்ப்பாணம்.

தேசியம் பேசிய ஊற்று இங்கே
தேர்தலில் வீசிய காற்று எங்கே
கானக வளங்களும் காலி இங்கே கபட
காட்சியில் பசுமைகள் போலி தங்க
வான்மழை நாணயம் வீழ்ச்சியிலே
நடப்புகள் யாவுமே தூக்கத்திலே
வாட்டிடும் வறுமையோ கடுகதியில் நாளை
வதைபடும் பரம்பரை கடன் பொறியில்

**வி.சாத்வீகன்**, முல்லை

மரம் அதனைத் தறிப்பது
உன் சிரம் அறுத்தல் போன்றாகும்
புகைப்படத்தில் காட்டிடும்
ஆடம்பரம் அதுவோ பெருமை?
மரம் இன்றி; மழை குன்றி;
பொருளாதாரம் அன்றி
திகைத்திடும் போதறிவாய்
விருட்சத்தின் அருமை.

**கனிவிழி.கா**
*வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை*

திரைக்குப் பின் அறுக்கப்படும்
மரங்களும் உயிர்களும்
திரைக்கு முன்னே செழிப்பாக
காட்டப்படும் போலிகள்
உலக நாடுகள் அறிந்த
இயற்கை வளமும்
பொருளாதார சிறப்பும் மிக்க
இலங்கை
இப்பெயர் ஒரு கண்துடைப்பே

**சி.விநோதினி,**
*நாவாந்துறை*

தாயில்லாப் பிள்ளையைப் போல்
தலையில்லா முண்டங்களாய்
தரணியில் மரங்கள்
மரங்களை அழித்தவனோ
மரப்பதாதைகளின் முன்
மக்களின் தலைவனாக.

***த.தன்ஜா***, *மிருசுவில்.*

**உங்கள் கவிதைகள் எங்கள்**
**கதவைத் தட்ட**
**வேண்டிய கடைசி நாள்:**
**28.01.2022**
*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: *sanjeevi@uthayan.com*
0773165555

தரையதில் மரமதை அழித்து காகித
திரையதில் மரமதை வடித்து கிழ
நரையுடன் நகைக்கின்றான் மனிதன்
நிரை நிரையான திரை மரங்களும்
கரையேறி தலைகாட்டுகின்றன
துரை இவர்கள் துருவித்துருவி
எடுத்திடம் புகைப்படத்திற்காய்

**இ.சிவசிறிதரன்**
அராலி மத்தி வட்டுக்கோட்டை

## 68



அன்று அண்ணன் வளர்த்த
அழகு வனச்சோலைதனை
அடியோடு அழித்தொழித்தார் அந்நியர்
நட்டதை வெட்டியொழித்து விட்டு
நரி நாடகம் நடக்கிறது
ஓவியப் படமதனை ஒளிப்படமெடுத்து
காடு வளர்ப்பதாய் காட்சிப்படுத்துகிறார்
காட்டாச்சி மன்னர்கள்.

**வி.பி.சிவேஸ்**
*தண்ணீரூற்று*

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி தெளிவாக முகவரியை குறிப்பிட்டு அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப்பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

**கவிதைக்கு பரிசு 1000/=**

சிரிக்கும் மனிதன்
ஊடகம் முன்னால்
எரிக்கும் மனிதனின்
நாடகம் பின்னால்
சிதைத்து விட்டு பூமியை
நகைத்து நிற்கிறான் நாணி
புகைத்து எழுந்து வானை
முட்டும் காட்சியையும் உன்
புகைப்படத்தினுள் பதித்திடு
சாட்சியாகட்டும் நாளை

**சி.விஜயராணி**
அராலி மத்தி
வட்டுக்கோட்டை

**கானகத்திலிருந்து தொடங்கி**
**வானகம் வரை உயர்ந்தோம்**
**வையகம் வியந்து நிற்க எம்**
**கானகம் நம் உயர்வுக்குக் காரணம்**
**இயற்கையை அழித்து விட்டு**
**செயற்கையுடன் சிரித்து**
**புகைப்படமெடுக்கின்றான்**
**சிதைக்கபட்ட மண்ணிலிருந்து**

**சி.தருண்,**
அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ நிலாந்தன்



# கோரிக்கைகளை முன்வைப்பது மட்டும் அரசியல் அல்ல

**இந்தியாவுக்கு கடிதம் எழுதிய கட்சிகளும் அதன் அடுத்த கட்டமாக இந்தியாவை எப்படித் தமிழ் மக்களுக்கு சாதகமாக தலையிட வைக்கலாம் என்று திட்டமிட்டு உழைக்க வேண்டும். ஏனெனில் கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக ஆனந்த சங்கரி கடிதங்களை எழுதியமை போன்றதல்ல இது.**

நாட்டில் செயற்கை உர இறக்குமதி நிறுத்தப்பட்டதால் பூக்களின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் திருமணம், பிறந்தநாள் போன்ற சுபகாரியங்களில் வழங்குவதற்கு பூச்செண்டுகளுக்கு தட்டுப்பாடு.மரண வீடுகளில் வைப்பதற்கு மலர் வளையங்களுக்கும் தட்டுப்பாடு. அதேசமயம் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை இயங்குவது நிறுத்தப்பட்டதால் மெழுகுவர்த்திகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு இருப்பதாக வியாபாரிகள் தெரிவிக்கிறார்கள். சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் உப உற்பத்திகளில் ஒன்றாகவே மெழுகுவர்த்தி வார்க்கப்படுவதாகவும் இப்பொழுது அதற்கும் தட்டுப்பாடு வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம், எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் நீர்நிலைகளில் நீர் குறைவடைந்துள்ளமை ஆகிய காரணங்களினால் 4 மணிநேர மின்வெட்டை எதிர்பார்ப்பதாக இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கம் எதிர்வு கூறுகின்றது. எனவே மின்வெட்டு நேரத்தில் பயன்படுத்துவதற்கு மெழுகுவர்த்திகளுக்கும் தட்டுப்பாடு வரும்போலிருக்கிறது. இப்படியாக பூச்செண்டுகளுக்கும் மலர்வளைங்களுக்கும் மெழுகுவர்த்திகளுக்கும் தட்டுப்பாடான ஓர் அரசியல் பொருளாதாரச் சூழலில் தை பிறந்திருக்கிறது.

தை பிறந்தால் வழிபிறக்கும் என்பார்கள். ஆனால் தை பிறந்த பொழுது நாட்டில் பெரும்பாலான வழிகள் மூடப்பட்டிருப்பதாகவே தெரிகிறது. தை பிறந்த கையோடு இந்தியா ஒரு தொகுதி பணத்தை கடனாக வழங்கியிருக்கிறது. அது அரசாங்கத்துக்கு இரண்டு மாதங்களுக்காவது



மூச்சு விடும் அவகாசத்தை கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா மேலும் கடன் உதவிகளை. வழங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வாரம் தமிழ்க் கட்சிகள் கூட்டாக ஒரு ஆவணத்தை தயாரித்து அதனை இந்தியத் தூதரகத்திடம் கையளிக்கவிருந்தன. ஆனால் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் அவசர அவசரமாக டில்லிக்கு போக வேண்டி இருந்தபடியால் ஆவணம் கையளிக்கப்படவில்லை. அது பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டது.

தமிழ்க் கட்சிகளின் கடிதத்தைப் பெற்றுக்கொள்ளாமல் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஏன் டில்லிக்கு பறந்தார் என்று பல்வேறு விதமான ஊகங்கள் எழும்பின. டில்லிக்கு போன தூதுவர் திரும்பி வந்த கையோடு மத்திய வங்கியின் ஆளுநரைச் சந்தித்து இந்தியாவின் நிதி உதவியை உறுதிப்படுத்தியுள்ளார். ஆயின், அந்த நிதியுதவியை அவசரமாகப் பெற்றுக்கொடுப்பதற்காகத்தான் அவர் புதுடில்லிக்கு பறந்தாரா? என்ற ஓர் ஊகமும் உண்டு. ஏனெனில் நாடு அதன் படுகடனில் ஒரு பகுதியை அடைப்பதற்கு கடந்த 18 ஆம் திகதி வரையிலும் ஒரு காலக்கெடு இருந்தது. அந்தக்காலக்கெடுவுக்குள் இலங்கை அரசாங்கத்துக்கு சீனா அல்லாத வேறு எந்த நாடாவது உதவி வழங்கத் தவறினால், அரசாங்கம் சீனாவைச் சரணடைவதைத் தவிர வேறு வழி கிடையாது என்றிருந்த ஒரு நிலையில் அவ்வாறு அரசாங்கம் சீனாவிடம் உதவி கேட்டுப் போவதைத் தடுக்கும் நோக்கத்தோடு இந்தியத் தூதுவர் அவசர அவசரமாக டில்லி சென்று ஒரு தொகுதிக்கடனை கொழும்புக்கு வழங்கியதாகவும் ஊகிக்கப்படுகிறது.

அதேசமயம் தமிழ்க் கட்சிகள் கூட்டாகத் தயாரித்த ஆவணத்தைப் பெற்றுக்கொள்வதில் காட்டிய அக்கறையை விடவும் கொழும்பின் கடனை அடைப்பதில்தான் புதுடில்லி அதிக கவனம் செலுத்தியது என்றும் ஒரு விமர்சனம் உண்டு. தமிழ்க் கட்சிகளின் கடிதத்தை கொடுப்பதற்கு காலவரையறை இல்லை. ஆனால், இலங்கை அரசாங்கம் அடைக்க வேண்டிய கடன்களுக்கு ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு காலக்கெடு இருந்தது. இரண்டையும் ஒப்பிட்டு வியாக்கியானம் செய்ய முடியாது. மேலும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே அரசுக்கும், அரசுக்கும் இடையிலான கட்டமைப்புசார் உறவு உண்டு. அந்த உறவின் பிரகாரம் ஓர் அரசு இன்னொரு அரசைப் பாதுகாக்கும்.

இந்தியாவுக்கு ஆவணத்தைத் தயாரித்த கட்சிகளை விமர்சிக்கும் தரப்புகள் இந்த விடயத்தை வேறுவிதமாக வியாக்கியானம் செய்கின்றன. தமிழ்க் கட்சிகள் தயாரித்த ஆவணத்தை வைத்து இந்தியா இலங்கையுடனான தனது பேரத்தை அதிகப்படுத்திவிட்டது என்றும், அண்மையில் திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களில் ஒரு பகுதி தொடர்பான உடன்படிக்கைக்கு அதுவும் ஒரு காரணம் என்றும் கூறப்படுகிறது. அதாவது தமிழ்க் கட்சிகள் இந்தியாவை நோக்கிச் செல்வதை இந்தியா தனக்கு சாதகமாகக் கையாண்டு தன்னுடைய காரியங்களை முடித்துக் கொள்கிறது என்பதே அந்தக் குற்றச்சாட்டாகும். ஏற்கனவே இந்திய, இலங்கை உடன்படிக்கை அவ்வாறுதான் செய்யப்பட்டது. அமெரிக்க சார்பு ஜெயவர்த்தனவை வழிக்குக் கொண்டுவருவதற்காக சோவியத் சார்பு இந்தியா, தமிழ் இயக்கங்களுக்கு பயிற்சியையும் ஆயுதங்களையும் பின்தள வசதிகளையும் வழங்கியது.

அதன்மூலம் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தி கொழும்பை வழிக்கு கொண்டு வந்து இலங்கைத்தீவில் இந்தியா என்றென்றும் தனது மேலாதிக்கத்தை சட்டப்படி நிலைநிறுத்த தேவையான ஓர் ஆவணத்தை - அதுதான் இந்திய-இலங்கை உடன்படிக்கையை - எழுதிக் கொண்டு விட்டது. எனவே இந்தியா எப்பொழுதும் கொழும்பைப் பணிய வைப்பதற்கான அழுத்தப் பிரயோக சக்தியாகத்தான், கருவியாகத்தான் தமிழ் மக்களைக் கையாண்டு வருகிறது என்றும் அவர்கள் விமர்சிக்கிறார்கள்.

இந்த இடத்தில் இந்தியாவுக்கு ஒரு பொது ஆவணத்தை வழங்கிய கட்சிகள் தமது செயற்பாடுகளின் மூலம் நிரூபிக்க வேண்டிய ஓர் அம்சம் இருக்கிறது. அது என்னவெனில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்தக்கட்சிகள் மீது சுமத்தும் குற்றச்சாட்டில் உண்மைகள் இல்லை என்பதனை செயல் மூலம் நிரூபிப்பதுதான். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மேற்படி ஆவணத்தை தயாரித்த கட்சிகளை இந்தியாவின் கைக்கூலிகள் என்றும் இந்தியாவின் நிகழ்ச்சி நிரலின்படி இயங்குபவை என்றும் குற்றஞ்சாட்டியுள்ளது. இந்நிலையில் 'இந்தியா சொல்லித்தான் அப்படி ஓர் ஆவணத்தை தாங்கள் தயாரித்தோம் என்று சொல்லப்படுவது பொய்' என்பதனை நிரூபிக்கவேண்டிய ஒரு கட்டாயம் மேற்படி கட்சிகளுக்கு உண்டு. அத்தோடு தாங்கள் தயாரித்த ஆவணம் இனப்பிரச்சினைக்கான தீர்வை ஒற்றையாட்சிக்குள் பெட்டி கட்டிவிடவில்லை என்பதையும் நிரூபிப்பதற்காக உழைக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் மேற்படி கட்சிகளுக்கு உண்டு.

கிடைக்கும் தகவல்களின்படி மேற்படி கட்சிகள் மேலும் சில ஆவணங்களைத் தயாரிக்க இருப்பதாகத் தெரிகிறது. அதன்படி பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அகற்றவேண்டும் என்று கேட்டு ஒரு கூட்டுக் கோரிக்கையை அவர்கள் வரைந்து வருவதாகத் தெரிகிறது. குறிப்பாக அடுத்த ஜெனிவாக் கூட்டத்தொடர் ஏறக்குறைய ஒரு மாதத்தில் தொடங்கப்போகிறது. இவ்வாறான ஒரு காலப் பின்னணியில் அப்படி ஒரு கோரிக்கையை முன்வைப்பது அவசியம் என்றும் மேற்படி கட்சிகள் கருதுகின்றன. தவிர ஐரோப்பிய ஒன்றியம் 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகையை இலங்கைக்கு வழங்குவதாக இருந்தால், பயங்கரவாத தடைச் சட்டத்தைத் திருத்த வேண்டும் அல்லது அகற்ற வேண்டும் என்று நிபந்தனை விதித்திருந்தது. இது தொடர்பான இறுதி முடிவை பெரும்பாலும் வரும் ஏப்ரல் மாத மளவில் ஐரோப்பிய ஒன்றியம் எடுக்கலாம் என்று தெரிகிறது. எனவே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என்ற கோரிக்கையை எல்லாக் கட்சிகளும் ஒன்றாகக் கூடி முன்வைப்பதன் மூலம் அரசாங்கத்தின் மீது அதிகரித்த அழுத்தங்களைக் கொடுக்கலாம் என்று அவை நம்புகின்றன.

அது சரிதான். அப்படி ஒரு கூட்டுக் கோரிக்கை கட்டாயமாக முன்வைக்கப்படவேண்டும். அதேசமயம், இந்தியாவை நோக்கி முன்வைக்கப்பட்டிருக்கும் அந்தக் கூட்டுக் கோரிக்கை வெறும் கடிதமாக முடியக் கூடாது. அது. அதன் அடுத்தடுத்த கட்டங்களுக்கு செயல்பூர்வ வடிவத்தை எடுக்க வேண்டும். கடிதம் எழுதியதோடு மேற்படி கட்சிகளின் பணி முடிந்துவிடவில்லை. கடிதம் எழுதுவது மட்டுமே அரசியல் செயற்பாடாக இருக்கமுடியாது. இருக்கவும் கூடாது. கடிதம் எழுதிய கட்சிகளுக்கு அந்தக் கடிதங்களை நோக்கி உழைக்க வேண்டிய கூட்டுப் பொறுப்பு இருக்கிறது.

உதாரணமாக, கடந்த மார்ச் மாதம் ஜெனிவாக் கூட்டத்தொடரை முன்னிட்டு மூன்று கட்சிகள் ஒன்றாக இணைந்து ஓர் ஆவணத்தை தயாரித்து ஜெனிவாவுக்கு அனுப்பின. அதன் விளைவாக மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கை ஒப்பீட்டளவில் கடுமையானதாகக் காணப்பட்டது. ஆனால் ஐ.நா. தீர்மானம் வழமைபோல இலங்கை அரசாங்கத்துக்கு "என்கேஜ்" பண்ணத் தேவையான இடைவெளிகளை வழங்கியது. கடிதத்தை எழுதிய கட்சிகள் பின்னர் தங்களுக்கிடையே முட்டி மோதிக் கொண்டன.

குறிப்பாக அந்தக்கடிதத்தில் பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே அதாவது, மனித உரிமைகள் ஆணையத்துக்கு வெளியே கொண்டு போக வேண்டும்; ஐ.நா. பொதுச்சபை, பாதுகாப்புச் சபை போன்ற ஐ.நா.வின் ஏனைய மன்றங்களை நோக்கி கொண்டு போகவேண்டும்; அனைத்துலக நீதிமன்றம் போன்ற கட்டமைப்புக்களை நோக்கிக் கொண்டு போகவேண்டும் என்ற கோரிக்கையை அதிகம் வலியுறுத்தியது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தான். ஏனைய கட்சிகளும் அதை ஏற்றுக்கொண்டு அந்தக்கடிதத்தை தயாரித்தன. கடிதம் அனுப்பப்பட்டது கடந்த ஜனவரி 21ஆம் திகதி.

இப்பொழுது அடுத்த ஜனவரி வந்துவிட்டது. மறுபடியும் ஒரு ஜெனிவாக் கூட்டத்தொடர் வருகிறது. இந்த ஓராண்டு காலகட்டத்துக்குள் மேற்படி கடிதத்தில் தாம் முன்வைத்த கோரிக்கையை செயல்படுத்தும் நோக்கத்தோடு மேற்படி கட்சிகள் குறிப்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்னென்ன செய்திருக்கிறது என்பதனைப் பட்டியலிட்டுக் காட்டவேண்டும்.

அதேபோல இந்தியாவுக்கு கடிதம் எழுதிய கட்சிகளும் அதன் அடுத்த கட்டமாக இந்தியாவை எப்படி தமிழ் மக்களுக்கு சாதகமாக தலையிட வைக்கலாம் என்று திட்டமிட்டு உழைக்க வேண்டும். ஏனெனில் கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக ஆனந்தசங்கரி கடிதங்களை எழுதியமை போன்றதல்ல இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



○ கருணை ரவி

16

பூறாட்டி வாசல் படிக்கட்டில் இருந்தான். முகம் வறண்டிருந்தது. கட்டிவைத்த கருவாடுகளை கொண்டுபோவதற்கு சைக்கிள் இல்லை. கந்தவிக்கிழவன் நடந்து நெல்லியடிக்குப் போனார். லக்சுமித் தியேட்டர் மூடியபடியே இருந்தது. சங்குண்ணி கடையில் ஒரு பிளேன் ரீயைக் குடித்துவிட்டு யோசித்துக்கொண்டிருந்தார்.
துன்னாலை வீரமணி, கிராமத்து சிவக்கிளி, அத்தாய் ஆறுமுகம் எல்லோரையும் விசாரித்தார். அவர்கள் சிற்றம்பலம் காயம் என்ற கவலையில் இருந்தார்கள். சைக்கிள் கதையைக் காதில் எடுக்கவில்லை. கந்தவிக் கிழவன் வீட்டுக்கு வந்தார்.
பூங்கொடி தேநீரை பூறாட்டிக்குக் கொடுத்தாள். நிருபனுக்கு பாலை போச்சியில் கொடுத்து விட்டு தேநீருடன் நித்தியைத் தேடினாள். நித்தியைக் காணவில்லை. அவள் கந்தவிக்கிழவனுக்குப் பயந்து கனகம் வீட்டு கிணற்றடியில் இருந்தான். பூங்கொடி நித்திக்கு தேநீரைக் கொடுத்துவிட்டு வந்தாள். பூறாட்டி தேநீர் குடித்துக்கொண்டிருக்க பூங்கொடி அவனுக்குப் பக்கத்தில் வந்திருந்தாள். பூறாட்டி குடித்த குவளையைக் கீழே வைத்து விட்டு பூங்கொடியைப் பார்த்தான். கன்னத்தில் வழிந்து கிடந்த முடியை எடுத்து குடும்பியோடு இணைத்தாள். காது ஓட்டைகள் பூறாட்டியின் கண்ணில் பட்டன. அவள் கடைசியாக வைத்திருந்த நகைகள் என்றால் அவள் போட்டிருந்த தோடு மட்டும்தான். அந்தத் தோட்டை அடைவு வைத்து எடுத்த சைக்கிளை நினைத்தான். சைக்கிள் எடுத்து ஒருமாதம் கூட ஓடவில்லை. அதை பிலிப்புக்குக்

## சஞ்சீவி தொடர் கதை



கொடுத்த கவலையோடு பூங்கொடியைப் பார்த்தான். கண்களை வெட்டாது கொஞ்சநேரம் அவளின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்க அவளின் கண்குழிக்குள் நீர் பெருகியது. அப்படியே பூறாட்டியின் மடியில் சரிந்தாள்.
பூறாட்டி அவளின் கன்னத்தை வருடிக்கொண்டிருந்தான்.
அவள் இழந்த நகைகள் எல்லாவற்றையும் எடுப்பேன் என்ற நம்பிக்கையில்தான் சைக்கிளை எடுத்தான். அந்த சைக்கிளால் உழைக்கத் தொடங்க பிலிப்பின் கையில் சைக்கிள் போனது. இனி எந்தக் கஷ்டங்களையும் பாராது கால்நடையாக வியாபாரத்தை தொடங்கவேணும் என நினைத்துக் கொண்டு பூங்கொடியை மடியில் இருந்து தூக்கினான்.
சைக்கிளில் கொண்டுபோக வைத்திருந்த கருவாட்டுப் பையைப் பார்த்தான். கிட்டப்போய் தூக்கினான். "போட்டு வாறன். இவளவத்தையும் வித்துப்போட்டுத்தான் வருவன்" பூங்கொடிக்குச் சொன்னான். "தூக்கிக் கொண்டு என்னெண்டு நடக்கப்போறியள்? கொஞ்சத்தை குறைச்சுப்போட்டு போங்கோ..."
"ஐயோ... தாத்தா அடிக்காதையுங்கோ... அம்மா ஓடியந்து தாத்தாவைப் பியுங்கோ..." நித்தியின் கத்தல் அவளைப் பிழிந்தது. தூக்கிய கருவாட்டுப் பையை அப்படியே போட்டு விட்டு, பூறாட்டி கோடிப்பக்கம் ஓடினான்.
பூங்கொடி அவிழ்ந்து தூங்கிய முடியை கோலி குடும்பியாய் கட்டிக் கொண்டு பூறாட்டியை முந்திக்கொண்டு போனாள். கிழவன் கொட்டனால் முதுகில் அடித்துவிட்டு மூச்சிழைக்க நெஞ்சைப் பிடித்துக்கொண்டு நின்றார். பூங்கொடியைக் கண்டதும் இடுப்புக்குள் இருந்த புத்தகமொன்றை வீசியெறிந்தார். புத்தகத்தில் இருந்த இயக்கத்தின் துண்டுப்பிரசுரங்கள் காற்றுக்குப் பறந்தன. "பிள்ளையள் [illegible] ஒழுங்கா இருக்கோணும். இந்த வயசிலை கூடாத சவட்டங்கள்.

மரியதாஸின்ரை காவாலியோடை தோளிலை கைபோட்டுத்திரிஞ்சு மச்சான் பொழியிறது... பொய் சொல்லி சைக்கிளை வாங்கிறது... பள்ளிக்கூடம் போகாம இயக்கங்களோடை திரியிறது..." வாய்க்கு வந்தபடி பேசிக்கொண்டு நிற்க, பூங்கொடி நித்தியை அணைத்தாள். அவனின் கையைப் பார்த்தாள். முழங்கை வீங்கி யிருந்தது.
"அவன் என்ன செய்தாலும் உனக்கென்ன?" பேசிக்கொண்டு கிழவனின் கொட்டனைப்பறித்து எறிந்தாள். கிழவன் கொஞ்ச நேரம் அவளையே பார்த்தார். அவள் இப்படி ஒரு நாளும் கிழவனைப் பேசியதில்லை. நீ, நான் என்று மரியாதையற்றுக் கதைத்ததுமில்லை. கிழவன் என்ன சொன்னாலும் அதைக் கேட்பாள். அவளின் பேச்சை கிழவனால் தாங்கிக்கொள்ள முடிய வில்லை. எறிந்த கொட்டனைப் போய் எடுத்தார். தனது அறைக்குப் போனார். தனது உடுப்புகளை ஒரு உரப்பையில் கட்டிக்கொண்டு வீட்டுக்கு வெளியே போனார். "மாமா... எங்கை போறியள்?"
பூறாட்டி குறுக்கே போய் மறித்தான். அவர் எதுவும் பேசவில்லை. தூக்கிய முடிச்சை கேற்றடியில் வைத்து விட்டு வேப்பமரத்

17

தடிக்குப் போய் சூலத்தைப் புடுங்கினார். பூங்கொடி கிழவனைத் தேடவில்லை. கொஞ்ச நாட்களால் வருவார் என நினைத்தாள். சமைக்கும்போதும் தேநீர் அருந்தும் போதும் அவளுக்கு கிழவனின் ஞாபகம் வரும். அந்த வேளைகளில் கிழவனைப்போய் தேடவேணும் போலிருக்கும்.
பூறாட்டி காலையில் கருவாடோடு போனால் மாலை வீட்டுக்கு வருவான். அவனும் போகுமிடங்களில் கிழவனைத் தேடுவான். உடுப்பிட்டி,மானாண்டிச்சந்தை, புறாப்பொறுக்கி எல்லா இடங்களிலும் கிழவனை விசாரிப்பான். எவரும் கண்டதாகச் சொல்வதில்லை. கிழவன் போனநாளிலிருந்து கனகமும் வீட்டுக்கு வருவதில்லை. கிழவன் நிற்கும் மட்டும் அடிக்கடி மாலைகள் கொண்டுவந்து வேலுக்குச் சாற்றுவாள். ஒரு நாளைக்கு கருவாடு கொண்டு போகாமல் நின்று கிழவனைத் தேடவேணும் என பூறாட்டி [illegible] ஊரில் [illegible] வீடு, கடலை, கடற்கரை எல்லா இடமும்

தேடினான்.
"அவர் தற்கொலை செய்யமாட்டார். தற்கொலை செய்யிறதெண்டால் ஏன் சூலத்தைக் கொண்டு போறார்?" அந்தோனி சொன்னான்.
"கோயில் வழிய தேடிப்பார். நானும் போறநேரம் கோயிலுகளைப் பாக்கிறன்" பூறாட்டிக்கு மரியதாஸ் சொன்னான்.
மரியதாஸ் ஊரில் என்ன நன்மை, தீமைகள் நடந்தாலும் தன் வீடுமாதிரி நடப்பான். கோபதாபங்களை வைத்துச் சாதிக்கமாட்டான். மனித நேயத்துடன் நடப்பான்.
மரியதாஸ் பிலிப்பிடம் சொன்னான் தான் குடத்தனைக்குப் போய் வரும்போது வல்லிபுரக்கோயிலில் பார்த்ததாகவும் கிழவன் அங்கும் இல்லையென்று.
"மரியதாஸ் வேதம்தானே... கோயிலுக்குள்ளை போயிருக்க மாட்டான். அங்கினேக்கை வெளியிலை கண்ணத் துழாவிவிட்டு வந்திருப்பான். நீபோய் வடிவா உள்ளையெல்லாம் தேடு" பிலிப்பு பூறாட்டிக்குச் சொன்னான். பூறாட்டி வீட்டுக்கு வந்ததும் பூங்கொடியிடம் கேட்டான்
"வேதக்காரர் சைவக்கோயிலுக்குள்ளை போறேலையாம்... அப்ப பிள்ளயாற்றை மோதகத்தையும் தின்னக்கூடாதல்லே"
"ஏனுதைச் சொல்லுறியள்?"
"சைவக் கோயிலுக்கை வேதக்காரர் உள்ளுக்கை போறேலையெண்டு பிலிப்பு சொன்னவர். அதுதான் உன்னக்கேக்கிறன்"
சொல்லிவிட்டு கருவாட்டுப் பையை கீழை வைத்தான்.
"நீங்கள் காதிலை பூவை வைச்சுக்கொண்டு ஏன் கருவாட்டைத் தொடுறியள்?"
பூங்கொடியின் கேள்வி அவனை யோசிக்க வைத்தது.

பூறாட்டி குடித்த குவளையைக் கீழே வைத்து விட்டு பூங்கொடியைப் பார்த்தான். கன்னத்தில் வழிந்து கிடந்த முடியை எடுத்து குடும்பியோடு இணைத்தாள். காது ஓட்டைகள் பூறாட்டியின் கண்ணில்பட்டன. அவள் கடைசியாக வைத்திருந்த நகைகள் என்றால் அவள் போட்டிருந்த தோடு மட்டும்தான்.

"பூறாட்டி..." கனகம் வேலியில் நின்று கூப்பிட்டாள். பூங்கொடி போனாள்.
"கிழவன் சந்நதியிலை இருக்காம். போய்க் கூட்டிக்கொண்டு வாங்கோ..." சொல்லிவிட்டு போனாள். கனகம் இப்போது அந்நியமாய் போய்விட்டாள். கிழவன் வீட்டை விட்டுப்போனது ஊருக்கே பிடிக்கவில்லை. [illegible]யும் பூறாட்டியாலும்தான் [illegible] வீட்டை விட்டுப்போனது என்று எவரும் சொல்லவில்லை. நித்தியின்

பழக்கங்களால் அவர் வீட்டை விட்டு வெளிக்கிட்டதாகவும் எவரும் கதைக்கவில்லை.
நித்தி பொடியளோடு கூடி வீட்டுக்கு வர நேரம் செல்வதே தவிர குடிப்பழக்கம், சிகரெட் பழக்கம் எதுவும் அவனிடமில்லை. பூங்கொடி அவனை திருத்துவதில்லை. எங்கு சென்றாலும் நேரத்துக்கு வா என்பாள். பூறாட்டி சொல்வான் பொடியள் இந்தவயதில் அப்பிடித் தான் என்று. இவைகள் ஒன்றும் கிழவனுக்குப் பிடிக்காத போதும் வீட்டில் இருந்தார். ஆனால், கிழவனின் கொட்டனைப் பறித்து எறிந்து, 'உனக்கென்ன?' என்று கேட்டதுதான் கிழவனுக்குப் பிடிக்கவில்லை. மயிர்கொட்டிப் புழுமாதிரி அந்தவார்த்தைகள் அவரில் ஊர அவர் வீட்டைவிட்டு வெளிக்கிட்டார்.
பூங்கொடி நித்தியைத் தேடினாள். நித்தி வீட்டில் இல்லை. மாட்டுக்கொட்டிலுக்குப் போனாள். அங்கே பேப்பர் பார்த்துக் கொண்டிருந்தான். அவளைக்கண்டதும் பேப்பரை கீழேபோட்டு அதை அருகிலிருந்த கோழியடைக்கும் பெட்டியால் மூடினான். அவளுக்குக் குழப்பமாக இருந்தது. தன்னைக்கண்டதும் ஏன் பேப்பரை மறைத்தான்? திரும்பும்போது அதையே நினைத்தாள்.
நித்தி வந்து தோசை சாப்பிட்டுக்கொண்டிருந்தான். பூங்கொடி மாட்டுக்கொட்டிலுக்குப் போனாள். பெட்டியை எடுத்துப் பார்த்தாள். எதுவுமில்லை. பார்த்த பேப்பர்களை ஒளித்துவிட்டு வந்திருக்கிறான் என நினைத்தவள் எல்லா இடமும் தேடினாள். வேலிகளையும் பார்த்தாள். இறுதியாக வைக்கோல் கற்றைத் தூக்கினாள். பேப்பர் இருந்தது. எடுத்துப் பார்த்தாள்.
பேப்பர்களைப் பார்த்ததும் பயந்தாள். இயக்கப் பேப்பர்களை வைத்திருந்தவர்களை ஆமி பிடித்துச் சென்றார்கள். எவரையும் விட்டதில்லை. சிலரை சுட்டுக்கொன்றார்கள். கிழவன் சொல்லியும் திருந்தாதவன் தான் சொல்லித் திருந்துவானா? என நினைத்தபடி பேப்பர்களை அப்படியே எடுத்து அடுப்பில் போட்டாள்.
"பூங்கொடி..."
பிலிப்பு கூப்பிட்டான். பிலிப்பு இப்படி படலையில் நின்று கூப்பிடுவதில்லை. தன்வீடு மாதிரி உள்ளுக்கு வந்து கதைப்பான். பூங்கொடி தேநீர் கொடுக்க குடித்துவிட்டுச் செல்வான். இன்று வீடு அவனுக்கு துடக்கு. ஏனப்படி பிலிப்பு? அவளுக்கு கனகத்தின் செயலும் பிலிப்புவின் செயலும் விடைகாண முடியாத புதிராக இருந்தது.
"பூங்கொடி..."
மீண்டும் கூப்பிட்டான். "வாங்கோ" வாசலில் அவனை எட்டிப்பார்த்துச் சொன்னாள். பிலிப்பு வரவில்லை.
"வர விரும்பேலையெண்டா வந்த விசயத்தைச் சொல்லுங்கோ?"
இப்படிக் கேட்கவேணும் போலிருந்தது அவளுக்கு. ஆனால் கேட்கவில்லை.
கோபம் உச்சியில் வளையமிட வார்த்தைகளில் கோபத்தை சுவறவிடவில்லை. தேனைக்கலந்து உதட்டினால் "வாங்கோ" என்ற வார்த்தையை உறுட்டினாள். அது அவனுக்கு இனிக்கவில்லை.
"உள்ளுக்கை வாறதுக்கு நீங்கள் நடக்கேலை. நாங்கள் வணங்கிற தெய்வத்தின்ரை சூலத்தைப் புடுங்கிக் கொண்டு போன மனிசரல்லே...?"
பிலிப்பின் பதிலில் இருந்து வீட்டுக்கு வராத கனகத்தினதும், பிலிப்பினதும் ஆத்திரம் அவளுக்கு விளங்கியது. 'நித்தியின் பழக்கவழக்கங்கள்தான் கிழவனை வெளிக்கிட வைத்தன என எல்லோரும் நினைத்திருப்பார்கள். இதனால் நித்தியின் எதிர்காலம் அவமானங்களால் கட்டப்படுகிறது' எனக் கலங்கிய அவளுக்கு பிலிப்புவின் வார்த்தை இரசம் மாதிரி இருந்தது. படிக்கட்டால் இறங்கி பிலிப்புவிடம் போனாள்.
"அடைவு வைச்ச தோட்டை எடுங்கோ... எனக்கு இப்ப காசு வேணும். ஒரு கிழமைக்குள்ளை [illegible] வித்துப்போடுவன்"


(வருவாள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1898, 1899 ஆம் ஆண்டுகளில் இரண்டு தடவைகள் யாழ்ப்பாணத்தில் மிக நீண்ட உயர்நீதிமன்ற வழக்காக நடைபெற்று முடிந்த அழகம்மா கடத்தல் வழக்கு அந்தக்கால யாழ்ப்பாணத்தின் பண்பாட்டையும் நிலைமைகளையும் விளங்கிக் கொள்ள இன்றும் உதவுவதாக உள்ளது.

# அழகம்மா 3

## கடத்தல் வழக்கு



# கடத்தலும் கைதும்



○ தி.கோபிநாத்

அந்தக்கால யாழ்ப்பாணத்தில் போக்குவரத்து வசதிகள் குறைவானவையாக இருந்தபோதும் குடும்பங்களுக்கிடையில் உறவுகள் நெருக்கமாகவே இருந்தன. இதனால் மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது குறுகிய காலத்திலேயே தெரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அவ்வகையில் இராசையா அழகம்மாவை எப்படியேனும் திருமணம் செய்துகொள்ள வேண்டும் எனத் திட்டமிடுவது நயில்ஸ் குடும்பத்துக்குத் தெரிந்திருந்தது. அது போல அழகம்மாவுக்குத் திருமண ஏற்பாடுகள் செய்யப்படுவதனை இராசையாவும் அறிந்து கொண்டான்.

மாப்பிள்ளை தேடுவதில் நயில்ஸ் குடும்பத்தினருக்கு அதிக சிரமம் இருக்கவில்லை. போதகரின் சகோதரிக்கும் காவல் துறை நீதிவான் தம்புவுக்கும் பிறந்த பிள்ளைகளில் ஒருவரை அழகம்மாவுக்குத் திருமணம் செய்விக்க அவர்கள் முடிவெடுத்தனர். "அல்பிரட் தம்பு. குடிவகை விற்பனை செய்யும் இந்த எதிரியை( இராசையாவை) விடவும் என் மகளுக்கு உகந்த கணவனாக விரும்பத்தக்கவர்" என போதகர் வழக்கின் போது குறிப்பிட்டிருந்தார். தம்புவின் மகன் குருசாமியை அழகம்மாவுக்குக் கட்டிவைக்கத் திட்டமிட்டிருந்தனர் என வழக்கின்போது இராசையா சாட்சியமளித்திருந்தான். குறிப்பாக யார் என்பதனை இப்போது அனுமானிக்க முடியாவிடினும் தம்புவின் மகன்களில் ஒருவன் அழகம்மாவைத் திருமணம் செய்வதாக இருந்தான் எனப்து தெளிவாகிறது.

அழகம்மாவுக்குத் திருமண ஏற்பாடுகள் நடைபெறுவதை அறிந்த இராசையா பதற்றமானான். உறவினர், நண்பர்கள் ஊடாக நயில்ஸ் குடும்பத்தினரது நடமாட்டங்களைக் கண்காணிக்கத் தொடங்கினான். அழகம்மாவுக்கென ஒரு தாலி செய்யவும் ஏற்பாடுகளை மேற்கொண்டான். சந்தர்ப்பம் கிடைக்கும்போது அவளைத் தூக்கிச் சென்றேனும் திருமணம் செய்வதாக அவனது திட்டம் இருந்தது.

ஆனால் இராசையா திருமணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்து முடிக்க முன்னரேயே , அதிர்ச்சியளிக்கும் செய்தி வந்துசேர்ந்தது. 1898 ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதியன்று தம்புவின் வீட்டில் விளையாடிக் கொண்டு நின்றிருந்த அலெக்சாந்தரின் மகன், அதாவது இராசையாவின் மருமகன், தம்பு குடும்பத்தினரும் நயில்ஸ் குடும்பத்தினரும் 21ஆம் திகதியன்று ஊர்காவற்றுறைக்குப் புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக அறிந்து வந்து சொன்னான். அன்றைய தினம் நயில்ஸ் போதகரும் தம்புவின் வீட்டில் ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார். இரண்டு குடும்பமும் இணைந்து பயண ஏற்பாடுகளைச் செய்வது அழகம்மாவை ஊர்காவற்றுறைக்குக் கூட்டிச் சென்று தம்புவின் மகனுக்குத் திருமணம் செய்விக்கவே என்று இராசையா புரிந்து கொண்டான்.

கடத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தான். இராசையாவுக்கு உதவியாக நண்பர்கள் திரண்டனர். வீடு புகுந்து கடத்துவது ஆபத்தானது; குடிமனைகளுக்குத் தொலைவான இடமென்றால் இலகுவானது. அவ்வகையில் அவர்கள் ஊர்காவற்றுறைக்குச் செல்லும் வழியிலேயே கடத்துவதாகத் திட்டம் தீட்டப்பட்டது. நயில்ஸ், தம்பு குடும்பங்களது நடமாட்டங்கள் கண்காணிக்கப்பட்டன. கடத்திய பின்னர் என்ன செய்வது என்றும் ஆலோசிக்கப்பட்டது.

1897 ஏப்ரல் 21 அதிகாலையில் தம்புவின் மகன் துரைச்சாமி நகரிலிருந்து புறப்பட்டு வண்ணார்பண்ணையிலிருந்த போதகர் வீட்டுக்குச் சென்ற தகவல் கிடைத்ததும் இராசையாவும் நண்பர்கள் சிலரும் கல்லுண்டாய்க்குப் புறப்பட்டனர். நாலாம் கட்டையிலுள்ள கல்லுண்டாய் மடத்துக்குச் சென்று காத்திருக்கத் தொடங்கினர். நடமாட்டங்களைத் தொடர்ந்து கண்காணிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

எதிர்பார்த்தப்படியே மாலை ஐந்தரை மணியளவில் நயில்ஸ், தம்பு குடும்பங்களின் குதிரை வண்டிகள் மடத்தடியை அடைந்ததும் வழிமறிக்கப்பட்டனர். அழகம்மாவைத் தூக்கித் தனது வண்டியில் இராசையா ஏற்றிக் கொண்டான். மறிக்கப்பட்ட வண்டிகள் இராசையாவின் நண்பர்களால் தொடர்ந்து பிடிக்கப்பட்டிருக்க இராசையாவின் வண்டி விரைந்து புறப்பட்டது.

குறுகிய காலத்தில் திட்டமிட்டிருந்தாலும் வரக்கூடிய எதிர்ப்புக்களை எல்லாம் சமாளிக்கும் பொறிமுறைகளை இராசையா ஒழுங்குபடுத்தியிருந்தான். ஆனால் அவன் அதிகம் எதிர்பாராத பக்கமிருந்து வந்த எதிர்ப்பு அவனை நிலைகுலைய வைத்தது.

குடும்பத்தினர் முன்னிலையில் அனைவருமறிய அழகம்மாவை அழைத்துச் செல்வது அழகம்மாவின் சம்மதத்தைப் பெறப் போதுமாயிருக்குமென அவன் எண்ணியிருந்தான். பயமுறுத்தியோ. பலாத்காரப்படுத்தியோ அவளைத் தனது வழிக்குக் கொண்டுவர முடியும் என நம்பியிருந்தான. ஆனால் அழகம்மாவோ தனியொருத்தியாக நின்றாலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் இராசையாவுக்கு இணங்கிப் போகாமல் உறுதியாக இருந்தாள்.

கடத்திச் செல்லும் வழியில் அழகம்மா தொடர்ந்தும் தேம்பிக் கொண்டிருந்தாள். தான் வைத்திருந்த கத்தியொன்றினை எடுத்துக்காட்டிய இராசையா யார் வந்து மறித்தாலும் அந்தக் கத்தியால் குத்தப் போவதாகச் சொல்லி வைத்தான். அத்துடன் அழகம்மாவின் கையிலிருந்த 'E. A. N.' என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மோதிரத்தினைக் கழற்றித் தன் கையில் அணிந்ததுடன் அழகம்மாவுக்கெனத் தான் செய்து வைத்திருந்த மோதிரத்தினை அவளுக்கு அணிவித்தான்.

ஆனால் சட்டென்று அந்தமோதிரத்தைக் கழற்றிய அழகம்மா வண்டிக்கு வெளியால் அதனை வீசியெறிந்தாள். வண்டியை நிறுத்தச்சொல்லி அருகிலிருந்தவனை மோதிரத்தைத் தேடியெடுக்க இராசையா ஏவிய போதும் மோதிரம் கிடைக்கவில்லை. இனியும் தாமதிக்க முடியாதென மோதிரத்தை விட்டு விட்டு வண்டி மீண்டும் புறப்பட்டது. உரும்பிராயில் ஒரு வீட்டின் முன் சென்று நின்றது வண்டி.

> கடத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தான். இராசையாவுக்கு உதவியாக நண்பர்கள் திரண்டனர். வீடு புகுந்து கடத்துவது ஆபத்தானது; குடிமனைகளுக்குத் தொலைவான இடமென்றால் இலகுவானது. அவ்வகையில் அவர்கள் ஊர்காவற்றுறைக்குச் செல்லும் வழியிலேயே கடத்துவதாகத் திட்டம் தீட்டப்பட்டது.

உரும்பிராய் வீட்டில் இராசையா வரவினை எதிர்பார்த்து ஆண்களும் பெண்களுமாக இருபது பேர் நின்றிருந்தனர். அங்கே நின்றிருந்த தங்கம் எனும் பெண்ணிடம் கதிரை கொண்டுவர இராசையா சொல்ல. அவள் கதிரை ஒன்றைக் கொண்டு வந்து அழகம்மாவின் கையைப் பிடித்து அதில் அமர வைத்தாள். அழகம்மா மீண்டும் தேம்பத் தொடங்கினாள். தங்கமும் பிற பெண்களும் அழகம்மாவுக்கு அறிவுரை கூற முயன்றனர். ஆனால் அழகம்மாவோ அசைவதாயில்லை.

[illegible] உறவினர். [illegible] தெரிந்திருந்தது. அத்துடன் அழகம்மாவைத் தேடி அவர்கள் புறப்பட்ட செய்தியும் வந்திருந்தது. ஆதலால் ஓரிடத்தில் தங்க முடியாத நிலை இராசையாவுக்கு ஏற்பட்டது. அதிலும் சனங்கள் கூடியிருக்குமிடத்தில் தொடர்ந்து இருந்தால் இலகுவில் பிடிபட்டு விடுவேன் என்று இராசையாவுக்குத் தெரிந்திருந்தது. அழகம்மாவின் சம்மதத்தைப் பெறுவதனை விட வேறு வழி இருக்கவில்லை.

தங்கத்தையும் அழகம்மாவையும் அழைத்துக் கொண்டு இராசையா இன்னொரு வீட்டுக்குச் சென்றான். அங்கே ஒரு அறையினுள் அழகம்மாவையும் தங்கத்தினையும் தனியாக விட்டு வெளியே நின்று கொண்டான். பெண்ணொருத்தி ஆறுதற்படுத்தி அறிவுரை கூறினால் ,அழகம்மா மனம் மாறுவாள் என அவன் எதிர்பார்த்திருந்தான். ஆனால் அழ வேண்டாம் என்றும் இராசையாவை மணந்துகொள்ளும்படியும் தங்கம் பலவாறாக எடுத்துக் கூறியும் அழகம்மா மனம் மாறுவதாயில்லை.

மீண்டும் தங்கத்தையும் அழகம்மாவையும் அழைத்துக் கொண்டு இராசையா கால் மைல் தொலைவிலிருந்த இன்னொரு வீட்டுக்குச் சென்றான். அங்கே இராசையாவும் அழகம்மாவும் தனியறையில் விடப்பட்டனர். கதவு தாழிடப்பட்டது. "என்னை ஏன் கலியாணம் செய்ய மறுக்கிறாய்? என்னில் என்ன குறை கண்டாய்?" எனப் பலவாறாக இராசையா கேட்டுப் பார்த்தான். அழகம்மா எதுவும் பேசாமல் நின்றாள். தங்கம் உணவு கொண்டுவந்து கொடுத்துப் பார்க்க அழகம்மா உண்ண மறுத்தாள்.

ஒரு மாட்டுவண்டிலில் ஏற்றி அழகம்மாவை இணுவிலில் உள்ள ஒரு பிராமணர் வீட்டுக்கு அழைத்துச் சென்றனர், அங்கும் அழகம்மாவை இருத்தி வைத்துப் பலவாறாக இராசையா கதைத்துப் பார்த்தான். அழகம்மாவோ அசைவதாக இல்லை. மீண்டும் உரும்பிராய்க்குப் புறப்பட்டனர்.

உரும்பிராயைச் சென்றடைந்தபோது இருட்டத் தொடங்கியிருந்தது. அழகம்மா களைத்துப் போயிருந்தாள். தங்கம் ஓர் அறையில் விரித்து இருத்திய பாயில் அழகம்மா நித்திரை யானாள். அழகம்மாவை எழுப்பிய இராசையா அவளைச் சாப்பிடச் செய்தான். தனக்கு ஒரு திரணை சோறு குழைத்துத் தரக் கேட்டான். அழகம்மா அதற்கு மறுத்தபோதும் அங்கு கூடியிருந்தோர் வற்புறுத்தவே கொஞ்சம் சோறு குழைத்துக் கொடுத்தாள்.

மோதிரம் மாற்றுதல், சோறு குழைத்துக் கொடுத்தல் போன்றவை திருமணம் சார்ந்த சடங்குகள். குறிப்பாக பெரிய அளவில் திருமண விழாக்கள் நடைபெறாத முற்காலங்களில் சோறு போடச் சொல்வதென்பதே ஒரு திருமணச் சடங்காகப் பின்பற்றப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அழகம்மாவை மீண்டும் இன்னொரு வீட்டுக்கு அழைத்துச் சென்றனர். தங்கம் அறையைக் கூட்டிப் பாய்விரித்து விட்டுச் சென்றாள். களைத்துப் போன அழகம்மா நித்திரையாகிப் போனாள். அன்றிரவு இராசையா அழகம்மாவை அவள் சம்மதமின்றிப் பாலியல் வல்லுறவுக்கும் உட்படுத்தினான்.

அன்றிரவு அதிகாலையில் வீட்டுக்கே கொண்டுசென்று விடுவதாகக் கூறி மீண்டும் அழகம்மாவை வண்டியிலேற்றிய இராசையா வசாவிளானுக்கு அழைத்துச் சென்றான். தங்கமும் சீனியும் கூடச் சென்றனர்.

அங்கேவேலுப்பிள்ளைஎன்பவர்இணைந்து கொண்டார். வேலுப்பிள்ளையை அழகம்மா முன்னரே அறிவாள். வேலுப்பிள்ளை வீட்டுக்கு வண்டி சென்றது. அழகம்மா சம்மதித்தால் ஒரு பிரச்சினையும் இல்லை என்றார் வேலுப்பிள்ளை. இராசையா, தங்கம், சீனி, வேலுப்பிள்ளை என எல்லோரும் அழகம்மாவிடம் கதைத்துப் பார்த்தனர்.

இராசையாவும் வேலுப்பிள்ளையும் சேர்ந்து நயில்ஸ் போதகருக்கு அழகம்மாவைக் கடிதமெழுதச் செய்தனர். இராசையாவைத் திருமணம் செய்யச் சம்மதம் என்று சொல்லும்படியாக அவர்கள் சொல்லச் சொல்ல அவளை எழுதக் கூறினர். அவர்கள் ஒன்று சொல்ல அழகம்மாவோ வேறு ஏதோ எழுதி வைத்தாள். மீண்டும் எழுதச் சொல்ல அவள் மறுத்தாள்.

மீண்டும் இன்னொரு வீட்டுக்கு அழகம்மா அழைத்துச் செல்லப்பட்டாள். அங்கே வைத்துப் பொலிஸ் நீதிவானால் மீட்கப்பட்டாள். இராசையா கைது செய்யப்பட்டான்.

(வழக்கு தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூர்வீகமாக தமிழ் மக்கள் வேளாண்மை செய்து வந்த வயல்நிலங்கள், மகாவலி அதிகாரசபையால் சிங்களமக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு, விவசாய நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருந்தன.
போர்ச்சூழல் காராணமாக பல அழிவுகளை சந்தித்த தமிழ்மக்களின் காணிகளில் மீளவும் விவசாயநடவடிக்கைகளில் ஈடுபட்டு, கருகிப் போன வாழ்வை மீண்டும் துளிர்க்கச் செய்யலாம் என்ற கனவில் பேரிடி விழுந்தது.




## அழிந்து வரும் எங்கள் கிராமங்கள்

வன்னிமாவட்டத்தில் தொடரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றச்செயற்பாடுகளால் அதிகம் பாதிக்கப்படுகின்ற பகுதியாக வவுனியா வடக்கு மற்றும் முல்லைத்தீவின் சில பகுதிகள் என்பவற்றைக் குறிப்பிடமுடியும். போரால் ஏற்பட்ட பேரழிவு, இடப்பெயர்வு, போருக்குப் பின்னர் சீராக மேற்கொள்ளப்படாத மீள்குடியேற்றச் செயற்பாடுகள் காரணமாக எல்லையோரக் கிராமங்கள் மக்கள் இல்லாமல் சிதையத் தொடங்கியுள்ளன.
அவற்றில் வெடிவைத்தகல், கோவில்புளியங்குளம், ஊஞ்சல்கட்டி, தனிக்கல்லு, மருதோடை, காஞ்சூரமோட்டை போன்றவற்றைக் குறிப்பிட்டு சொல்லலாம். அந்தக்கிராமங்கள் மண்ணின் மைந்தர்களின் வரவுக்காக ஏங்கி நிற்கின்றன. 40 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வந்த வெடிவைத்தகல் கிராமத்தில் தற்போது ஒரு சிலர் மட்டுமே வாழ்ந்துவருகிறனர். அதுபோல கோவில்புளியங்குளம் பகுதியிலும் சொற்ப குடும்பங்களே வாழ்கின்றன. ஏனைய கிராமங்களின் நிலையும் அதுவே.
அந்தப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் புதர் மண்டிப்போய் மாணவர்களின் வருகைக்காக தவங்கிடக்கின்றன. குளங்களும், வயல், நிலங்களும் அதிகம் காணப்பட்டாலும் அவற்றைப் பயன்படுத்த மக்கள்தொகை போதியதாக இல்லை உலகமயமாதலின் மாயையில் மூழ்கி, நகரத்தை நோக்கி கிராமத்தவர்கள் பயணப்படுதலும் இந்தக் கிராமங்களின் சோபையிழப்புக்கு முக்கியமான காரணம். போரினால் இடம்பெயர்ந்த பலர் மீளவும் தமது சொந்த ஊர்களுக்குத் திரும்பாமல் வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற நகரப்பகுதிகளில் நிரந்தரமாக குடியேறிவிட்டனர்.
இதனால் பல கிராமங்கள் தங்கள் ஆன்மாவை இழந்து, மனிதர்கள் நடமாடாத வீதிகளையும், பாழடைந்த வீடுகளையும் , போரின்அழிவுகளையும், மக்களின் முன்னைய இருப்பிடங்களையும் தாங்கியபடி மெல்ல மெல்ல காடுகளாகிக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான நிலைமை எதிர்காலத்தில் அங்கு சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பாக அமைந்துவிடுமென்பதே யதார்த்தம்.

## போராட்டங்கள் தீர்வாகுமா?

எல்லைக்கிராமங்களில் முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்கள் மற்றும் ஆக்கிரமிப்புச்செயற்பாடுகள் என்பவற்றுக்கெதிராக தமிழ்மக்களால் தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. தமிழ் சிவில் சமூக அமைப்புக்கள் அல்லது தமிழ் அரசியல் கட்சிகளின் ஏற்பாட்டிலேயே இத்தகைய போராட்டங்கள் உருக்கொள்கின்றன.
வவுனியா வடக்குப் பகுதியில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கும் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக நெடுங்கேணிப் பகுதியில் அண்மையில் பெருமெடுப்பிலான ஆர்ப்பாட்டம் ஒன்றும் முன்னெடுக்கபட்டிருந்தது. இந்தப் போராட்டங்களின் மூலம் நிலஆக்கிரமிப்பு தடுக்கப்பட்டிருகின்றதா என்றால் , பதில் 'இல்லை' என்பதுதான்.
ஏனெனில் தமிழ்மக்களால் அல்லது தமிழ் அரசியல் தரப்புகளால் முன்னெடுக்கப்படும் அனைத்துப் போராட்டங்களும் வலுவற்றதாகவும், அரசுக்கு அச்சத்தை உண்டாக்கத் தவறுபவையாகவுமே இருந்தன. போருக்குப் பின்னரான காலப்பகுதியில் உதிரிகளாகப் பிரிந்துகிடக்கின்ற தமிழர்தரப்புக்கள், தமக்குள் ஒரு இணக்கப்பாட்டினை ஏற்படுத்தி , பலம்மிக்க போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்குத் தவறியிருக்கின்றன. இந்தப் போராட்டங்கள் அரசுக்கு எந்தவித அதிர்வையும் ஏற்படுத்தப்போவதில்லை.
சில அரசியல்வாதிகள் தமது அரசியல் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளவும் போராட்டங்களைப் பயன்படுத்துகின்றனர். இதேவேளை புதிய சிங்களக் குடியேற்றங்களுக்கு எதிராகப் போராட்டங்கள் முன்னெடுப்பவர்கள், எல்லைக் கிராமங்களில் வசித்துவரும் சொற்ப அளவிலான மக்களின் இருப்பை தக்கவைப்பதற்கு எந்தவொரு முன்நகர்த்தல்களையும் செய்வதேயில்லை. போராட்டக் களங்களில் மக்களுக்காக ஓங்கிக் குரல் கொடுப்பதாகக் காட்டிக் கொள்பவர்கள், கொஞ்சமேனும் இந்தக் கிராமங்களின் அடிப்படைத் தேவைகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் அக்கறை காட்டியிருந்தாலே, நகரங்களில் குடியிருக்கும் பலர் மீளவும் தங்கள் பகுதிகளுக்கு நிரந்தமாக வந்து குடியிருக்கக்கூடும். ஆனால் [illegible] எங்கள் [illegible]மாயிற்றே. அதனால் போராட்டங்களை நடத்தினால் எல்லாம் சரியாகிவிடும் என்று மக்களை நம்பச் செய்யும் ஏமாற்றுத்தனங்களில் ஈடுபடுகின்றனர்.
தேர்தல்காலங்களில் சொகுசுவாகனங்களில் வாக்குப்பிச்சைகேட்டுச் செல்லும் தமிழ் அரசியல்வாதிகள் தேர்தல் முடிந்ததும் அந்தக் கிராமங்களுக்குச் செல்வதில்லை எனவும், வன்னிமாவட்டத்தின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எல்லைக் கிராமங்களில் என்ன நடக்கின்றது என்ற விடயமே தெரியாமல் இருக்கின்றது எனவும் பொது மக்கள் குற்றம்சாட்டுகின்ற னர்.
"சிங்களக் குடியேற்றத்தை நிப்பாட்டுங்கோ எண்டு சில தம்பியவை கூவித்திரியினம். அதிலயும் நியாயம் இருக்கு . ஆனால் அவையள் ஒண்டைப் புரிஞ்சு கொள்ளோணும். இந்தக்காட்டுக்க வாழ்க்கையைத் தேடவந்த எங்களுக்கு முதல்ல எதையாவது செய்யவேணும். பத்து வருசமாப் போச்சு இஞ்ச வந்து. இன்னும் இந்தக் கொட்டில்லதான் கிடக்கிறன். எங்களுக்கு ஒரு நம்பிக்கையை ஊட்டவேணும். அப்பிடிச் செஞ்சால் எல்லாமக்களும் இங்கவந்து பிழைச்சுக்கொள்ளலாம். எங்கடநிலமும் பறிபோகாது. இல்லையெண்டால் நாங்களும் எங்கையாவது பிழைப்புத்தேடிப் போடுவம். எங்கடநிலமும் களவுபோடும் " என்கின்றார் ஊஞ்சல்கட்டியைச் சேர்ந்த மாணிக்கம்.
"எங்கட ஊருக்க தேர்தல்காலம் எண்டால் திருவிழாதான். இதுவரை இஞ்ச கால்படாதவன் பாதம் எல்லாம் அப்ப படும். அதைச் செய்வன், இதைச்செய்வன் எண்டு அடிச்சுவிடுவாங்கள். அதுக்குப் பிறகு இந்தப்பக்கமே ஆக்களைக் காணக்கிடையாது"என்றும் அவர் பெருமூச்சுவிடுகின்றார்.

## எதுவுமே இல்லை, எல்லைக் கிராமங்களில்!



எல்லைக் கிராமங்களின் அபிவிருத்தி என்பது தமிழர்பகுதிகளில் எட்டாக்கனியாகவே இருந்து வருகின்றது. பெரும்பாலான பிரதான வீதிகள் பொதுமக்கள் செல்வதற்கு ஏற்றதாக இல்லை. அவை சீராகப் புனரமைக்கப்பட்டு பல வருடங்கள் கடந்து விட்டன. அந்த வீதிகளைப் பயன்படுத்தி நகர்ப்பகுதிகளுக்கு தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யச் செல்வதற்கு . இந்தப் பகுதி மக்கள் பல மணித்தியாலங்களை வீணாக்கும் நிலையே இன்றளவும் தொடர்கின்றது. பாடசாலைகளின் கதியும் கிட்டத்தட்ட குற்றுயிர்நிலைதான். முன்னொருகாலத்தில் இங்கெல்லாம் செயற்பட்டு வந்த பாடசாலைகள் , போருக்குப் பின்னர் புனரமைப்பின்றி அழிவடையும் தறுவாயிலுள்ளன. அர்தேபோன்று இந்தப் பகுதி மக்களுக்கான உரியதொழில்வாய்ப்புக்களும் உருவாக்கிக் கொடுக்கப்படவில்லை. இவையெல்லாம் நகரை நோக்கி இடம்பெயர்ந்த மக்கள் , மீளக்குடியமர்வதில் தடைகளை ஏற்படுத்தி நிற்கின்றன.
" போய் வாறதுக்கு ஒழுங்கான றோட்டு இல்லை. ரவுணுக்குப் போறதெண்டால் வஸ் இருக்காது. ஓட்டோ பிடிச்சுப் போறதுக்கு 1500 ரூபா தேவையாக் கிடக்கு. எங்கடசனங்கள் இயற்கைக் கடன் கழிக்கிறதுக்கும் மலசலகூட வசதியில்லாமல், இந்த காடுகளுக்குள்ளதான் போகுதுகள். அதுகும் பொழுது சாய்ஞ்சால் யானைக்கூட்டங்களும் படை எடுத்திடும். இதுதான் எங்கட வாழ்க்கை. எங்கட ஊருக்கு ஆரம்பத்தில 39 குடும்பங்கள் இருக்கிறதுக்கு வந்திச்சுதுகள். சொந்தமா வீடு இல்லை. வீடு கட்டிறதுக்கு கொஞ்சக்காசு அரசாங்கம் தந்திச்சுது. மிச்சக் காசு தரேலை. வீடில்லாமல் எப்படி வாழ்றது? அதால இப்ப 19 குடும்பங்கள் தான் இங்க இருக்கிறம். மற்றவை வவுனியா ரவுண்பக்கமாப் போட்டினம். எங்கட பிரச்சினையை எல்லாரிட்டையும் சொல்லிப்பாத்திட்டம். ஆனா ஆரும் செவிசாய்க்கினம் இல்லை என்கிறார் காஞ்சூரமோட்டையில் வசிக்கும் பழனியம்மா.
பொதுமக்கள் வசிக்காத பகுதிகளில் அபிவிருத்திப்பணிகளை மேற்கொள்வது பிரயோசனமற்றது என்று கூறி, இந்தக் கிராமங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காமல் தட்டிக்கழிக்கின்றன அரசதிணைக்களங்கள் .எனினும் அபிவிருத்திப்பணிகளையும் , அடிப்படை வசதி வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி தந்தால் நாங்கள் எங்கள் சொந்த ஊருக்குச் சென்று குடியிருப்போம் என அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

## புலம்பெயர் தமிழர்கள் உதவமுடியும்

மணலாறு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் அமைந்துள்ள காணிகள் 1983ஆம் ஆண்டு குத்தகை அடிப்படையில் தமிழ்மக்களுக்கு பிரித்து வழங்கப்பட்டிருந்தன. அவற்றைக் கொள்வனவு செய்த, யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பைச் சேர்ந்த தமிழ் முதலாளிகள் கென்பண்ணை, டொலர்பண்ணை, சிலோன் தியேட்டர்ஸ் என்ற பெயர்களில் பெரும்பண்ணைகளையும் , கொம்பனிகளையும் அமைத்து விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு செழிப்புடன் வாழ்ந்து வந்தனர். அதன்மூலம் அந்தப்பகுதியில் வாழ்ந்த மக்களுக்கும் வேலை வாய்ப்புக்கள் கிடைக்கப்பெற்றிருந்தது. ஆனால் இன்றோ நிலைமை வேறு.
வன்னிமாவட்டத்தின் எல்லைக்கிராமங்கள் அபிவிருத்தியடைவதை ஆட்சியாளர்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள். ஏனெனில் அங்கு வசதிகளை உருவாக்கிக் கொடுத்து, மக்கள் வசிக்கத்தொடங்கினால் தமது நிகழ்ச்சிநிரலைச் செயற்படுத்தமுடியாமல் போய்விடும் என்பதில் அவர்கள் அவதானமாகவே இருப்பார்கள். எனினும் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து ஐரோப்பியநாடுகளில் வசிக்கும் தமிழ்மக்கள் பலர் , நாட்டின் தென் பகுதிகளில் முதலீட்டு நடவடிக்கைளிலும் ஈடுபட்டுவருகின்றனர். எனவே அவ்வாறானவர்கள் மனம்வைத்தால் வன்னிமாவட்டங்களின் , எல்லைக்கிராமங்களையும், மக்களையும் பாதுகாக்க முடியும். இந்த எல்லைக்கிராமங்களில் பெரிய தொழிற்துறைகளை நிறுவி ,அவற்றினூடாக தொழில்வாய்ப்புக்களையும் வருமானத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தாலே பெருமளவான மக்கள் தமது ஊர்களுக்கு சென்று வசிப்பதற்குத் தயாராகிவிடுவார்கள். அல்லது புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் ஒவ்வொருகிராமங்களையும் தத்தெடுத்து, அவற்றுக்குத் தேவையான உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கலாம். இந்தவேலைகளை ஒருங்கிணைக்கும் பணியினை தமிழ்அரசியல்வாதிகளும், தமிழ்மக்கள் சார்ந்துசெயற்பட்டுவரும் தமிழ் சிவில் சமூக அமைப்புக்களும் முன்னெடுக்க முடியும். இதன்மூலம் எல்லைக்கிராமங்களில் தமிழர்களின் இருப்பை உறுதிப்படுத்திகொள்ளமுடியும். புதிய சிங்களக் குடியேற்றங்களையும் ஓரளவு தடுக்கமுடியும். அரசினால் செய்யமுடியாத உட்கட்டுமான வசதிகளை நாமே பூர்த்திசெய்வதன் மூலம் எமது இருப்பை இன்னும் பலமாக்கலாம். இதனைவிடுத்து வெறுமனே வலுவற்ற அரசியல்நோக்கங்களைக்கொண்ட குறுகியநேர ஆர்ப்பாட்டங்களால் நாம் சாதிக்கப்போவது எதுவும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முதலாவது தற்கொலைப்படை நாடு



ந.பரமேஸ்வரன்

தலிபான்கள் தற்கொலைக் குண்டுதாரிகளை உத்தியோகபூர்வமாக தமது இராணுவத்தில் இணைத்துக்கொள்ளவுள்ளனர். தாங்கள் உருவாக்கிய இஸ்லாமிய இராச்சியத்தைப் பாதுகாப்பதற்காகவே இந்த நடவடிக்கை என தலிபான்களின் பதில் பேச்சாளர் பிலால் கரிமி தெரிவித்துள்ளார். இந்தத் தற்கொலைப்படை இராணுவத்தின் ஓர் அங்கமாகச் செயற்படவுள்ளது. ஆப்கானிஸ்தானில் ஆட்சியை கைப்பற்ற முன்னர் அமெரிக்கப் படைகளுக்கு எதிரான கடந்த 20 வருட போராட்டத்தில் தற்கொலை குண்டுதாரிகளை தலிபான் பயன்படுத்தியிருந்தது. கடந்த ஓகஸ்ட் மாதம் அமெரிக்க துருப்புகள் வெளியேறிக்கொண்டிருந்த நிலையில் ஐந்து தற்கொலைத் தாக்குதல்களை தலிபான்கள் நடத்தியிருந்தனர். மதத்துக்காக தியாகம் செய்யக்கூடிய திறமை வாய்ந்த தற்கொலைக் குண்டுதாரி களை தாங்கள் நாடு பூராகவுமிருந்து தமது இராணுவத்தில் இணைத்துக்கொள்ளவுள்ளதாகவும் இவர்கள் விசேட தாக்குதல் நடவடிக்கைகளின் போது பயனப்டுத்தப்படுவார்கள் எனவும் பிலால் கரிமி தெரிவித்துள்ளார். ஆப்கானிஸ்தானின் முன்னணி ஊடகமான 'ரோலோ நியூஸ்' இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

ஐ.நா, தலிபான்களின் இடைக்கால அரசுக்கு (அரசாங்கத்தை கொண்டு நடத்துவதற்கு) 6 மில்லியன் டொலரை வழங்கவுள்ளது. (இலங்கை நாணயத்தில் 1200 கோடி ரூபா). அமெரிக்காவே இந்த நிதியை ஐ.நா. ஊடாக வழங்குகிறது. இதன் மூலம் உலகிலேயே தற்கொலைப்படையை உத்தியோகபூர்வமாக வைத்திருக்கும் ஒரேயொரு இராணுவமாக ஆப்கான் இராணுவம், உருவாகப்போகிறது. ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் இடைக்கால அரசாங்கத்தையும் அமைச்சரவையையும் பாதுகாக்கும் நோக்குடன் இந்த நிதி வழங்கப்படவுள்ளதாகவும் ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனம் சுட்டிக்காட்டி யுள்ளது. ஐ.நா.வாங்கப்போகும் ஆறு மில்லியனில் பாதுகாப்புக்கு எத்தனை மில்லியனை தலிபான்கள் ஒதுக்கவுள்ளனர். இராணுவத்துக்கு எத்தனை மில்லியன், அதில் தற்கொலைப்படை வீரர்களுக்கான ஒதுக்கீடு எத்தனை மில்லியன் என்ற விடயங்களை தலிபான்களின் பதில் பேச்சாளர் பிலால் கரிமியைத்தான் கேட்கவேண்டும்.

எமது பங்காளிகளுக்கு இந்த நேரத்தில் (ஆபத்தில்) உதவ வேண்டிய தேவை உள்ளது என அமெரிக்க இராஜாங்கச் செயலர் அந்தோனி பிளிங்கென் குறிப்பிட்டுள்ளார். யார் பங்காளிகள்? தலிபான்களா? தலிபான்களின் தற்கொலைப்படையா? பிளிங்கனைத்தான் கேட்க வேண்டும்.

புலிகள் அமைப்பை அமெரிக்கா தடை செய்தபோது, " தற்கொலைப்படையை வைத்திருக்கும் கொடிய பயங்கரவாத இயக்கம் என அந்தத் தடை குறித்து அமெரிக்கா வியாக்கியானம் செய்திருந்தது. ஆனால் இப்போது, தற்கொலைப் படைப்பிரிவை அமைக்கப்போகும் தலிபான்களுக்கு 6 மில்லியன் டொலர் உதவியை அதே அமெரிக்கா அள்ளி வழங்குகின்றது. அப்படியானால் தலிபான்களின் தற்கொலையாளிகள் அகிம்சைப்போராளிகளா என்பதை அமெரிக்காதான் தெளிவுபடுத்தவேண்டும். இப்போது எழுகின்ற இன்னொரு கேள்வி என்னவென்றால், உலகிலேயே தற்கொலைப்படையயணியை தனது இராணுவ கட்டமைப்பில் வைத்திருக்கும் முதல் நாடாக ஆப்கானிஸ்தானை ஐ.நா.அங்கீகரிக்கப்போகிறதா என்பது தான்.

## அரிமாநேத்ரன் துப்பறியும் AK67



10 காமிக்ஸ் தொடர்

சித்திரம் – எஸ்.வினோபா
கதை – இ.சு.முரளிதரன்




## ஊர்ப்புதினம்



இராகவன்



23

ஊருக்குள்ளை திரியிற எந்த நாயும் துரைமாமாவைக் கண்டால் ஓடி ஒளிச்சிடும். எங்கட வீட்டில ஜிம்மி, பொம்பி எண்டு ரண்டு கடியன் நாயள் நிண்டிச்சுதுகள். அதுகளால எங்கடை வீட்டை வாற ஆக்கள் எல்லாம் கேற்றடியில் நிண்டு "நாயைப் பிடியுங்கோ" எண்டு சொல்லி நாங்கள் நாயளைப்பிடிச்சாப் போல தான் உள்ளை வருவினம்.


வீட்டுவேலியளின்ரை நீக்கலுக்கால வளவுக்குள்ள வாற ஆடு. மாடுகளை இந்த ஜிம்மியும் பொம்மியும் செவியளில பிடிச்சு இழுத்துக் கொண்டு வரும். குட்டியாடுகள், மாட்டுக் கண்டுகளெண்டால் அவ்வளவுதான், கதைமுடிஞ்சுது. கடிச்சுக் குதறிப் போடுங்கள். கோழியளேதும் வந்து அம்பிட்டால் ரண்டும் சேர்ந்து பிரியாணி போட்டுடுங்கள். அப்பிடிக்கொத்த நாயளே துரைமாமாவைக் கண்டால் மெல்ல மெல்லமாக விலத்திப் போய், நாங்களிருந்து படிக்கிற மேசைக்குக் கீழ பதுங்குங்கள். துரைமாமா வந்ததும் வராததுமாக அண்ணையாக்களைக் கூப்பிட்டு "டேய்! டேய்! உங்கட நாயள் எங்கை?" எண்டுதான் கேப்பார். அண்ணையாக்கள் தெரியாதெண்டு சொல்லுவினம். அவர் உடனை மேசைக்குக் கீழ குனிஞ்சு பாப்பார். அவரைக் கண்வுடன நாயளிரண்டும் அனுங்கத் தொடங்கியிடும். அந்தாள் விடுமே? "வா மச்சான் வா! வண்ணாரப்பேட்டை" எண்டு பாடிக் கொண்டு இரண்டு நாயளையும் பிடரியில பிடிச்சு வெளியில இழுப்பார். இப்ப நாயள் கத்த வெளிக்கிடும். அதுக்கிடையில அந்தாள் அதுகளின்ரை மூக்குகளை உள்ளங்கையளால தேய்தேயெண்டு தேய்ப்பார். அதுக்குப் பிறகுதான் அதுகளை றிலீஸ் பண்ணுவார். அதுகளிரண்டும் தும்மு தும்மெண்டு தும்மி வீட்டைச் சுத்தியோடுங்கள். துரைமாமா வீட்டை விட்டுப் போறவரைக்கும் கிட்டையும் வராதுகள்.

துரைமாமா ஊருக்குள்ள எந்த நாயைக் கண்டாலும் அதைப் பிடரியில பிடிச்சு உள்ளங்கையால மூக்கைத் தேய்க்காமல் விடவே மாட்டார். அதால ஊரில எந்தப் பொல்லாத கடியன் நாயெண்டாலும் துரை மாமாவுக்கு அடங்கித்தானிருக்கும். துரைமாமா இருந்திருந்திட்டு நெல்லியடிக்குச் சைக்கிளில போகேக்குள்ள என்னை முன்னுக்கு ஏத்திக் கொண்டு போவார். அவரோட சைக்கிளில போகேக்குள்ள எனக்கு வலு புளுகமாயிருக்கும். அவர் எங்கையாவது ஒரு கடையில மறிச்சு எனக்கு ஸ்ரார் ரொபி கைநிறைய வாங்கித் தருவார். அது சிவப்பு நிறத்தாளில சுத்தியிருக்கும். அதைப் பிரிச்சால் வெள்ளை வெளேரெண்டு நீள்வட்ட வடிவத்தில் ஸ்ரார் ரொபியிருக்கும். அதின்ரை வாசமெண்டால் சொல்லி வேலையில்லை. அந்த மாதிரியிருக்கும். அப்படி தனிவெள்ளைக் கலரில வாற ஒரேயொரு ரொபி அதுதான் எண்டு நினைக்கிறன்.

அதை வாயில போட்டால் சுவை கிறங்கடிக்கும். அதைக் கையால எடுத்து வாயில போடேக்குள்ள கையில ஒரு பிசுப்பு ஒட்டியிடும். ஒருக்கால் நானிந்தப் பிசுபிசுப்பைப் பகிடியாய்த் துரை மாமாவின்ர கையில துடைச்சுப் போட்டன். ஆளுக்குச் சரியான கோவம் வந்திட்டுது. "டேய்! நாய்ப்பழக்கம் இது" எண்டு பேசிப் போட்டார். நான் வெருளி மாதிரிச் சிரிச்சுக் கொண்டு நிண்டன். அது இன்னும் அந்தநாளுக்கு கோபத்தைக் கிளப்பிப் போட்டுது. "உன்னை இனி ஒருக்காலும் நெல்லியடிக்குக் கூட்டிக் கொண்டு வரமாட்டான் பாத்துக் கொள்" எண்டிட்டு சைக்கிளைத் திருப்பினார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்வப் பிரம்மனே நமஹ




பாணம் – கோவையம்பதி

# அம்பாள் தேவஸ்தானம்

## ராவர்த்தன அஷ்ட பந்தன நவகுண்ட பக்ஷ

# பிஷேகம் - 2022

ல் 11.00 மணி வரையுள்ள மீனலக்ன சுபமுகூர்த்த வேளையில்)

காண்டு எழுந்தருளி வேண்டி தொழும் அடியார்களுக்கு அனைத்து சௌபாக்கியங்களையும் வாரிவழங்கி சகல ஜீவராசிகளுக்கும் தாயாக சுந்தரதிரிதள ராஜ கோபுரவிமான தூபிகளுக்கும் நிகழும் மங்கலகரமான பிலவ வருடம் தை மாதம் 10ஆம் நாள் (23.01.2022) க்ன சுப முகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு காளியம்பாளின் திருவருள் கைகூடியுள்ளது. எனவே அடியார்கள் களைக் கண்டு தரிசித்து காளியம்பாளின் திருவருளைப் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வீர்களாக!.

## வர்ண வேலை

விஸ்வப் பிரம்மஸ்ரீ அ. அஜந்தன் ஸ்ரீ செல்வபதி

(ஓவிய கலையகம்)

திருநெல்வேலி

## அனுசரணை

உலகத் தரம் வாய்ந்த முதல்தர வர்ணப்பூச்சு

# Devika Paints

# தேவிகா பெயின்ஸ்

No.43, Point Pedro Road,
Kopay Junction

T.P : 021 223 2389
077 381 5146


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
கணபதி துணை

# யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கு அருள்மிகு ஸ்ரீ

# மஹா கும்பாபிஷேகச் சிறப்

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருவின் ஆசிச்செய்தி



அன்புள்ளவர்களுக்கு ....

விநாயகர் அடியார்களுக்கு நல்லூர் பிரதேசத்தின் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் சந்திரசேகர விநாயகருக்கு இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவது மிக மகிழ்ச்சியடைகின்றது. வரலாறுகள் பலவுடைய நல்லூர் பிரதேசத்தில் நீண்ட காலம் எழுந்தருளியிருந்து அருள்புரியும் விநாயக பெருமானுக்கு ஐந்து தலங்களையுடைய ராஜகோபுரம் அமைக்கப்பட்டு மஹா கும்பாபிஷகம் நடைபெறுவது அனைவருக்கும் மகிழ்ச்சியை தருகின்றது. விக்கினங்களை தீர்க்கும் விநாயகப்பெருமான் இவ்வாலயத்தில் எழுந்தருளியிருந்து அனைவர் விக்கினங்களையும் தீர்த்தருளுகின்றான். நடைபெறும் கும்பாபிஷேகத்தை அனைவரும் தரிசித்து உலகம் முழுவதும் இருக்கும் துன்பம் நீங்க அனைவரும் விநாயகப் பெருமானை வழிபடுவோமாக .... இவ்வாலய வளர்ச்சிக்கு வழி வகுத்த இளைய தலைமுறைகள் ஆலய உதவியாளர் அனைவர் பணியையும் வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹா சந்நிதானம்.
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்தர்**
பரமாச்சார்ய சுவாமிகள்.

## குருகுல அதிபரின் ஆசிச்செய்தி



ஓர் ஆலயத்தில் மஹாகும்பாபிஷேகம் சிறப்புற நடைறெவேண்டுமென்றால் அதற்கு ஐவரின் பங்களிப்பு சிறப்பாக இருக்கவேண்டும். ஆலய தர்ம பரிபாலகர்கள். ஆலயநித்திய அர்ச்சகர். சிற்பாசாரியர். மஹாகும்பாபிஷேக பிரதம குரு. ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்கள் - இந்த ஐந்து பேருடைய பங்களிப்பும் இவ்வாலயத்தில் ஒருங்கே அமைந்திருப்பது சிறப்பம்சமாகும். இத்துணை சிறப்போடும் நடைபெறும் மஹாகும்பாபிஷேகத்தின் பயனாக அனைவரும் விநாயகர் திருவருள் பெற்று சிப்புற வாழ்வார்களாக

**வேதாகம ஞான பாஸ்கரன். சிவஸ்ரீ தாணுமஹாதேவக் குருக்கள்**
அதிபர். தர்ம சாஸ்தா குருகுலம். இணுவில்

## சிவகுரு ஆதீன முதல்வரின் செய்தி



மானுடப்பிறவியின் முகத்தான இலக்கு தன்னைதான் அறிதல். இவ்விலக்கை அடைவதற்கான செயற்பாடுகளில் ஆரம்ப நிலையே ஆலய வழிபாடாகும். ஆலயங்கள் அமைத்து கும்பாபிஷேகம் செய்து நித்திய நைமித்திய பூஜைகள். மஹோற்சவங்கள் விஷேச உற்சவங்கள் நடத்துவது அதில் பங்குகொள்ளும் அடியார்களின் மன ஒருமைப்பாட்டுக்கு வழி வகுக்கின்றன. இதில் கும்பாபிஷேகம் ஒரு ஆலயத்தில் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை செய்யப்பட வேண்டும் என சாஸ்திரங்கள் கூறுகின்றன. அந்த வகையில் நல்லூர் வடக்கு திருவருள்மிகு ஸ்ரீசந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தில் இன்று 23.01.2022 ஞாயிற்றுக்கிழமை கும்பாபிஷேகம் நடைபெற உள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும். இங்கு கோபுரக் கும்பாபிஷேகம் நடைபெறுவது சிறப்பாகும். கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவும் பக்தர்கள் அனைவரும் சபீட்சமடையவும் இதனை முன்னிட்டு வெளிவரும் சிறப்பிதழ் சிறப்பாக அமையவும் ஆசி வேண்டி எல்லாம் வல்ல சந்திரசேகரப்பிள்ளையாரைப் பிரார்த்திக்கிறேன்.

இறை பணியில் **தவவத்திரு வேலன் சுவாமிகள்.**
சிவகுரு ஆதீனம். யாழ்ப்பாணம்

## ஆலய பிரதம குருக்களின் ஆசிச்செய்தி



நல்லூர் சந்திரசேகரப்பிள்ளையார் பெரும் சாந்தி குடமுழுக்கு கும்பாபிஷேகம் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. எம்பெருமானின் திருவருள் எல்லோருக்கும் கிடைக்கட்டும். எவ்வளவு இன்னல்கள் நோய் பரவும் காலத்திலும் அறங்காவல் குழுவின் அயராத முயற்சியாலும் அடியவர்கள் ஆற்றிய பெரும் திருப்பணி தொண்டினாலும் பிள்ளையாருடைய ஆலயம் இன்று பஞ்சதள ராஜகோபுரத்தோடு உள்வீதியிலும் சுற்றுப்புறத்தில் கலை அம்சம் பொருந்திய விநாயகர் சிற்பம் மேலும் அழகாக இருக்கிறது. இவையெல்லாம் பாரதநாட்டு ஸ்தபதி திரு.மணிகண்டன் அவர்களின் கைவண்ணத்தில் அமையபெற்றது.மேலும் பல ஆலயம் அமைத்து சிறப்புற ஆசீர்வதிக்கிறேன். ஆலயம் ஆரம்பகாலத்தொட்டு என்குருநாதர் சிவபாலன் ஐயா மறைந்த நாரயணக்குரு இவர்கள் என்றும் நண்றிக்கு உரித்தானவர்கள். பிள்ளையாருடைய பழைய முலஸ்தான திருத்த வேலைகள் மூன்று தளமாக அமைத்து நடைபெற்ற கும்பாபிஷேகத்தில் என்னுடன் பக்கபலமாக நின்ற பொன்னையா. சுந்தரம். நடராசா.தில்லைவிநாயகம். அப்பையா. மகாதேவன். இராசையா.விக்னேஸ்வரன் கோவில் ஒலி அமைப்பாளர் கிரி இவர்களை மறக்கமுடியாது. இந்த கும்பாபிஷேகத்தில் தன்னுடைய சிறிய பங்களிப்பு சிறுதொகையை தகப்பனார் கொடுக்கும் போது யார் பொறுப்பு யாரிடம் பணத்தைக் கொடுக்க என்று கேட்கும் போது செயலாளர் பொறுமையின் பண்பாளர் அமரர் தில்லைவிநாயகம் சொன்ன வார்த்தை இங்கே ஒருவரும் பொறுப்பில்லை பிள்ளையார்தான் பொறுப்பு என்று இவை எல்லாம் இப்ப தனிமைப்படுத்தி இருக்கையில் நான் நினைப்பது.எவ்வளவோ அற்புதம்செய்த பிள்ளையார் சிலகாலம் மறைத்தும் நாற்பத்திதெட்டு நாளில் பலகோவில் விக்கிரமும் வெளிப்படுத்தி தானும் வந்துசேர்ந்தார்.இதற்குப் பல வழிகளில் உதவியவர் அமரர் துரைசாமி இவரின் மகன் உபயமாக கண்டாமணி வழங்கியிருப்பது பிள்ளையாரின் திருவருள். இப்படி பல திருப்பணிகள் எல்லாம் பொறுப்பேற்று நிறைவுசெய்து கும்பாபிஷேகம் நடைபெறும் வேளையில் ஆலய நித்திய குரு சிவஸ்ரீ. சிறினிவாஸக்குரு மிகவும் சிறந்தமுறையில் தன்னுடைய பெரும் முயற்சியினாலும் பிள்ளையாரிடம் கொண்ட பக்தியினாலும் இரண்டாவது கும்பாபிசேகத்தை பெரும் விஸ்தர்னமாக செய்து வருவதும் பிள்ளையாரின் திருவருளே ஆகும். எதிர்காலம் வரும் சிறார்கள் கையில்தான் அவர்களை முன்னிற்க விட்டு நாம் ஒதுங்கிருந்து ஆசீர்வதிப்போம். இதைவிட என்னுடைய சகோதரர்கள் உடன் பிறவா சகோதரருமான அறங்காவலர்குழு. உபகுழு நான் பெற்ற செல்வம் உங்கள் ராஜன்குரு. தம்பி ராதா. பேரன்மார். மருமகன்மார்கள். சம்மந்தி. சிவபாலஐயா மற்றும் விநாயகர் அடியவர்கள் எல்லோரும் இன்புற்றிருக்க எல்லாம் வல்ல சந்திரசேகர விநாயகர் பாதம்பணிந்து ஆசிர்வதிக்ன்றேன்

**சிவஸ்ரீ. யோகீஸ்வரகுருக்கள் சதாசிவக்குருக்கள்**

விநாயகப் பெருமான் மெய்யடியார்களே!

உண்மை. அறிவு. அன்பே உருவாகிப் பாலில் நெய்யாகக் கரைந்து உறையும் இறைவன் தன்னை மனத்தால் சிந்தித்து. வாக்கால் வாழ்த்தி. காயத்தால் வணங்கி. வழிபடற் பொருட்டு எண்ணற்ற திருமேனிகளைக் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள் நிலையங்களே ஆலயங்கள் எனப்படும். இத்தகு ஆலயங்கள் பல நிறைந்ததும் விராட்புருடனது இடை நாடிஸ்தானம் என சாந்தோகிய உபநிடதத்தில் புகழும் பெற்றதும் தஷண கைலாயம் என அழைக்கப் பெறுவதும். முத்தமிழ் விரகராலும் அருணகிரிநாதராலும் பரவப்பெற்ற பெருமையுடையதுமான இவ்ஈழத்திருநாட்டின் கண் வடபால் சகல சிறப்புகளும். சைவமும். செந்தமிழும் தழைத்தோங்கி நிற்கும் யாழ்ப்பாணம் நல்லூரில் 17ஆம் நூற்றாண்டில் ஸ்தாபிக்கப்பட்ட எட்டு விநாயகர் ஆலயங்களுள் சிறப்பானதும் யாகங்களுக்கு மிக முக்கியத்துவமான " பொரசு" என்று அழைக்கப்படும் பலாச மரங்களால் சூழப்பற்றதும். தென்கிழக்கே தாமரை. ஆம்பல். நீலோற்பலம் முதலிய மலர்கள் நிறைந்த தடாகத்தையும் கிழக்கே செந்நெல் வயல்களையும் கொண்ட அழகிய சூழலில் "வேட்டைக்காரன் வளவு" என்னும் பரந்த நிலப்பரப்பிலே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மஹா சந்திரசேகர விநாயகருக்கும் நூதனமூர்த்திகள் மற்றும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நிகழும் பிலவ வருஷம் தைத்திங்கள் 10ம் நாள் (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை ஷஷ்டி திதியும் அமிர்த யோகமும் அத்த நட்சத்திரமும் கூடிய முற்பகல் 10.32 மணி தொடக்கம் 11.22 மணி வரையுள்ள மீன லக்கின கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில் மஹா கும்பாபிஷேகம் செய்யத் திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் அடியார்கள் வருகை தந்து காணுதற்கரிய இப்பெருஞ்சாந்திப் பெருவிழாவைக் கண்டு தரிசித்துப் பெரும்பேறு பெறுவீர்களாக. அத்துடன் இந்நிகழ்வின் முன்பின் நிகழும் கிரியைகளிலும் கலந்து எம்பெருமானின் அருள்பெறுவீர்களாக.

## கும்பாபிஷேக பிரதம குருக்களின் ஆசிச்செய்தி



அன்பேசிவம்! ஈழமணித்திருநாட்டின் வடபால் யாழ்ப்பாண மாநகரத்தில் நல்லூர்க் கிராமத்தின் நாயகனாக வீற்றிருந்து தன்னை நாடி வரும் அடியவர்களின் குறைகளையெல்லாம் நீக்கி திருவருளை வாரி வழங்கி வரும். அருள்மிகு சந்திர சேகரப்பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேகம் உலகில் அசாதாரண சூழ்நிலையால் தடைப்பட்டுவந்து. தற்சமயம் எம்பெருமானுடைய திருவருளினால் இன்று 23.01.2022 மிகவும் சிறப்பான முறையில் நடைபெற திருவருள் கூடியுள்ளது. புதிதாக அமைக்கப்பட்ட பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகமும். இருபுறமும் அமைக்கப்பட்ட மணிக்கோபுர கும்பாபிஷேகமும் இனியொரு இடர் தடை இல்லாது சிறப்பாக நடைபெற விநாயகப் பெருமானின் அடியவர்களுடன் நானும் ஒருவனாக எம்பெருமானை வேண்டி வழிபட்டு கும்பாபிஷேகக் குழுவினருக்கும் பெருமானின் அடியவர்களுக்கும் விநாயகப் பெருமானின் அருளும் ஆசியும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கினறேன்.

சுபமஸ்து

**சிவஸ்ரீ சதா இராதாகிருஷ்ணக் குருக்கள்**

## ஆலய குருவின் ஆசிச்செய்தி



ஸ்ருஷ்டி. ஸ்திதி. ஸம்ஹார. திரோபாவானுக் கிரஹபஞ்ச க்ருத்யபராயணனாக விளங்கக் கூடிய. எல்லம் வல்ல பரமேஸ்வரனுடைய பரிபூர்ண அனுக் கிரஹத் தினாலேயும். குருவினுடைய கிருபையினாலும் எனது மாதா. பிதாவினுடைய பரிபூரண ஆசீர்வாதத்தினாலும். நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் என்னும் நாமத்தையுடைய விக்கினேஸ்வரனுக்கு அதி விமர்சையாக மஹா கும்பாபிஷேகம் என்னும் குடமுழுக்கு விழா நடைபெறுகிறது. இந்த இனிய சுபமங்கள விழாவை நினைந்து அல்லும். பகலும். அனைவரினதும். உள்ளும் புறமும். தும்பிக்கையான் மேல் நம்பிக்கை கொண்டு அவன் அருளாலேயே அவன்தாழ் வணங்கி. அவன் நினைவினால் உந்தப்பட்டு. ஸ்ரீ சந்திசேகரப் பிள்ளையார் தன்னுடைய அனைத்துக் காரியங்களையும். பூரணத்துவமுடனும். முழுமையாகவும். சிறப்பாகவும் செய்வித்துக்கொண்டிருக்கின்றார்.

எல்லாம் அவன் செயல். இந்த குடமுழுக்கு விழா சகல விதமான சிறப்போடும் உற்சாகத்தோடும் நடப்பதையெண்ணிப் பார்க்கும்போது உள்ளம் பூரித்து. நெக்குருகி. காதலாகி. கசிந்து கண்ணீர மல்குகின்றேன். ஏனெனில் இந்தப் பிள்ளையார் எங்கள் சொந்தப் பிள்ளையார். பாரம்பரியமாகவும். பரம்பரை பரம்பரையாகவும் இந்தப் பிள்ளையாரை உள்ளன்போடும். உவகையோடும். ஊட்டமுடனும். மிக்க நாட்டமுடனும் பூஜித்தும். நேசித்தும் வருகின்றோம். ஐந்து தலைமுறையாக அவன் அடிபணிந்தேத்துகின்றோம். இந்தப் பிள்ளையாரின் பரம்பரை பூஜாஸ்தானீகர நாங்கள் என்பதில் பேருவகை கொள்கின்றோம். எனவேதான் இந்த கும்பாபிஷேக கிரியைகள் யாவையும் ஆராய்ச்சி பூர்வமாகவும். மிகவும் நுணுக்கமோடும் ஏற்பாடுசெய்து மிகச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. விகனக்ருது பிக்ன ஹருது இதி ஸ்ரீ விக்னேஸ்வரன். விக்னங்களை உண்டு பண்ணுபவனும் அந்த விக்னங்களை - இல்லாமற் செய்யபவனும் எல்லாம்வல்ல விக்னேஸ்வரனே ஆவான். சகல கணங்களுக்கும் தலைவனாக இருப்பதனாலேயே கணநாதன் என்று அழைக்கப்படுகிறான். எந்தவிதமான ஒரு செயலை நாம் செய்வதற்கு முன்னர் விக்னேஸ்வரனைப் பூஜை பண்ணி. அவரது அனுமதி பெற்ற பின்னரே அடுத்த செயலை நாம் செய்கின்றோம். எனவேதான் நம் சந்திரசேகரப் பிள்ளையாருக்கு ஆகமப் பிரகாரம் சாஸ்த்ரோக்தமாக இந்தக் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. சிவாகமங்கள் 28 ஆகும். அவையாவன:-

காமிகம் யோகசம் சிநய காரணம் யசிதம் ததா
தீப்தம் சூக்ஷ்மம் ஸஹஸ்றம்ச அமசுமான் சுப்ரபேதகம்
விஜயம் சைவ நிஸ்வாசம் ஸ்வாயம்புவ மதானலம்
வீரம்ச ரௌரவம்சைவ மகுடம் விமலம் ததா
சித்தம் சந்தான சர்வோக்தம் பாரமேஸ்வர மேவச
கிரணம் வாதுனம் சைவாபி அஷ்டா விம்சதி ஸம்ஹிதாஹ.

என்று சொல்லப்படுகின்ற ஆகமங்களில் எவ்வாறு சொல்லப்பட்டிருக்கின்றதோ அவ்வாறே இந்த கும்பாபிஷேகக் கிரியைகள் அமைத்தையும் அறிஞர் பெருமக்களின் உதவியோடும் அந்தணப் பண்டிதர்கள். ஆய்வாளர்கள் கூற்றுப்படியும் மற்றும் நடைமுறை வழக்கங்களையும். சம்பிரதாயங்களையும் கால. தேச. நேரத்தை முன்னிட்டு ஆய்ந்து. அறிந்து முழுமனதோடும். மனநிறைவோடும். அக நெகிழ்வோடும் பகதி சிரத்தையுடனும் இநதக் கும்பாபிஷேகம் என்னும் குடமுழுக்கு விழா மிகவும் இனிதே நடைபெழுகிறது. இந்தக் கும்பாபிஷேக விழா வானது இனிதே நடைபெறவேண்டும் என்று எண்ணி மனதாலும். வாக்காலும். செயலாலும். அருந் தொண்டாற்றிய அத்துணை நல்ல உள்ளங்களும் சகல சௌபாக்கியங்களும் பெற்று ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையாரின் பரிபூரண அனுக்ரஹம் பெறவேண்டுமாய் ஆசீர்வதிக்கிறோம.

**சிவஸ்ரீ முத்து ஸ்ரீநிவாச சிவாச்சாரியார், ஆலயகுரு, பரம்பரை பூஜாஸ்தானிகர்.**

விளம்பர அனுசரணை மஹா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்


உலகத் தரம் வாய்ந்த முதல்தர வர்ணப்பூச்சு
NIPPON PAINT LANKA (PVT) LTD.
NIPPON PAINT
A MEMBER OF THE NIPSEA GROUP www.nipponpaint.com.lk
Tel : + 94 11 - 4600400
Fax : + 94 11 - 4600409
Mobile : + 94 77 3140409
Email : gomasr@nipponpaint.comlk
No. 69A, Buthgamuwa Road, Rajagiriya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்வப் பிரம்மனே நமஹ







ம்பதி

# வஸ்தானம்

## ஷ்ட பந்தன நவகுண்ட பக்ஷ

## ழ் - 2022

மீனலக்ன சுபமுகூர்த்த வேளையில்)

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பது உன்னை
என்றும் வணங்குவது உன் மலர்த்தாள் எழுதாமறையின்
ஒன்றும் அரும் பொருளே அருளே உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே அழியாமுத்தி ஆனந்தமே

ழுந்தருளி வேண்டி தொழும் அடியார்களுக்கு அனைத்து சௌபாக்கியங்களையும் வாரிவழங்கி சகல ஜீவராசிகளுக்கும் தாயாக விளங்குகின்ற மான தூபிகளுக்கும் நிகழும் மங்கலகரமான பிலவ வருடம் தை மாதம் 10ஆம் நாள் (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை அத்த நட்சத்திரமும் கம் நடைபெறுவதற்கு காளியம்பாளின் திருவருள் கைகூடியுள்ளது. எனவே அடியார்கள் ஆலயத்தில் நடைபெறுகின்ற கும்பாபிஷேக கிரியைகளில் ணில் நல்ல வண்ணம் வாழ்வீர்களாக!.

ல் கொண்டு எழுந்தருளி அனைத்து
னைய பரிவார மூர்த்திகளுக்கும் ஆலய
ரும் முயற்சியினால் சிறியதாக இருந்த
ட்டு அகமகிழ்வடைகிறோம். காளி
தின் வளர்ச்சிக்கு காரணம் என்றால் அது
வ பிரம்மகுல மக்கள் பிரபஞ்சத்தில் உள்ள
ழ்வை பெற்று வாழ குலநாயகி கண்ணகி
களையும் தெரிவித்து அனைவரையும்

**.மு.பரம சண்முகராஜ சிவாச்சாரியார்**
**ாளி அம்மன் தேஸ்தான பிரதம குரு.**

### பிரதேச செயலாளரின் வாழ்த்துச்செய்தி

ம் தானும் அரனெனத்தொழுமே" என்ப
ங்க ஆலயம் இறைவடிவமே ஆகும்.
ல்தான்
கோவில் இல்லா திருவிலூர் அடவி காடே"
அப்பர் சுவாமிகள் கூறியுள்ளார். அந்தவகை
பூமி என திருமூல நாயனாரால் புகழப்பட்ட
த்திருநாட்டிலே சிரசென - விளங்கும்
ணத்தில் வளம் கொழிக்கும் கோப்பாய்
தில் இற்றைக்கு 150 வருடங்களுக்கு
வரலாற்றுப் பின்னணியினைக் கொண்டு
பாலிக்கும் ஆலயமாக ஸ்ரீ காளியம்பாள்
திகழ்கிறது.
கோவையம்பதி ஸ்ரீ காளியம்பாள்
ானது புனருத்தான வேலைகள் நிறைவு
புதுமெருகூட்டப்பட்டு அழகுற காட்சிதரும்
யில் சிவாகம முறைப்படி மகா கும்பாபி
நிகழ்வதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்

ார் கெடுவதில்லை நான்கு மறை தீர்ப்பு"
கையை சரண்புகுந்தால் அதிகவரம்
ம்" என்ற பாரதியாரின் அமுத மொழிக்கேற்ப
யின் தெய்வீகக்கைங்கரியத்தில் தம்மை
த்துக்கொண்ட அனைவரும் அனைத்து
களையும் பெற்று சுபீட்சத்துடன் அம்மண்
ல்லவண்ணம் வாழவேண்டும் என ஸ்ரீ
பாளினை பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி சுபாஜினி மதியழகன்**
**பிரதேச செயலாளர்**
**பிரதேச செயலகம், வலிகாமம் கிழக்கு,**
**கோப்பாய்.**

### ஆசிச்செய்தி

மனிதகுல வரலாற்றின் தொல்வழிபாடுகளில் ஒன்றாகத் தாய்த்தெய்வவழிபாடு அமைந்துள்ளது. அதனுள் ஆதிபராசக்தியாக விளங்கும் காலத்தைக் கட்டியாளும் தெய்வமாகக் காளி சுட்டப்படுகின்றாள். காளி என்பது வடசொல். அதனைத் தமிழர்கள் பயன்படுத்துகின்றோம். வடநாட்டவர் பயில்கின்ற 'காலீ' என்பது தமிழ்ச் சொல்லாகும். காலீகால் எனும் அடிச்சொல்லின் வழிவருவது. கால் - கார் :கார் - கருப்பு: கருப்பி என்பதே காலீ எனப்படுகிறது. புராணங்கள் காலனாகிய சிவனின் துணைவியைக் காளியாகச் சித்தரிக்கின்றன.

அதர்வண வேதமும் தேவி மஹாத்மியமும் காளியின் பெருமைகளைச் சிறப்புற எடுத்துரைக்கின்றன. சக்தியின் தசமஹாவித்யாக்களில் ஒருவராகவும் காலத்தை பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து ஒடுக்க வல்லவராகவும் கூறப்படுகின்றார். தாருகன். தக்கன். ருரு. மகிஷன் முதலான துஷ்ட அசுரர்களை அழித்ததனூடாகத் தீயவர் களை அழித்து நல்லவர்களைக் காத்து அருள் பாலிக்கும் அருட்தெய்வமாகத் திகழ்கி றார். இவர் காளி.மஹாகாளி.வீரமாகாளி.பத்திரகாளி எனப் பலவாறு வணங்கப்படுகிறார்.

நீர்வளமும் நிலவளமும் நிறைந்த கோவையம்பதி கல்விக்கும் பக்திக்கும் பெயர் போன ஊராகும். யாழ்ப்பாண நன்னிலத்தின் சைவமும் தமிழும் தழைக்கப் பெரும்பணி புரிந்த அற்புதமனிதர்களைத் தந்த ஊரிதுவாம். இவ்வூரின் மத்தியில் நின்று அருளாட்சி செய்கின்றார் எங்கள் காளி அம்மாள். அவரின் திருவருட்கடலுள் தோய்ந்து இன்புற்றோர் அநேகர். அருள் பெற்ற மாந்தர் திரண்டே 'நூதனதிரிதள இராஜ கோபுர ஸஹிதபுனராவர்த்தன அஷ்ட பந்தன நவகுண்டபக்ஷ மஹா கும்பாபி ஷேகம் நடாத்த விழைந்துள்ளனர். ஆலய ஆன்மீக அருளை தூரத்தில் வரும் போதே காணச்செய்வது கோபுரம் என்பர். 'கோபுரதரிசனம் கோடி புண்ணியம்'ஆகும். இவ் வாலயக் கோபுரம் பல்லவர் காலப்பாணியில் அமைந்துள்ளது. கோபுரம் இறைவியின் ஸ்தூலவடிவமாகத் திகழ்கிறது. ஆதலால் அதனைத் 'தூரத்தே காணும் போதே வணங்க வேண்டும்.' என ஆறுமுகநாவலர் குறிப்பிடுகின்றார்.

பன்னிருவருடங்களுக்கு ஒருமுறை செய்யப்படுவது மஹாகும்பாபிஷேகம் ஆகும். அது ஆலயத்தில் இறைவியின் திருவருட்கடாட்சத்தை மேலோங்கச் செய்கின்ற முக்கியமான கிரியையாக ஆகமங்களில் விளக்கப்படுகிறது. அம் மஹா கும்பாபிஷேகத் தைக் கண்டுகளிப்பதனூடாக க்காளிஅம்பாளின் திருவருளுக்கு உள்ளாகமுடியும்.



"யாதுமாகிநின்றாய் - காளீ
எங்கு நீ நிறைந்தாய்
தீது நன்மையெல்லாம் - நின்றன்
செயல்களின்றி யில்லை
போதுமிங்கு மாந்தர் - வாழும்
பொய்மை வாழ்க்கை யெல்லாம்
ஆதிசக்தி. தாயே என் மீ
தருள் புரிந்துகாப்பாய்"

எனப் பாடிப்பரவி நிற்கிறார் பாரதியார். காளி அன்புருபமாய் துன்பங்களை இல்லாதொழிப்பவள். நன்மை விளைவிப்பவள். சர்வமும் அவள் மயம். உலகத்தவர் யாவரும் காளிஅம்பாளது மஹாகும்பாபிஷேகத்தைக் கண்டுகளிப்பதனூடாகத் திருவருளுக்குப் பாத்திரமாகி இன்புற்றிருக்க வேண்டி நிற்கின்றேன்.

**சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி,**
**முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

### அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



கோப்பாய் மத்தி ஸ்ரீ காளி அம்பாள் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

யாழ்ப்பாணம் கோப்பாய் திருவருள் மிகு காளி அம்பாள் தேவஸ்தான அதிசுந்தர நூதன திரி தள இராஜகோபுர ஸஹித புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி நடைபெறுவது கோப்பாய் வாழ் மக்களுக்கு மட்டுமின்றி உலகிலுள்ள அனைத்து உயிரினங்களுக்கும் நன்மையைத் தரவல்லது. பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் புனருத்தாருண கும்பாபிஷேகம் ஆலயங்களில் இறை சாந்தியத்தை அதிகரித்து அடியவர்களுக்கு அருளை அள்ளி வழங்கும் பேறைத் தருகின்றது.

ஆலயங்களில் இராஜகோபுரங்கள் அக்கிராமத்தின் ஆன்மீக நாட்டத்திற்கு திசைகாட்டிகளாக விளங்குகின்றன. இராஜகோபுர கும்பாபிஷேகம். கிராம மக்களின் பாதுகாப்புக்கும். ஆன்மீகத் தேடலுக்கும். மக்களின் ஈடேற்றத்திற்கும் ஏதுவாக அமைகின்றது.

இந்த வகையில் காளி அம்பாள் அருள் பிரவாகம் கிடைக்க கிரிகைகளை சிறப்புற நடாத்தும் அந்தண சிவாச்சாரியார்களையும் அவ் அரிய பணியை சிரமேற்கொண்டு நிறைவு செய்யும் ஆலய பரிபாலன சபையினர். தொண்டர்கள். அடியவர்கள் என அனைவருக்கும் காளி அம்பாளின் அருள் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு. யந்திர பூசையோடு ஆரம்பமாகி நடைபெறும் கர்மாரம்பம். யாகரம்பம். தூபிஸ்தபனம். தீபஸ்தாபனம். ஆகிய கிரிகைகள் முறைப்படி நடைபெற்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறவும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மண்டலாபிஷேகமும் சிறப்புற நடைபெற இறைவனைப் பிரார்த்தித்து காளி அம்பாளின் கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா சிறப்புற அமைய நல்லாசிகளை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**கணபதிப்பிள்ளை மகேசன்.**
**அரசாங்க அதிபர்,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

### பிரார்த்தனையுரை

உலகீன்ற அன்னையாகிய பராசக்தி - மகாகாளியாகி கோப்பாய் மத்தியில் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள். அந்த அன்னைக்கு அடியவர்கள் கூடி திருக்குடமுழுக்குப் பெருவிழா எடுக்கின்றனர். அவளருளாலே அவள் தாள்களைப் பணிகின்றனர்.

'யாதுமாகி நின்றாய் காளி' என விளிக்கும் மகாகவி பாரதியார் - தீது நன்மை என எல்லாமே மகாகாளியின் செயற்பாடுகள் எனக் குறிப்பிடுகின்றார். தன்னை நாடிவரும் அடியவர்கள் அனைவருக்கும் நல்லருள் பாலிக்கும் அம்பாளுக்கு நன்றிக்கடனாக கோவையம்பதி காளி அம்பாள் தேவஸ்தானத் திருப்பணிச் சபை மற்றும் பரிபாலன சபை சார்ந்த பெரியவர்கள் இணைந்து - மூன்று தளங்கள் கொண்ட அழகிய இராஜ கோபுரத்தை அமைத்ததுடன் ஆலயத்தை அழகிய வேலைப்பாடுகளுடன் புனருத்தாரணமும் செய்துள்ளனர்.

திருக்குடமுழுக்குப் பெருவிழாவைத் தரிசிப்பதுகூட நமது முன் வினைப் பயன் ஆகும். உலகெங்கும் வாழும் காளி அன்னையின் அடியவர்கள் இதற்காகப் பங்களிப்புகளை நல்கியுள்ளனர். அவர்கள் அத்தனை பேருக்கும் அன்னை மாகாளியின் நல்லருள் கைகூடவும் அன்னையின் கிருபையால் ஊர்செழித்தோங்கிச் சிறப்புறவும் பிரார்த்திக்கின்றேன்.

**செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன்**
**யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் தலைவர்,**
**கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதிமுதல்வர்.**

## தினம் ஒளி அமைப்பாளர்

**ி கோவிலடி, கோப்பாய் மத்தி,**
**கோப்பாய்.**

## ஆலய பரிபாலன சபையினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஓட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊரவேம்பு, சித்திரவேம்பு, சமன்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு**
**பிள்ளையார் கோயில் வீதி,**
**கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம்**
**கிளை:**
K.K.S. வீதி, இணுவில்

## வேலையாள் தேவை

யாழ். நகரை அண்டிய பகுதியில் வீட்டில் தங்கியிருந்து ஆண் முதியவர் ஒருவரை பராமரிப்பதற்கும் மற்றும் வீட்டு வேலைகளை செய்வதற்கும் ஏற்ற 45 - 60 வயதுக் கிடைப்பட்ட ஆண் ஒருவர் தேவை. உணவு மற்றும் தகுந்த சம்பளம் வழங்கப்படும். (CS 1260) (3/6)

**தொடர்பு : 077 361 4630**

## காணி விற்பனைக்கு

சரவணை கிழக்கு, சரவணையில்
13 பரப்பு தோட்டக்காணி
விற்பனைக்குண்டு.
விலை பேசித்தீர்மானிக்கப்படும். (cs 1233) (2-6)

**077 255 0807**

## கொழும்பில் வெல்டிங் வேலை

வெல்டர்,வெல்டிங் உதவியாளர்,வெல்டிங் வேலை பழகவிரும்புவோர் தங்குமிடம் உண்டு உடன் தேவை

**தொடர்பு : 0773890257**

## விற்பனைக்கு

**HONDA 1000 KV**
(பெற்றோல்) மின் பிறப்பாக்கி
**JAPAN** விற்பனைக்குண்டு. (cs 42345) (2-6)


**077 778 1221**

## கணித, ஆங்கில வகுப்புக்கள்

**தரம் - 06, தரம் - 11 வரை**
**ந. செந்தூரன்** (cs.1172) (2.6)

**074 215 8340**

## 31 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 25.12.2021 சனிக்கிழமையன்று சிவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவர்


### அமரர் ஐயாத்துரை சிவதாஸ்

(முன்னாள் ஐயாத்துரை & சன்ஸ் புத்தக நிலைய உரிமையாளர், சாவகச்சேரி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 22.01.2022 சனிக்கிழமையன்று காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இடம்பெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (24.01.2022) திங்கட்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தயை கூர்ந்து இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக கருதிக் கலந்து சிறப்பிக்கவும்.**

**நுணாவில் மேற்கு,**
**சாவகச்சேரி.**
(cs.1193) 2.6)
**குடும்பத்தினர்**



## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

### வரவேற்பாளர்

**தகைமை**
- க.பொ.த. உயர்தரம் சித்தி

### சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்

**தகைமை**
- க.பொ.த. உயர்தரம் சித்தி

### கிராபிக் டிசைனர் (Graphics Designer)



**தகைமைகள்**
- **Photoshop** மற்றும் கிராபிக் மென்பொருளில் அனுபவம்.
- பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக் கோவையுடன்
**24.01.2022 திங்கட்கிழமை மு.ப 09.00 மணிமுதல்**
**ந.ப 12 மணிவரை நேரில் சமுகம்தரவும்.**

**உதயன் பத்திரிகை**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## 123 wedding Assisted Service — திருமண தரகர் சேவை

**123wedding.com**

தொலைபேசி – 0778386030
WhatsApp - 077 568 1869,
077 649 2625



### பதிவு இலவசம்

கொழும்பில் பிறந்து வளர்ந்த 29 வயது 1992-ம் ஆண்டு பிறந்தமகர ராசி திருவோணம் (நட்சத்திரம்) பட்டதாரி படித்த கணக்காளராக பணிபுரியும் பெண்ணிற்கு இலங்கை கொழும்பில் வசிக்கும் படித்த. வேலையில் உள்ள மாப்பிள்ளை தேவை.

இத்தாலியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 30 வயது 1991-ம் ஆண்டு பிறந்த, ரிஷபம் கிருத்திகை 2 ஆம் பாதம் செவ்வாய்க்குற்றம் நன்றாக படித்த தனியார் வேலையில் உள்ள மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

லண்டன் வாழ் 35 வயது 1986-ம் ஆண்டு பிறந்த கடகம் பூசம் பட்டதாரி படித்த வைத்தியராக உள்ள பெண்ணிற்கு ஐரோப்பா, பிரித்தானியா, கனடாவில் வசிக்கும் மாப்பிள்ளை தேவை.

லண்டன் வாழ் 29 வயது 1992-ம் ஆண்டு பிறந்த மகரம் அவிட்டம் நன்றாக படித்த அரச வேலையில் உள்ள பெண்ணிற்கு பிரித்தானியாவில் அல்லது கனடாவில் பிறந்து படித்த பணியில் உள்ள மாப்பிள்ளை தேவை.

யாழ்ப்பாணம் வாழ் 32 வயது 1989ஆம் ஆண்டு பிறந்த பட்டதாரி படித்த பெண்ணிற்கு உள்நாட்டு அல்லது வெளிநாடு வாழ் மாப்பிள்ளை தேவை.

யாழ்ப்பாணம் வாழ் 30 வயது 1990ஆம் ஆண்டு பிறந்த கடகம் ஆயில்யம் பட்டதாரி படித்த பெண்ணிற்கு வாழ் மாப்பிள்ளை தேவை.

யாழ்ப்பாணம் வாழ் 34 வயது 1987ஆம் ஆண்டு பிறந்த கன்னி ஹஸ்தம் பட்டதாரி படித்த தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் பெண்ணிற்கு இலங்கை அல்லது வெளிநாடு வாழ் மாப்பிள்ளை தேவை.

அவுஸ்திரேலியா வாழ் 37 வயது 1983-ம் ஆண்டு பிறந்த துலாம் ராசி சுவாதி அரசங்க உத்தியோத்தில் உள்ள (நேர்ஸ்) மாப்பிள்ளைக்கு பெண்தேவை . அவுஸ்திரேலியா, கனடா, பிரித்தானியா மணமகள் எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பு வாழ் 31 வயது 1990-ம்ஆண்டு பிறந்த பட்டதாரி படித்த தனியார் நிறுவனத்தில் வேலை புரியும் பெண்ணிற்கு உள்நாட்டு அல்லது வெளிநாடு வாழ் மாப்பிள்ளை தேவை.

கொழும்பு வாழ் 37 வயது 1984-ம் ஆண்டு பிறந்த மகரம் அவிட்டம் செவ்வாய்க் குற்றம் பட்டதாரி படித்த பெண்ணிற்கு வெளிநாட்டு வாழ் மாப்பிள்ளை தேவை.

கனடா வாழ் 29 வயது 1992-ம் ஆண்டு பிறந்த கன்னி அவிட்டம்பட்டதாரி படித்த தனியார் உத்தியோகத்தில் உள்ள மாப்பிள்ளைக்கு இலங்கை வாழ்பெண் தேவை.

லண்டன் வாழ் 28 வயது 1993-ம் ஆண்டு பிறந்த மேடம் அசுவினி படித்த சொந்தமாக வியாபாரம் செய்கின்ற மாப்பிள்ளைக்கு பெண்தேவை. ஐரோப்பா, கனடா.பிரித்தானியாவில் வசிக்கும் பெண்வீட்டார் தொடர்பு கொள்ளவும்.

லண்டன் வாழ் 28 வயது 1993-ம் ஆண்டு பிறந்த கன்னி அவிட்டம் பட்டதாரி படித்த பொலிஸ் உத்தியோகத்தில் உள்ள மாப்பிள்ளைக்கு இலங்கை வாழ் பெண் தேவை.

பிரான்ஸை வசிப்பிடமாக கொண்ட 32வயது 1989-ம் ஆண்டு பிறந்த, கடகம் ஆயில்யம் பட்டதாரி படித்த நல்ல வேலையில் உள்ள மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பிரான்சில் பிறந்து படித்த பணியில் உள்ள பெண்வீட்டார் தொடர்பு கொள்ளவும்.

123wedding.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞன் மீது கும்பல் தாக்குதல்

இளைஞனின் வீடு புகுந்து கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது. சம்பவத்தில் காயமடைந்த இளைஞன் சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மீசாலை கிழக்கு மதுபன் வாசிகசாலைக்கு அருகில் நேற்று மாலை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. காண்டீபராசா தசங்கன் (வயது - 24) என்பவரே காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுவர்கள் வாகனத்தை கொள்வனவு செய்வதற்கு காயமடைந்த இளைஞன் பிணை கையெழுத்திட்டுள்ளார். வாகனத்தின் தவணைக் கட்டணம் செலுத்தப்படாமை தொடர்பில் பிணைக் கையெழுத்திட்ட இளைஞன், வாகனத்தை கொள்வனவு செய்தவர்களிடம் கேட்டுள்ளார். இது வாய்த்தர்க்கமாக மாறியுள்ளது. இதன் பின்னரே இளைஞன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஓ.9.159)


## Study in EUROPE

UK, USA, CANADA, FRANCE, GERMANY, AUSTRALIA & ITALY, ROMANIA போன்ற நாடுகளுக்கு மிகவும் குறைந்த கட்டணத்தில் வெளிநாட்டு பல்கலைக்கழக அனுமதிகளைப் பெற்றுத்தந்து உங்களுக்கான சிறந்த வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்குகிறது எமது நிறுவனம்

100% Visa | Course Fees from £1500 | 15 நாட்களில் பயணம்

Top Ranking Universities | With or without IELTS

Work permit & settlement opportunities after studies

American College of Applied Studies Pvt Ltd

அழையுங்கள்: 077 52 56 135

## Vacancy for Software Developer and Data Analyst

A USA-based company with offices in Colombo and Jaffna is looking for candidates for the posts of Web Application Developer and Data Analyst.

Qualifications:
- Degree in Computing/IT or equivalent experience
- Good knowledge of programming
- Knowledge in Database Management Systems
- Knowledge in Mobile programming is a plus

Send your CV to siva@monthlywarranty.com

(CR.37399) (2.6)

## தேவை பொதி செய்பவர், சாரதி

யாழ்நகரில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்திற்கு பொதி செய்பவர் சாரதி தேவை.
வயதெல்லை (21 - 35) இற்கு இடைப்பட்ட ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:
வ.வ. இராமசாமிப்பிள்ளை & சன்ஸ்
இல.58, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4766

(cs.1261) (2.6)

## யாழ். கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

கேக் ஐசிங், கூந்தல் அலங்காரம், Facial, அழகுக்கலை, உணவுகள் தயாரித்தல் பயிற்சிகளின் 2021ம் ஆண்டு மாணவிகளின் பரீட்சைகளுக்காக இடைநிறுத்தப்பட் டிருந்த கிழமை நாள் மற்றும் சனி ஞாயிறு புதிய பிரிவுகளுக்கு வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பமாகின்றன.

பதிவுகளை மேற்கொண்டிருந்தவர்களும், புதிதாக கேக் ஐசிங், கூந்தல் அலங்காரம், Facial, அழகுக் கலை, உணவுகள் தயாரித்தல் ஆகிய பயிற்சிகளில் சேர விரும்புவர்களும் தினமும் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை நேரில் வந்து விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். -இயக்குநர்

## சவுதி அரேபியா வேலைவாய்ப்பு

சாதாரண தொழிலாளர் (RESTAURANT உதவியாளர்கள்) எண்ணிக்கை 105

சம்பளம் - SR 900 + உணவு அலவன்ஸ் - SR 200
(Subjects to change according to the exchange rate) (1 SR = Rs.54/-)
AL/0524/Advt:/03/22
AL/0524/0034/21

விதிமுறை & நிபந்தனைகள்:
- தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவ வசதி இலவசம்.
- நாளொன்றுக்கு 8 மணித்தியாலமும், வாரத்தில் 48 மணித்தியாலம் வேலை
- 2 வருட ஒப்பந்த காலம், 21நாட்கள் விடுமுறை
- ஒப்பந்த காலம் நிறைவில் மீண்டும் நாடு திரும்பும்போதும் விமானப்பயண டிக்கெட் இலவசம்.
- ஏனையவை சவுதி அரேபியாவின் தொழிலாளர் சட்டத்திற்கு உட்பட்டது.

அரச அனுமதிக்கட்டணம் ரூபா. 110134.00

நேரே வாருங்கள் அல்லது உடன் அழையுங்கள்:
0771456692 | 0775522094 | 0777360267
ovdirectlines@gmail.com | vacancy@directlines.lk

Direct Lines (Pvt) Ltd.
(35 YEARS OF EXCELLENCE IN SERVICE)
Manpower & Recruitment Consultancy
379, 2ம் மாடி, காலி வீதி,
SLBFE LIC NO. 524
மேலதிக விபரங்களுக்கு எமது வலைத்தளத்தை பார்க்கவும். www.directlines.lk

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள மணிக்கூட்டு கடைக்கு வேலையாட்கள் தேவை.
வயது : 18 - 40 (ஆண் / பெண்)
சம்பளம் : 25000/=
தொடர்புகளுக்கு:
070 304 3633, 070 304 3634
(CS 1279) 1-6

## வேலையாள்கள் தேவை

PhotoShop Desiging, Typing மிகவும் திறம்படத் தெரிந்த பெண்கள் எமது Printers இற்கு தேவை.
காலை 9.00 - 4.00 மணிவரை
எமது Printers இற்கு தொடர்பை ஏற்படுத்தி சமுகம் தரவும்.

GN Printers
தகவல் தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக (Kokkuvil)
28A Brown Road, Jaffna.
077 031 2313, 077 017 2701


## 2022/ 2023 கல்வி ஆண்டுக்காக புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கு மாணவர்கள் உள்ளீர்ப்பு

## புடவைக் கைத்தொழில் திணைக்களம்

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களில் 2022 மார்ச் மாதம் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்படுவதற்கு ஏற்பாடாகியுள்ள கீழ் குறிப்பிடப்பட்ட பயிற்சி கற்கைகளுக்காக தகைமையை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இந்தக் கற்கைகள் கட்டண அறவீடு இன்றி முழுமையாக இலவசமாக நடத்தப்படும்.

01. நடத்தப்படும் கற்கையின் பெயர் மற்றும் காலம்
    - I. கைத்தறி புடவைக் கைத்தொழில் அடிப்படை பயிற்சி கற்கை - 06 மாதம்
      (06 மாதங்கள் முழு நேர கற்கை ஒன்றாக இருப்பதோடு, கைத்தறி புடவைக் கைத்தொழிலில் ஈடுபடுவதற்கு தேவையான அடிப்படை அறிவை பெற்றுக்கொடுப்பது இந்தக் கற்கை மூலம் மேற்கொள்ளப்படும்)
    - II. கைத்தறி புடவைக் கைத்தொழில் இறுதி சான்றிதழ் கற்கை - 12 மாதங்கள்
      (12 மாதங்கள் முழு நேர கற்கை ஒன்றாக இருப்பதோடு, இறுதியில் நடத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தி பெறுகின்ற மாணவர்களுக்கு புடவைக் கைத்தொழில் இறுதிச் சான்றிதழ் வழங்கப்படும்)
02. உள்ளீர்ப்புக்கான தகைமைகள்
    - I. அடிப்படை பயிற்சிக் கற்கை
      - 8 ஆம் தரம் வரை கல்வி கற்றிருத்தல்.
      - 16 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
    - II. இறுதிச் சான்றிதழ் கற்கை
      - க.பொ.த. (சா.தர) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மற்றும் கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.
      - 18 வயதுக்கு குறையாத மற்றும் 35 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

** கற்கைகளை கற்பதன் மூலம் கிடைக்கின்ற நன்மைகள்
1. கைத்தறி புடவைக் கைத்தொழில் சுய தொழிலாளர்களாகும் வாய்ப்பு
2. உள்நாட்டு கைத்தொழில் அபிவிருத்திக்காக உங்களது பங்களிப்பை பெற்றுத்தருதல்
3. புடவைக் கைத்தொழில் ஆலோசகர் பதவி ஒன்றுக்கு நியமிக்கப்படும் வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியும் (குறித்த தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதோடு போட்டிப் பரீட்சை ஒன்றில் மூலம் இணைக்கப்படும்)
4. ஆங்கிலம், கணினி அறிவு மற்றும் ஆளுமை விருத்தி திறன்களை மேம்படுத்தல்

I. கற்கையை மேற்கொள்ளும் காலத்தில் 100.00 ரூபா தினசரிக் கொடுப்பனவு மற்றும் நிறுவனம் சார்ந்த சீருடை வழங்கப்படும்.
II. விடுதியுடனான பயிற்சி நிறுவனங்களுக்கு உள்ளீர்க்கப்படும் மாணவர்களுக்கு இலவச தங்குமிட வசதி வழங்கப்படும் (உணவு செலவுகள் தவிர்த்து)

| | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் முகவரி | மாவட்டம் | விடுதி வசதி | மொழி ஊடகம் |
|---|---|---|---|---|
| 1 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், 280/1, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவ | கொழும்பு | உண்டு | சிங்களம் |
| 2 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், ஹக்மன வீதி, மாத்தறை | மாத்தறை | உண்டு | சிங்களம் |
| 3 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், கிரம | ஹம்பாந்தோட்டை | உண்டு | சிங்களம் |
| 4 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், அருப்பல வீதி, வட்டபுலுவ, கண்டி | கண்டி | உண்டு | சிங்களம் |
| 5 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், கெட்டபே, பேராதனை | கண்டி | உண்டு | சிங்களம் |
| 6 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், கினிகம, பண்டாரவளை | பதுளை | உண்டு | சிங்களம் |
| 7 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் கோன்கஹமுல, பலாபத்வல, மாத்தறை | மாத்தறை | உண்டு | சிங்களம் |
| 8 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், போயகனே, குருணாகல் | குருணாகல் | உண்டு | சிங்களம் |
| 9 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், கொட்டல, வேயன்கொட | கம்பஹா | உண்டு | சிங்களம் |
| 10 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், மிஹிரிகம, தலாவ, அநுராதபுரம் | அநுராதபுரம் | உண்டு | சிங்களம் |
| 11 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், பின்னவல, ரம்புக்கன | கேகாலை | இல்லை | சிங்களம் |
| 12 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், கிங்தொட்ட, காலி | காலி | இல்லை | சிங்களம் |
| 13 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், சம்மாந்துறை | அம்பாறை | இல்லை | சிங்களம் தமிழ் |
| 14 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், 194, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | இல்லை | தமிழ் |

03. கீழ் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவம் பிறப்புச் சான்றிதழ், க.பொ.த. (சா.தர) மற்றும் க.பொ.த. (உ.தரம் - இருப்பதாயின்) பெறுபேறு சான்றிதழ் ஆகிய சான்றிதழ்களின் நிழல் பிரதிகளை இணைத்து 2022.02.04 ஆம் திகதிக்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

**பணிப்பாளர்**
**புடவைக் கைத்தொழில் திணைக்களம்**
**3ஆவது மாடி, செயலாளர் நாயக அலுவலகக் கட்டிடம்**
**மாளிகாவத்தை, கொழும்பு 10. தொ.பே. : 011-3054492/ 011-2322895**
**மின்னஞ்சல் : dtidev2000@gmail.com**

### மாதிரி விண்ணப்பப்படிவம்

### *2022/ 2023 கல்வி ஆண்டுக்காக புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கு மாணவர்கள் உள்ளீர்ப்பு*

1. முழுப் பெயர்:
2. தனிப்பட்ட முகவரி:
3. தொலைபேசி இலக்கம்:
4. வதிவிட மாவட்டம்:
5. பிறந்த திகதி:
6. தேசிய அடையாள அட்டை இலக்கம்:
7. ஆண்/ பெண் தன்மை:
8. திருமணமானவர்/ திருமணமாகாதவர்:
9. கல்வித் தகைமை:
10. இணைவதற்கு எதிர்பார்க்கும் நிறுவனம்:
11. கற்பதற்கு எதிர்பார்க்கும் கற்கை:

| | |
|---|---|
| அடிப்படை | |
| இறுதிச் சான்றிதழ் | |

12. விடுதி வசதி தேவை/ தேவை இல்லை

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் சரியானது என உறுதி செய்கிறேன்

விண்ணப்பதாரரின் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் முதலாவது பரிபாலன சபைக் கூட்டம்-2022

மேற் கூறப்பட்ட ஆலயத்தில் 22.01.2022 அன்று முதலாவது பரிபாலன சபைக் கூட்டத்தில் பரிபாலன சபைத் தெரிவு இடம்பெற்றது.

**தலைவர்** - செல்லப்பா பாலசிங்கம்
**உப தலைவர்** - வைத்திலிங்கம் பரஞ்சோதி
**செயலாளர்** - இராமநாதன் தம்பையா
**உபசெயலாளர்** - காசிலிங்கம் சற்குணதேவன்
**பொருளாளர்** - சின்னத்தம்பி சிவயோகன்

**பரிபாலன சபை உறுப்பினர்கள்**
1) பாலசிங்கம் அருட்சோதி
2) வைத்திலிங்கம் சிவராசா
3) இராமலிங்கம் நவரட்ணராசா
4) சிவராசா மல்லிகா

இப் பரிபாலன சபைத் தெரிவின்பின் இவ்வாலயத்தின் முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**பரிபாலன சபை**
**வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்**
**சாவகச்சேரி.**

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19 . 05 . 1924



உதிர்வு 09 . 02 . 2015

திதி: அபரபட்ஷ ஷஷ்டி

### அமரர் திருமதி கந்தையா தங்கரத்தினம்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வரணியை வாழ்விடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்டவர்.


எங்கள் அன்புத் தெய்வமே அம்மா!
நீங்கள் இறைவனடி சென்று ஏழாவது ஆண்டுகள் ஆகியும்
உங்கள் சிரித்த முகத்தையும் உங்கள் நினைவுகளையும்
எங்களால் ஒரு நாள் கூட மறக்க முடியவில்லை.
அம்மா ! அன்பும், அறனும், பண்பும், பயனும் நிரம்பிய
உங்கள் இல்லற வாழ்வின் பயனாக எங்களைப் பெற்றெடுத்து
எங்களுக்கு அன்பு, அறிவு, பண்பு, பரிவு, ஈவு, இரக்கம், தெய்வபக்தி,
விருந்தோம்பல் போன்ற நற்குணங்களைச் சொல்லித்தந்து
தரணியிலே நாம் சீரோடும், சிறப்போடும் வாழ வழிகாட்டிய
எங்கள் அன்புத் தெய்வமே அம்மா நீங்கள்
நீங்கள் இன்றும் எங்களுடன் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்
எங்கள் உயிர் இருக்கும் வரை அம்மா உங்கள் நினைவு இருக்கும்
நீங்கள் தெய்வமாக இருந்து எல்லோரையும்
நல்லவர்களாக, வல்லவர்களாக வாழ வழிநடத்துவீர்களாக
அம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CS 1271) 1-6

உங்கள் பிரிவால் துயருறும்...
**குடும்பத்தினர்.**

தொடர்பு : 416 292 8592
416 816 9943

## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை பொன்னையா

உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கோப்பாய், பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பொன்னையா அவர்கள் நேற்று முன் தினம் (21.01.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சேதுப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அழகம்மா அவர்களின் அன்புக் கணவரும், செல்லத்துரை காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரேணுகா (பிரான்ஸ்), விஜிதா (அமெரிக்கா) வாகீசன் (ஆசிரியர், யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாமிகு தந்தையும், நேமிநாதன், பிரதீபன், பிரியதர்சினி (ஆசிரியர், யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுயம்பவன், மானதி, பிரவர்ணா, பிரவிஷ்ணா, பிரகலாதன், துஹிலன், மேகவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 206/4 பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

தகவல்:
**குடும்பத்தினர்**

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 . 03 . 1960



உதிர்வு 22 . 01 . 2014

### அமரர் சரஸ்வதி சிதம்பரநாதன் (பேபி அன்ரி)

(முன்னாள் முகாமைத்துவ உதவியாளர் - தேர்தல் திணைக்களம் சாவகச்சேரி - யாழ்ப்பாணம்)
திதி : அபரபக்க சஷ்டி 23.01.2022 ஞாயிற்றுக்கிழமை


வந்தவரெல்லாம் போவது உண்மை,
விதியென ஒன்று உண்டென அறிந்தோம்
இருந்தும் மனம் ஏற்குதில்லை நீங்கள் மறைந்து
எட்டாண்டுகள் ஆனதுவோ!
உங்களை நினைத்து தினம் தினம் நாங்கள் ஏங்கித்
தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக் கடந்தாலும்,
பேபி!
உங்களை எங்கள் உள்ளத்தில் வைத்துப் பூசிப்போம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்,

உங்கள் நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் தர்மகுலசிங்கம் சுரேஸ்

பிறப்பு 08.02.1986 — இறப்பு 24.12.2021

அன்பான சோதரனாய் அவனியிலே அவதரித்து
பண்போடு எமையெல்லாம் ஆதரித்த எம் உயிரே
மணக்கோலம் சூடியெமை மகிழ்வித்த உன்கணக்கு
மணமாலை வாடு முன்னே கனவாகி போனதுவே
தினம் தேடி அழுகின்றோம் எம் வாசல் வாராயோ
மாமா என்றழைக்க மகிழ்வோடு வந்தவரே
தேனாக பேசியெமை தெம்பூட்டி வளர்த்தவரே
விபத்தாக வந்த காலன் கவர்ந்தெங்கே சென்றானோ
விம்மி விம்மி அழுகின்றோம் விரைந்தோடி வாரீரோ
காலமெல்லாம் உம் நினைவை
சுமந்தபடி நாம் வாழ்வோம்.

நினைவுகளுடன்....
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## சின்னத்துரை மயில்வாகனம்

(ஓய்வுபெற்ற சுன்னாகம் ப.நோ.கூ.ச. லிகிதர்)

சுன்னாகம் பருத்திக்கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை மயில்வாகனம் நேற்று முன்தினம் (21.01.2022) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை தங்கம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான இராசையா கனகம்மா தம்பதிகளின் மருமகனும், குகனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், றமேஸ் கண்ணா (பிரான்ஸ்), சுரேஸ்பிரபுராம் (சுவிஸ்), கரிப்பிரசாத் (சுவிஸ்), கல்பனா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கார்த்திகா (பிரான்ஸ்), ஞானகலா (சுவிஸ்), சயந்தன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், மிதுஷா, வர்ஷா, ஜருஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2022) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியை கொத்தியாலடி இந்து மயானத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பருத்திக்கலட்டி,
சுன்னாகம்.

தகவல்
குடும்பத்தினர்
077 583 4631

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## செல்வரட்ணம் செல்வராசா

குமரக்கோட்டம் கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் செல்வராசா (ராசா உருத்திரா) கடந்த (21.01.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம் ஞானம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் கனகேஸ்வரி (கனகபூரணம்) அவர்களின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம், நகுலேஸ்வரி (கனடா), யோகேந்திரம் அருளானந்தம் (ஜேர்மனி), யோகராணி, சரோஜினிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ரஜீவன் (கனடா), நிரோசன் (வர்த்தகர்), நிசாந்தன் (வர்த்தகர்), தனுசன் (வர்த்தகர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிரோஜா (கனடா), லபிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், அஸ்விகா, அஸ்விகன், அனந்திதா ஆகியோரின் பாசமிகு பேரனும் பஞ்சலிங்கம், கனகலிங்கம், இராசலிங்கம், அமிர்தலிங்கம், சரஸ்வதி, மகாலிங்கம், இந்திராணி, காலஞ்சென்ற அழகராசா மற்றும் அன்னம்மா, மஞ்சுளாநிதி, சத்தியமூர்த்தி, சோமசுந்தரம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2022) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**ஈஞ்சடி,**
**சுதுமலை வடக்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 04 . 1941

மறைவு 22 . 01 . 2022



## கதிர்காமு மகாலிங்கம்

யாழ்.சாவகச்சேரி சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமு மகாலிங்கம் கடந்த 22.01.2022 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு- வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும் ரவீந்திரன் (லண்டன்) ரஜனி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அரச குமாரி பால்ராஜ் ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரசன்னா, பிறேமலோஜன், பிரியங்கா, அஞ்சலா, பகிதரன், பானுஜா, ரக் ஷகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் (24.01.2022) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ள வும்.

**மீனாட்சி அம்மன்**
**கோவில் வீதி,**
**சங்கத்தானை,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**ரவீந்திரன்**
**ரஜனி**
**(பிள்ளைகள்)**


## வேலையாட்கள் தேவை

யாழ். கொழும்பு சொகுசு பேரூந்து சேவையில் ஈடுபடும் A/C பஸ்சிற்கு நடத்துனர்கள் உடன் தேவை. அனுபவம் உள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் உடன் தொடர்பு கொள்ளவும்.

மேலதிக தகவல்களிற்கு: **076 0094 946**

## வேலையாட்கள் தேவை

யாழ். கொழும்பு சொகுசு பேரூந்து சேவையில் ஈடுபடும் A/C பஸ்சிற்கு நடத்துனர்கள் உடன் தேவை. அனுபவம் உள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் உடன் தொடர்பு கொள்ளவும்.

மேலதிக தகவல்களிற்கு: **076 0094 946**

## வாடகைக்கு உண்டு

இல.59, மானிப்பாய் வீதி, தாவடி (K.K.S வீதிக்கு அண்மையில்) வீடு வாடகைக்கு. உடனடியாக உண்டு.

தொடர்பு:- **077 9935 844**

## வேலையாட்கள் தேவை

Waiters, House Keeping ஆகிய வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
தொடர்புக்கு

**077 6681 840**

## தோட்ட வேலைக்கு ஆள் தேவை

யாழ். அச்சுவேலியில் உள்ள தோட்டத்திற்கு தண்ணிர் இறைத்தல் மருந்து அடித்தல் அனுபவம் உள்ளவர் மட்டும் (ஆண்) தேவை. தங்கி நின்று வேலை செய்வதற்கு உணவு தங்குமிடம் இலவசம். மாத சம்பளம் 45000/=

தொடர்பு: **077 6871 891**

(CS 1283) 1-6

## தேவை

வகுப்பு 2இல் கற்கும் பிள்ளைக்கு கற்பிக்க கூடிய A/L படித்த, ஓரளவு ஆங்கிலம் தெரிந்த யாழ் நகரும் / அண்மையிலும் வசிப்பவர்கள் விபவரங்களுடன் SMS மூலமாக அறியதரவும்

**077 557 4325**

## வணிக சொத்து தேவை

கீழ்குறிப்பிட்டுள்ள நகரங்களில் வணிக சொத்துகள் தேவைப்படுகின்றது.
அவை பிரதான வீதிக்கு முகப்பாகவும் நகர மத்தியிலிருந்து 2 கிலோமீற்றருக்குள்ளும் இருக்க வேண்டும். நிலப்பரப்பு 30 - 40 பேர்ச்சஸ் உடன் உறுதிப்படுத்திய காணி உறுதியையும் கொண்டிருக்க வேண்டும்.

அச்சுவேலி - சாவகச்சேரி
கொட்டாவை
களுவாஞ்சிக்குடி - நிட்டம்புவ
மானிப்பாய் - நாத்தாண்டி
புத்தளம் - வவுனியா
பதுளை

அழையுங்கள்: அலுவலக நேரத்தில் | 0777324425/0772553425


# மரண அறிவித்தல்



## பொன்னுச்சாமி இராசம்மா

யாழ். சாவகச்சேரி மீசாலை சப்பச்சிமாவடியைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி முழங்காவில் பல்லவராயன்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி இராசம்மா அவர்கள் 21.01.2022 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் வள்ளிபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னுச்சாமி அவர்களின் ஆருயிர் மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லதுரை, இராசம்மா, பாலச்சந்திரன் மற்றும் பரஞ்சோதி (அவுஸ்திரேலியா), இரத்தினம் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், சுகந்தி (கொலண்ட்), வசந்தி (இளைப்பாறிய உப அதிபர்-இலங்கை), சிறிதர் (லண்டன்), ஜெயந்தி (அதிபர் - கிளிநொச்சி மகா வித்தியாலயம் - இலங்கை), கலாநிதி மனோகர் (பீடாதிபதி, அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற சாந்தி ( தாதி - முழங்காவில் வைத்தியசாலை - இலங்கை), முருகதாஸ் (பிரான்ஸ்), சிவானந்தி (அதிபர் - ஜெயபுரம் மகா வித்தியாலயம்), ஆனந்தி (லண்டன்), வைத்திய கலாநிதி சிறிசங்கர் (வைத்தியர் - மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை), தமயந்தி (ஆசிரியை - முழங்காவில் ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலேந்திரன் (கொலண்ட்), நாகராசா (இலங்கை), கிருபாலினி (லண்டன்), தனபாலசிங்கம் (இலங்கை), பாலசதாமணி (அவுஸ்திரேலியா), கதிரவேலுபிள்ளை (இலங்கை), கல்பனா (பிரான்ஸ்), பரதன் (அதிபர் - நாச்சிகுடா அ.மு.க பாடசாலை), விஜயராசா (லண்டன்), அனுசா (வைத்திய அதிகாரி - கிழக்கு மாகாண பயிற்சி நிலையம்), சந்திரகுமார் (ஆசிரியர் - கிளி/கிராஞ்சி அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவராகா (இலங்கை), துவாரகா (சுவிஸ்), லதுசன், அனோஜன், அஜித்தா (லண்டன்), புருசோத் (இலங்கை), அனுயா நிதுர்சன் (அவுஸ்திரேலியா), விஸ்ணுகாந் (இலங்கை), கேமகாந் (லண்டன்), விமலகாந் (இலங்கை), அட்சயா, அஸ்விதா, ஆர்தியா (பிரான்ஸ்), கிதுசன், டிந்துசன், திகல்யா (இலங்கை), அபிநயா, ஜெய்சால் (லண்டன்), அருனோதன், சோபிரா, அகலவன், குஜிதன் (இலங்கை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அகரன் (இலங்கை), அவர்களின் அன்புப் பூட்டியும், கிரிதரன் (இலங்கை), அனுதரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2022) பி.ப 12.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முழங்காவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 1278) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி விநாயகபுரத்தில் 2020ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தி யடைந்த மாணவர்கள், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி ஆகியோரைக் கௌரவித்தலும் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது. (ரி1-113)



கோப்பாய் - இருபாலை கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில், புலம்பெயர் நாட்டில் வசிக்கும் திருச்செல்வம் மோகன்ராஜின் நிதிப் பங்களிப்பில், மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ய-ரி1-9)

## அடிக்கல் நடும் நிகழ்வு



கைதடி மேற்கு சன சமூக நிலையத்துக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு, கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில், பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் க.வாம தேவன் கலந்து கொண்டு அடிக்கல்லை நடுகை செய்தார். (ம-ரி1-159)

## மோட்டார்சைக்கிள் விபத்து நபரொருவருக்குக் காயம்!



யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று பேருந்துக்கு வழிவிட முயன்ற சமயம் சுமார் 15 அடி வெள்ள வாய்க்காலுக்குள் தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்றுக் காலை இந்த விபத்து இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளை செலுத்தியவரின் சாதுரியம் காரணமாக அவர் சிறு காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ம-27)

## ஆபத்தான கட்டத்தில் கொரோனா நிலைமை

### இராஜாங்க அமைச்சர் எச்சரிக்கை

கொரோனாத் தொற்று நிலைமை ஆபத்தை நோக்கிச் செல்கின்றது என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கொரோனா ஒழிப்பு இராஜாங்க அமைச்சர் மருத்துவர் சுதர்சினி பெர்னாண்புடோள்ளே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். மருத்துவமனைகளில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம்.

இந்த நிலைமைகளை சாதாரணமானதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. மக்கள் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றவேண்டும் என்று அவர் தெரிவித்தார். இதேவேளை, கொழும்பு லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையில் 40 சிறார்கள் கொரோனாத் தொற்றுடன் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று மருத்துவமனையின் பணிப்பாளர் டொக்டர் ஜீ.வீஜேசூரிய தெரிவித்துள்ளார். (எ-இ)


### வேலையாட்கள் தேவை

CCTV பொருத்துதல் வேலைக்காக அனுபவமுள்ளவர்கள் பயிற்சி பெற விரும்புபவர்கள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 2288 246, 071 156 2009

### வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள தொழிற்சாலைக்கு தகுதியான ஆய்வக வேதியியலாளரை எதிர்பார்க்கிறோம். விண்ணப்பதாரர் உயர்தரத்தில் வேதியியலில் தேர்ச்சி அல்லது டிப்ளோமா முடித்திருக்க வேண்டும். Edible Oil துறையில் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
விண்ணப்பிக்கவும் vacancyjaffna24@gmail.com
077 77 43578




லண்டன் ரத்தினம் நிதியத்தின் ஏற்பாட்டில், லண்டனில் வசிக்கும் சிவசிதம்பரநாதன் சிவகணேசனின் நிதிப்பங்களிப்பில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் திறன் வகுப்பறை திறந்து வைக்கப்பட்டது. (ய-ரி1)



வவுனியா ஓய்வூதியர் நலனுபாய சங்க கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு சங்கத்தின் வளாகத்தில் அண்மையில் சங்கத் தலைவர் எஸ்.கிறிஸ்தோபர் தலைமையில் இடம்பெற்றது. (ம-ரி1-110)


### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழி A-32 மெயின் றோட்டில் 1ஆம் வீதியில் 10 பரப்புக்காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
நாவற்குழி சந்தியிலிருந்து 300 m தூரம் வீடு அமைப்பதற்கு நல்ல சூழல்.
1 நிலப்பரப்பின் விலை 5 லட்சம்.
076 890 9259, 077 015 0353
(CS 12651) 1

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோயில் வடக்கு வீதியில் 20 பரப்புக் காணி 2 பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. நல்ல சூழல் வீடு அமைப்பதற்கு உகந்தது.
(நிலபரப்பு 24 அடிப்பாதையுடன்). பலாலி வீதியிலிருந்து 500m தூரம்
தொடர்பு: 077 6585 999
(CS 1256) 1-6

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A-9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக் கிணற்றடி அருகாமையில் நிலப்பரப்பு 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 14 அடி பாதையுடன் கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 M தூரம். பார்வையிடும் நேரம் : காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை.
தரகர் தேவையில்லை, விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 077 814 7389, 077 614 7333




நல்லூர் றோட்டரி செயற்றிட்டத்தினூடாக, கிளிநொச்சி - கனகாம்பிகைக்குளம் பக்கவாத பராமரிப்பு இல்லத்திலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு மதிய உணவு மற்றும் நன்கொடைப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ய-ரி1-159)

## வீரபத்திரர் வீதிக்கு பெயர்ப்பலகை



சாவகச்சேரி, ஜன. 23

சாவகச்சேரி பிரதேச சபையால் வீதிப் பெயர்ப் பலகை பொருத்தும் பணிகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன.

இதற்கமைய, வரணி இயற்றாலை வீரபத்திரர் வீதிக்கு பெயர்ப் பலகை பொருத்தப்பட்டுள்ளது.

மேலும், பெயர் பதிவு செய்யப்பட்ட வீதிகளுக்கு பெயர்ப் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளதாக பிரதேச சபையால் தெரிவிக்கப்பட்டது. (ஓ.ரி1,159)


### உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?
**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

### தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை
இந்த எண்ணெயைப்பாவித்து பயனடைய
CS 36443

### உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?
**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

கருமை நிறம் நீங்க வேண்டுமா?
077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிருப்தியில் ஜயசுந்தர

கொழும்பு, ஜன.23

தனது பிரியாவிடை நிகழ்வில் நடந்த சில சம்பவங்கள் காரணமாக ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர கடும் அதிருப்தியில் உள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு ஜனாதிபதி, பிரதமர் உட்பட அமைச்சர்கள் வருவார்கள் என ஜயசுந்தர எதிர்பார்த்துள்ளார் என்றும், ஆயினும் அவர்கள் எவரும் வரவில்லை என்ற காரணத்தால், அவர் அதிருப்தியில் உள்ளார் என்றும் கூறப்படுகிறது.

அதையடுத்து ஓய்வு பெற்ற பின்னர் அமைதியாக, ஓய்வு வாழ்க்கையை முன்னெடுக்க ஜயசுந்தர ஏற்கனவே எடுத்திருந்த முடிவை மாற்றிக்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அவர் ஊடகங்களுக்கு முன்னால் தோன்றி கடந்த கால இரகசியங்களை வெளியிடத் தீர்மானித்துள்ளார் என்றும் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

(எ-இ)

# வட்டுக்கோட்டை பகுதியில் மூதாட்டி சடலமாக மீட்பு

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொல்புரம் கிழக்கு பகுதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் மூதாட்டி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பூ.பூமதி (வயது 68) என்ற மூதாட்டியே சடலமாக மீட்கப்பட்டவர். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொல்புரம் கிழக்குப் பகுதியில் உள்ள பாவனையற்ற கிணற்றில் மூதாட்டி ஒருவரின் சடலம் இருப்பதனை அவதானித்த பிரதேசத்தவர்கள் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கியுள்ளனர். இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த வட்டுக்கோட்டை பொலிஸார் குறித்த சடலத்தை மீட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளையும் அவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

(ம-125)


## வியாபார நோக்குடனான வாடகைக் கட்டடம் உடன் தேவை

யாழ். நகரின் 5 km எல்லைக்குள் பிரதான வீதியை உள்ளடக்கிய 1500 சதுரடி முதல் 3000 சதுரடி வரை கொண்ட கட்டடம் தேவைப்படுகின்றது.

தொடர்பு: 077 477 3481 (CS 42393) 1-6

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி வடக்கில் தபால் நிலையம் அருகாமையில் 120 நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

1 பரப்பின் விலை - 120,000 (ஒருலட்சத்து இருபதாயிரம்)

மற்றும் 90 பரப்பு வயல்காணி விற்பனைக்கு உண்டு

1 பரப்பின் விலை - 50,000 (ஐம்பதாயிரம் ரூபா)

(கைதடி சந்தியிலிருந்து 2 km தூரம்)

தொடர்பு:

077 288 0152

077 911 6983

076 405 3965

## இலவச ஆங்கில, கணினி, சிங்கள வகுப்புக்கள் (DIRECT/ON-LINE)

பிரிவு - 35

- DIPLOMA IN ENGLISH / SPOKEN ENGLISH
- DIPLOMA IN ICT
- DIPLOMA IN SINHALA

ஆரம்பம்:29,30 /01/2022,10.00 AM

காலம் : 03 மாதங்கள் சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு:

✓ யாழ்ப்பாணம். பேராதனை தொலைக் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கலைப்பிரிவிற்கான அனைத்து பாட விரிவுரைகளும் (புதிய பாடத்திட்டம் - 2022) ஆரம்பமாகின்றன.

✓ பேராதனை பல்கலைக்கழக தொலைக்கல்வி நிகழ்ச்சி திட்டம் - கலைப்பிரிவிற்கான பதிவுகள் - 2022 செய்து தரப்படும்.

IPS திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

T.P: 021 434 0229 / 0766852529/ 077 465 2439

## தென்னந்தோட்டங்கள் விற்பனைக்குண்டு

எழுதுமட்டுவாழ் A-9 வீதியிலிருந்து 3/4 km தூரத்தில் 12 1/2 ஏக்கர், 16 ஏக்கர், 28 ஏக்கர் காணிகள் விற்பனைக்கு உண்டு.

077 653 1980, 074 037 1960

## வீடு வாடகைக்கு

கொக்குவில் கோணவளை வீதியில் யாழ். மருத்துவபீடத்தில் இருந்து 100 m தூரத்தில் அமைந்திருக்கும் சகல வசதிகளுடன் கூடிய 4 அறைகள் (1 ஆம் மாடியில்)

யாழ்.பல்கலைக்கழக மாணவருக்கு வாடகைக்கு விடப்படும். ஆண் மாணவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

வாடகை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

076 575 8370, 021 221 2918


## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 1948 . 12 . 12



உதிர்வு 2022 . 01 . 20

எமது பாடசாலையின் ஆரம்பக் கல்வி ஆங்கில ஆசிரியை **திருமதி தயானந்தன் சிவாஜினி** அவர்களின் பாசமிகு தாயார்.

**திருமதி எதிர்வீரசிங்கம் புனிதவதி**

அவர்கள் 20.01.2022 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்

யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

**சின்னவன் மெய்யழகன்**

தோற்றம் 1959.11.04 மறைவு 20.01.2022

காற்றில் வந்த செய்தி கேட்டு
கவலை மிகவுற்றேன்
கதறி அழுதேன்- அப்பா
எப்படி உன் பிரிவை
நாங்களும் தாங்குவது
என் அப்பா...!

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி அமிர்தலிங்கம் மங்கையர்க்கரசி



மலேசியாவை பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் தற்போது மட்டக்களப்பை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி அமிர்தலிங்கம் மங்கையர்க்கரசி நேற்று (22.01.2022) சனிக்கிழமை மட்டக்களப்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டக்களப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


077 0054323

0091 9869056189

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 09 1955



மறைவு 20 01 2022

அமரர் திரு.

**சிவபாதசுந்தரம் கணேசன்**

யாழ். மயிலிட்டி வடக்கை பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட, ஓய்வுபெற்ற படவரைஞ்ஞர் (CECB) திரு. சிவபாதசுந்தரம் கணேசன் அவர்கள் 20-01-2022 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அன்னார், காலஞ்சென்ற திரு, திருமதி. சிவபாதசுந்தரம் பரமேஸ்வரி தம்பதிகளின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற கந்தையா (இருபாலை) மற்றும் கந்தையா வேதநாயகியினுடைய இளைய புத்திரி விமலநாயகி (ஓய்வுபெற்ற உப. அதிபர் - சைவ மங்கையர் வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், கொட்டாஞ்சேனை NTB வங்கியின் உத்தியோகத்தர் ஐங்கரன் அவர்களின் பாசமிகு தந்தையும், மற்றும், மரகதவல்லி, சண்முகானந்தன், விஜயலட்சுமி, சதானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாருடைய இறுதிக்கிரிகைகள் 23.01.2022 ஞாயிற்றுக்கிழமை கல்கிஸ்சை மகிந்த மலர்ச்சாலையில் காலை 9 மணி தொடக்கம் 10.30 மணிவரை இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்

மனைவி ( விமலநாயகி ) : 077 941 5319

மகன் ( ஐங்கரன் ) : 077 519 3896

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அரசியல் தீர்வை...

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட தமிழ்க் கட்சிகள் காரசாரமாக விமர்சித்துள்ளன. இவ்வாறானதொரு நிலையில் கூட்டமைப்புடனான ஜனாதிபதியின் பேச்சு முன்னெடுக்கப்படுமா என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச விடம் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, திறந்த மனதுடன் தமிழர் தரப்புடன் பேச்சு நடத்த ஜனாதிபதி தலைமையிலான அரசு தயார் நிலையில் உள்ளது. அந்தப் பேச்சு விரைவில் ஆரம்பிக்கப்படும். அரசியல் தீர்வு மாத்திரம் தமிழ் மக்களின் பிரச்சினை அல்ல. அதைவிட அவர்களின் அத்தியாவசிய தேவைகளே முக்கியம். எனவே, முதலில் அத்தியாவசிய தேவைகளுக்கு அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். இது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் திட்டமாக உள்ளது. இவற்றுக்கு முதலில் தீர்வு கண்டால் அரசியல் பிரச்சினைக்கு இலகுவில் தீர்வு காணமுடியும்.

வடக்கு- கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபட வேண்டும். நாட்டைப் பிளவுபடுத்தி இனவாத ரீதியில் செயற்பட அவர்கள் முற்படக்கூடாது.

நாட்டை முன்னகர்த்தும் செயற்பாடுகளுக்குத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அரசுக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்-என்றார். (ஒ-5,22)

### குழப்ப...

முடிவெடுப்போம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையை காட்டமாக விமர்சித்துள்ள நிலையில், ஜனாதிபதியுடனான பேச்சுக்களில் கூட்டமைப்பு சர்வதேச மத்தியஸ்தத்துடனா பங்கேற்கும்? என எழுப்பப்பட்ட கேள்விக்கே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கடந்த 18ஆம் திகதி ஆற்றிய கொள்கை விளக்க உரை நாட்டு மக்களை ஏமாற்றும் விதத்திலேயே அமைந்துள்ளது. பல்லாண்டு காலமாகத் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வு தொடர்பில் அவர் வாயே திறக்கவில்லை. இந்நிலையில், அவர் தலைமையிலான அரசு எம்மைப் பேச்சு மேசைக்கு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்தால் அதில் நாம் பங்கேற்பதா அல்லது சர்வதேச மத்தியஸ்தத்துடன் பங்கேற்பதா என்று மிகவும் கவனமாகப் பரிசீலித்து முடிவெடுப்போம். ஏனெனில், இந்தக் கருமம் மிகவும் முக்கியமானது. நாம் எதனையும் குழப்பவும் விரும்பமாட்டோம்; அதேவேளை ஏமாறவும் தயாராக இருக்கமாட்டோம்-என்றார். (ஒ-5,22)

### இலங்கையிலுள்ள...

பறிமுதல் செய்யப்பட்டு இப்போது பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள தமிழகத்தைச் சேர்ந்த 125 படகுகளின் உரிமையாளர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, 108 விசைப் படகு உரிமையாளர்களுக்கு தலா 5 இலட்சம் ரூபாவும், 17 நாட்டுப் படகு உரிமையாளர்களுக்கு தலா ஒன்றரை இலட்சம் ரூபாவும் என மொத்தமாக 5 கோடியே 66 இலட்சம் ரூபா வழங்கப்படும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். (ஒ-இ)

### 13ஆம்...

ரண்டு வருமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் யாழ். நகரில் துண்டறிக்கை விநியோகித்தனர். எதிர்வரும் 30ஆம் திகதி முன்னெடுக்கவுள்ள போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் இந்தத் துண்டறிக்கையை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அந்தக் கட்சியின் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் இணைந்து விநியோகித்தனர். (ஒ-20,27)

### வடக்கு...

சவுக்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பௌத்த ஆலோசனைச் சபையின் 12ஆவது கூட்டத்திலேயே மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. மேலும், ஜனாதிபதி மீது வைத்த நம்பிக்கை வீண்போகவில்லை என்றும் பௌத்த மஹா சங்கத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஒ-இ)

### செவ்வாய்வரை....

அவசியம் இல்லை என மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார். மின்னுற்பத்திக்குத் தேவையான எரிபொருள் உள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே, நுரைச்சோலை அனல் மின்னுற்பத்தி நிலையத்தில் செயலிழந்துள்ள மின் பிறப்பாக்கியை எதிர்வரும் 25 ஆம் திகதிக்குள் சீர்செய்ய முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார். (ஒ-இ)

### தொடரும்...

துள்ள வீட்டில் தண்ணீர் கொதிக்க வைத்துக்கொண்டிருந்த சமயத்தில் காஸ் அடுப்பு வெடித்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். வீட்டார் காஸ் சிலிண்டரை பாதுகாப்பாக அகற்றி மேலதிக இடர் ஏற்படுவதைத் தடுத்துள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். (ஒ-110)

### மேலும்...

டுள்ளனர் என்று ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு, ஒவ்வாமை மற்றும் மூலக்கூறு பிரிவின் பிரதானி மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார். (ஒ-22)

# மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அறிக்கையால் இலங்கை அரசு கவலை

கொழும்பு, ஜன. 23

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் 'உலக அறிக்கை 2022' இல் இலங்கையின் தற்போதைய மனித உரிமைகள் நிலைமையை மிகைபடுத்தி மற்றும் தேவையற்ற எதிர்மறையான வகையில் சித்திரிப்பதாக வெளிவிவகார அமைச்சு கவலை வெளியிட்டுள்ளது.

மனித உரிமைகள் தொடர்பான விடயங்களில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட சர்வதேச சமூகத்துடன், ஆக்கபூர்வமாக ஈடுபடுவதற்கான கொள்கையை இலங்கை பின்பற்றுவதாக, வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சவாலான உலகளாவிய பொருளாதார மற்றும் சமூக சூழலின் போது, பரபரப்பான மற்றும் பக்கச்சார்பான அறிக்கையிடல் உள்நாட்டு முரண்பாடுகளை தீவிரப்படுத்தி மோசமான நிலைமையைத் தோற்றுவிக்கும் என, வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பொறுப்பான, சமநிலையான மற்றும் பாரபட்சமற்ற அறிக்கையிடலின் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்துவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. பயங்கரவாத தடைச் சட்டத்திலான திருத்தம், பொறுப்புக்கூறல், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதிகளை விடுவித்தல், ஒன்று கூடுவதற்கான சுதந்திரம், கொவிட் தொற்றுநோய் மற்றும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் போன்ற பல துறைகள் தொடர்பான அண்மைய மாதங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை முன்னிலைப்படுத்துவதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சர்வதேச செயற்பாட்டாளர்களைப் பொறுத்தமட்டில், எமது சர்வதேச பங்காளிகளான ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உள்ளூர் மற்றும் சர்வதேசத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் நல்லெண்ணம் மற்றும் ஆலோசனைகளை அரசு பெரிதும் மதிப்பதாகவும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஒ-இ)

# டயானா எம்.பிக்கு புத்திக் குறைபாடு

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி சாட்டை

கொழும்பு, ஜன. 23

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை மேலும் இருவருடங்களுக்கு நீடிக்கவேண்டும் என்ற யோசனையை முன்வைத்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகேவுக்கு ஏதேனும் புத்திக்குறைபாடு இருக்கக்கூடும் என்றே நான் கருதுகின்றேன். அவர் எத்தகைய கருத்துக்களை வெளியிட்டாலும் ஜனாதிபதி தனது பதவிக்காலத்தை நீடித்துக் கொள்ளவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பது போல் தெரியவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



கொரோனா வைரஸ் தொற்றுப்பரவல் காரணமாக நாட்டு மக்களுக்கு சேவையாற்ற முடியாதுபோன இரு வருடகாலத்தை மீண்டும் பெற்றுக் கொடுக்கும் வகையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலத்தைப் பயன்படுத்தி, ஜனாதிபதியின் பதவிக்காலத்தையும் நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தையும் மேலும் இருவருடங்களுக்கு நீடிக்க வேண்டும் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் டயனா கமகே சபையில் யோசனையொன்றை முன்வைத்தார்.

இதுகுறித்து மைத்திரிபால மேலும் கூறியதாவது, எமது நாட்டின் வரலாற்றைப் பொறுத்தமட்டில் இதற்கு முன்னரொருபோதும் ஜனாதிபதியின் பதவிக்காலம் நீடிக்கப்படவில்லை. நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடித்ததால் ஜே.ஆர்.ஜெயவர்தனவுக்கு என்ன நேர்ந்தது என்பது அனைவருக்கும் தெரியும். நான் ஜனாதிபதியாக இருந்தபோது எனது பதவிக் காலத்தைக் குறைத்துக் கொண்டேன். அந்தவகையில் வேறு எந்தவொரு ஜனாதிபதியும் தமது பதவிக்காலத்தை மீண்டும் அதிகரித்துக்கொள்வதற்கு முற்படுவார்கள் என்று நான் கருதவில்லை, -என்றார். (ஒ-இ)

# கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்களைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஜன. 23

வல்வெட்டித்துறையிலிருந்து மீன்பிடிக்க சென்ற இரண்டு மீனவர்கள் கரை திரும்பவில்லையென உறவினர்கள் தெரிவித்துள்ளனர். நேற்றுமுன்தினம் மதியம் மீன்பிடிக்கச் சென்ற இருவரும், நேற்று அதிகாலை கரை திரும்பியிருக்க வேண்டும். எனினும், அவர்கள் கரை திரும்பவில்லை.

வெள்ளை நிறப் படகில் மீன்பிடிக்க சென்ற வல்வெட்டித்துறை மீனாட்சியம்மன் கோயிலடியை சேர்ந்த சுந்தரலிங்கம் கங்காரூபன் (வயது 38), தவராசா சுதர்சன் (வயது 41) ஆகிய இருவருமே காணாமல் போயுள்ளனர்.

இது குறித்து வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை தர்மகுலசிங்கம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தர்மகுலசிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (21.01.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கணபதிப்பிள்ளை சொர்ணம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி பாலசிங்கம் இரத்தினம்மாவின் மருமகனும், கௌரிநாயகியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் கமலேஸ்வரியின் அன்புச் சகோதரனும், கேதீஸ்வரன், சிவஅன்பு ஆகியோரின் மைத்துனரும், சிவரூபினி (லண்டன்), குகரூபன், பவதாரணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுரேஸ்கரன் (லோகன் - லண்டன்), மதுவந்தி, சுதர்சன் (எடிசன - லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சந்தோஸ், சகிந், அனன்யா, சாய்ஜிஸ்வி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**077 952 7559**
**021 222 9389**

தகவல்
**குடும்பத்தினர்**
**குகன் (மகன்)**

(CS 42389 ) (3/6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 21 . 03 . 1933



இறப்பு 21 . 01 . 2022

## திருமதி யோகாம்பிகை விஜயகுலசிங்கம்

(ஓய்வுநிலை ஆசிரியர், தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி, தெல்லிப்பழை)

தெல்லிப்பழையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி யோகாம்பிகை விஜயகுலசிங்கம் நேற்றுமுன்தினம் (21.01.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் - நல்லம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற விஜயகுலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சிவபாலன் (மக்கள் வங்கி, யாழ் பிரதான வீதி கிளை) அவர்களின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற அமிர்தாம்பிகை, சுகிர்தாம்பிகை, சண்முகதாசன், சந்திரசேகரன் மற்றும் பத்மநாதன் (ஜேர்மனி), கெம்பீரநாயகி (கமலா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவரூபியின் (ஆசிரியர், ஞானபண்டிதா பாடசாலை, கொக்குவில்), அன்பு மாமியாரும் மற்றும் கெனிசா, தர்சித் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாழ். மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள "இன்பம் அந்தியகாலச் சேவை" நிலையத்தில் இன்று (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
**வி.சிவபாலன் (மகன்)**
**077 760 6673**

CS 42395 ) (2.6)

# மரண அறிவித்தல்



## சித்திராதேவி நடேசன்

மட்டுவிலை பிறப்பிடமாகவும் கனகசபை வீதி, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட சித்திராதேவி நடேசன் நேற்று (22.01.2022) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாமிநாதன் மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தன் - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகளும், நடேசனின் (பூவா - மயூரா தச்சுத் தொழிற்சாலை - மானிப்பாய்) அன்பு மனைவியும், கவிதா, எடிசன், குமுதா, மயூரன், அனோஜா, மயூரி, காலஞ்சென்ற நியூட்டன் மற்றும் டெனிஸ், நியூரா ஆகியோரின் பாசமிகு தாயாரும், கமிலஸ், அஜந்தி, தேவகுமார், கஜேந்தினி, கவீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், இந்திராதேவி, சாரதாதேவி, மல்லிகாதேவி, சுகந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகம்மா, நாகேசன், மயில்வாகனம், சின்னத்தம்பி, காலஞ்சென்ற கண்மணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், அனற்கியூறி, ஒசேனா, ஜன்ஸ்ரீன், போல் பிரவீன், எடின், அஸ்வின், அக்ஷயன், அகரன், பிறையன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (23.01.2022) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**குடும்பத்தினர் (மகன்)**
**ந. எடிசன் - 077 344 8741**
**ந.மயூரன் - 077 718 9879**
**ந.டெனிஸ் - 077 656 7883**

(CS 1262) (2.6)

# மரண அறிவித்தல்

மலர்வு 22 . 07 . 1926



உதிர்வு 20 . 01 . 2022

## கணபதிப்பிள்ளை கனகரத்தினம்

அல்வாய் ஓடையைப் பிறப்பிடமாகவும், மாலிசந்தி, வதிரி வங்களாவையும், மஸ்கெலியாவையும் வதிவிடமாகவும் கொண்டு வாழ்ந்த கணபதிப்பிள்ளை கனகரத்தினம் அவர்கள் 20.01.2022 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், பறுபதம் அவர்களின் அன்புக் கணவரும், குலப்பிரகாசம் (கனடா), சுந்தரேஸ்வரி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், பாரதி, சிவசிதம்பரம், கௌரிசங்கர் ஆகியோரின் அன்பு மாமனாரும், சின்னம்மா, சகுந்தலாதேவி, தருமலிங்கம், மண்டலேசுவரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரியா, பிருந்தா, பிரியாகரன் (கனடா), அனித்தா,அனோஜா, அகிலா, அஜித்தா, மிதுலன், ஜெசீகரன், வர்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும், வள்ளிநாயகி, பொன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் வதிரி ஆலங்கட்டை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**க.குலப்பிரகாசம் (மகன்)**
**076 444 5969**

ne 17846) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

உடுவில் பொது வாசிகசாலை. பிரதேச செயலகம் ஆகிய இடங்களிற்கு மிகவும் அருகாமையில் (50m தூரத்தில்) 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (CS 42388) (3/6)

Sam Deluxan Jesujeyaselan
**+ 94 77 227 6563**

## வேலைவாய்ப்பு

கொழும்பை தலைமையிடமாக கொண்ட சோலர் நிறுவனத்தின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்துக்கு குறைந்தபட்சம் அடிப்படை மின்னியல் தகைமை அல்லது அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.
30 வயதுக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

Haran: Anoh:
**077 339 2695, 077 376 7952, 076 443 7415**

## விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள். அலுமினியம் Glass Fitting உடனான கணினி அறை. தொட்டில். Gym Machine, சிறுவர் விளையட்டு பொருள்கள். மறி ஆடு விற்பனைக்குண்டு.

**077 687 3133, 070 640 1733**

## மணமகன்கள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம். 1990. பூர நட்சத்திர Chemial Engineer, M.Sc.படிப்பு முடித்த U.S.A Citizen மகளுக்கும் 1992. மக நட்சத்திர Civil Engineer, M.Sc.படிப்பு முடித்த U.S.A Citizen மகளுக்கும் பெற்றோர் Engineer, மணமகன்களை எதிர்பார்க்கின்றனர். அமெரிக்கா அல்லது கனடாவில் M.Sc.அல்லது Phd படித்துக்கொண்டிருக்கும் Engineer மணமகன்கள் அல்லது அமெரிக்காவில் M.Sc.அல்லது Phd படிக்க விரும்பும் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் படித்த பொறியியல் மணமகன்களும் விரும்பப்படுவர்.
1 - 3 வருட வயது வித்தியாசம் இருப்பது விரும்பத்தக்கது.

தொடர்பு: **+ 1585 766 4511**
**+ 1585 766 4519**
**Whatsapp/Viber** (cs.1166)(2.6)

## பணிப்பெண் தேவை

யாழ். கோண்டாவிலில் வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.
தொடர்பு:- **077 4804239**

## தேவை

வீட்டுவேலை மற்றும் முதியோர் பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்பாளர்கள் மலையகம் மற்றும் கொழும்பை அண்டியவர்கள் தேவை. வேலை அனுபவமுள்ளவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

**074 055 5922**

## சேவை

முதியோர் பராமரிப்பு மற்றும் வீட்டு வேலைக்கு எம்மிடம் அனுபவம் உள்ளவர்கள் உள்ளனர்.
(கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம்)

**074 055 5922**

## மணமகள் தேவை

1976 மகம் 1 ஆம் பாதம் யாழ். இந்து கௌரவ குடும்பம் பட்டதாரி அரச தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் உடன் தேவை. சீதனம் எதிர்பார்ப்பு இல்லை.

**077 902 0669**

## பணிப்பெண் தேவை

கொழும்பில் (மொறட்டுவ) தமிழ் வீடொன்றில் தங்கியிருந்து வீட்டுவேலை மற்றும் குழந்தையை பராமரிக்க பொறுப்பான பெண் தேவை. உணவும். தங்குவதற்கு அறையும் வழங்கப்படும்.
சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம். (cs 6130) (2.6)

**077 728 6174**

## காணி விற்பனைக்கு

10 பரப்பு "தென்னம் காணி. நுணாவில் குளம் முருகன் கோவிலுக்கு அருகாமையில் விற்பனைக்கு உண்டு. A-9 வீதியில் இருந்து 300 மீ தொலைவில் உள்ளது.

தொடர்புகளுக்கு: **077 476 0506**

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 45 ரூபா

**077 334 1281**

## தேவை

காணிகள் தேவை உடனடி காசு கொடுத்து வாங்கப்படும் உறுதிக்காணி விரும்பத்தக்கது வீடு அல்லது தோட்டக்காணி மிகவும் உகந்தது.

**077 522 2613**

## தேவை

விற்பனை பிரதிநிதி (பெண்)
அனுபவமுள்ளவர்
தேவை.

**074 055 5922**

## விற்பனைக்கு

காங்கேசன்துறை கீரிமலை வீதியில் 6 பரப்பு 8.0 குழி நிலம் விற்பனைக்குண்டு. தையிட்டியில் 7 பரப்பு 6.3 குழி நிலம் விற்பனைக்குண்டு. (cs 37412) (2.6)

**075 565 7595**

## தேவை

கிளிநொச்சியில் இயங்கும் ஹாட்வெயர் கடைக்கு கணக்காளர் அனுபவமுள்ளவர்கள் தேவை. (CS 42383) (3/6)

**070 640 6905, 077 541 3064**

## சிறுநீரகம் தேவை

45 வயதுடைய ஆண் ஒருவருக்கு A+/O+ இன வகையினை சேர்ந்த சிறுநீரகம் தேவை. தகுந்த உடற்றகுதி உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும். தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள். (cs 1192) (2.6)

**077 706 1237, 077 869 4518**

## மேல் வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் சந்திக்கு அருகில் 5 அறை, 1 சமையல் அறை, 2 குளியல் அறை நவீனவசதிகளுடன் வாடகைக்குவிடப்படும்.

**077 140 3024**

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வர்த்தக நிலையத்துக்கு Computer Billing செய்வதற்கு முழுநேர (பெண்கள்) மற்றும் பகுதி நேர (ஆண்கள்) வேலையாள்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும். (cs 42391) (2.6)

இல.424, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
**077 419 5015**

## வீடு வாடகைக்கு

- Mt Lavania வில் 7 ஆம் மாடி Seaview தளபாட மற்ற புதிய 2 அறைகள். 2 குளியலறை கொண்ட தொடர்மாடி நீண்டகாலம் வாடகைக் குண்டு மாதம் - 80.000/-
- பம்பலப்பிட்டி Kingross Avenue வில் 7ஆம் மாடி 2000 SQ.Ft. தளபாடம்றற 3 Rooms (Air Conditions), 3 குளியலறைகளைக் கொண்ட தொடர்மாடி Seaview உடன் நீண்டகால வாடகைக்குண்டு. மாதம் - 145.000/-
- இராஜசிங்க றோட்டில் 3 அறைகளைக் கொண்ட தளபாடமற்ற 1400 சதுர அடி. நீண்டகால வாடகைக் குண்டு. சகல தளபாடங்களுடன் மாதம் 95.000/- மேலும் குறுகியகால, நீண்டகால வாடகைக்கு கொடுக்கப்படும். (cs 37413) (2.6)

Eun Homes Shiva **077 777 8806**

## RECOVERY OFFICER காலிடங்கள்

O/L க.பொ.த தேர்ச்சி பெற்ற: 55 வயதை விட குறைந்த. மோட்டார் சைக்கிள் /சாரதி அனுமதிப்பதிரம் உள்ளவராக இருத்தல் வேண்டும். மாதத்திற்கு ரூ. 50, 000/- சம்பளத்தோடு சிங்களம் பேச தெரிந்தவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் யாழ்ப்பாணம் பிரதேசத்தில் உள்ளது. (cs 37404) (2.6)

தொலைபேசி இல.
**070 331 7054** (ஜயரத்ன சேகர)
**070 331 6996** (நிஷாந்த)

---

உ
அம்பாள் துணை



யாழ்ப்பாணம் அரியாலை வெட்டுக்குளம்

# அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான

நூதன பஞ்சதள இராஜகோபுர சகித புனராவர்த்தன அஷ்டபந்தன சமர்ப்பண நவகுண்ட பக்ஷ பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேகம் - 2022

**அம்பிகை அடியவர்களே!**

இந்து சமுத்திரத்தின் முத்தெனவும் பஞ்ச ஈச்சரங்களை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றதால் சிவபூமி என வியந்து போற்றப்படுவதுமான இலங்காபுரியின் வடபால், சைவ தமிழ் பாரம்பரியம் மிளர்கின்ற யாழ்ப்பாண மாநகரத்தில் சங்கிலிய மன்னனின் இராச்சியத்தின் தலை நகரமாக விளங்கிய நல்லூர் நகரின் அண்மையில் கல்விமான்களும் பண்பாளர்களும், சமய விழுமியங்கள் மிளிர்கின்ற அறிஞர்களும் செறிந்து வாழுகின்ற அரியாலை வெட்டுக்குள பதியில் எழுந்தருளி அருளாட்சி செய்கின்ற ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டும் வானளாவ உயர்ந்து கம்பீர பொலிவோடு அழகுற புதிதாய் அமையப்பெற்ற பஞ்சதள இராஜ கோபுரத்திற்கும், புவனேஸ்வரி அம்பாளிற்கும் விநாயகர் முதலிய ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நிகழுகின்ற மங்கள பிலவ வருடம் உத்தராயண உத்தம காலம் தைத் திங்கள் 10 ஆம் நாள் (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை அத்த நட்சத்திரமும் அமிர்தயோகமும் கூடிய பகல் 10.32 மணி முதல் 11.22 மணி வரையுள்ள மீனலக்கின சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற அம்பிகையின் திருவருள் கைகூடியிருப்பதால் அடியவர்கள் அனைவரும் கும்பாபிஷேகத்திலும் அதன் முன். பின். நடைபெறுகின்ற கிரியைகளிலும் ஆசாரசீலர்களாக கலந்து கொண்டு அம்பிகையின் திருவரளை பெற்றுய்யும் வண்ணம் அன்போடு அழைக்கின்றோம்.

**பிரதிஷ்டா பிரதம குரு**
ஆகம வித்தகர் கிரிஜாகால சிரோண்மணி
**சிவஸ்ரீ சீதாஸ்ரீ சாரங்கக் குருக்கள்**
(இருபாலை)

**வர்ண வேலை**
**விஸ்வப் பிரம்மஸ்ரீ செல்லையா செல்வதாஸ்**
(ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஓவிய கலையகம்)
திருநெல்வேலி

**விளம்பர அனுசரணை**

மஹா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்

உலகத் தரம் வாய்ந்த முதல்த்தர வர்ணப்பூச்சு
**NIPPON PAINT LANKA (PVT) LTD.**
Tel : + 94 11 - 4600400
Fax : + 94 11 - 4600409
Mobile : + 94 77 3140409
Email : gomasr@inpponpaint.comlk
No.69A, Buthgamuwa Road,
Rajagiriya
A MEMBER OF THE NIPSEA GROUP
www.nipponpaint.com.lk

உலகத் தரம் வாய்ந்த முதல்த்தர வர்ணப்பூச்சு
**Devika Paints**
**தேவிகா பெயின்ஸ்**
No.43, Point Pedro Road,
Kopay Junction
T.P : 021 223 2389
077 381 5146

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org